VELS

INSTITUTE OF SCIENCE, TECHNOLOGY & ADVANCED STUDIES (VISTAS)
(Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)
PALLAVARAM, THALAMBUR, PERIYAPALAYAM, THIRUVANMIYUR - CHENNAI

தமிழ் மொழிப்பாட நூல்

மூன்றாம் பருவம்

Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS)

Velan Nagar, P.V. Vaithiyalingam Road, Pallavaram, Chennai - 600 117, Tamil Nadu, India

Deemed to be University Estd. u/s 3 of the UGC Act, 1956)

ACCREDITED BY NAAC WITH A GRADE Marching Beyond 30 Years Successfully

பாடத்திட்ட வடிவமைப்பு வல்லுநர் குழு

பேராசிரியர் வெ. சிவசங்கர்,
தமிழ்த்துறைத் தலைவர்,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை-117.

முனைவர் க.கமலா
பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை-117.

முனைவர் பெ.மோகன்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை-117

பாட ஒருங்கிணைப்பாளர்

முனைவர்அ.இருதயராஜ்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை-117.

பாட தயாரிப்பு குழு

முனைவர்அ.இருதயராஜ்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை- 117.
(பிரிவு 1 முதல் பிரிவு 12 வரை)

மொழித்திருத்தம்
முனைவர் பொ.குபேந்திரன்,
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம்,
சென்னை.-117.

பிரிவு - பதிப்பாசிரியர்.
முனைவர் ,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
விஸ்டாஸ், பல்லாவரம், சென்னை.-
117.

செயலக உதவியாளர்

திரு. வி. குமார்,
பிரிவு அலுவலர்,
இணையவழிக் கற்றல் மையம்,
பல்லாவரம், சென்னை 117.

ISBN : **978-93-342-6775-4**

பதிப்பு

முதல் பதிப்பு 20/01/2026

Detailed Syllabus-Online (OL)

Programme	:	B.B.A
Year/Semester	:	Second Year / Third Semester
Course Title	:	Tamil – III
Course Code	:	OTAML-31
No. of Credits	:	2

பாடத்திட்ட நோக்கம்:

மாணவர்களின் இலக்கிய நாட்டத்தை மேம்படுத்துதல், கற்பனைத்திறனைத் தூண்டி படைப்பாளியாக உருவாக்கல், மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்தும் வகையில் எழுதுதிறன் என்னும் பகுதியில் கலைச்சொல்லாக்கம், கடிதம் என்பனவற்றை அறியச் செய்தல், பேச்சுக்கலை பற்றிய அறிமுகம் என்று மேற்கண்டவழி மாணவர்களை அறிவியல் மற்றும் நடைமுறைத் தமிழை அறியச் செய்தல் இப்பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

தொகுதி-1: சிற்றிலக்கியம்

நந்திக்கலம்பகம் - உரைவரம் பிகந்த உயர்புகழ்ப் பல்லவன், வானுறுமதியை அடைந்தது உன்வதனம்

தமிழ்விடு தூது – 10 கண்ணிகள்

திருக்குற்றாலக் குறவஞ்சி – மலைவளம் கூறுதல் – முதல் 5 பாடல்கள்

கலிங்கத்துப் பரணி – பாலை பாடியது – முதல் 5 பாடல்கள்

தொகுதி-2: சிறுகதை

அறிஞர் அண்ணா - செவ்வாழை

புதுமைப்பித்தன் - கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

கி.ராஜநாராயணன் - கதவு

தொகுதி-3: **எழுதுதிறன்**

கலைச்சொல்லாக்கம் - தேவைகள் - கலைச்சொற்களின் பண்புகள் - கலைச்சொல்லாக்கத்தில் தவிர்க்க வேண்டியவை - அறிவியல் கலைச்சொற்கள். கடிதம் - வகைகள் - அலுவலகக் கடிதங்கள் - பயிற்சி - அறிஞர்களின் கடிதங்கள் - கடிதங்களின் வழி கற்பித்தல் - சில அறிஞர்களின் கடிதங்கள் - நேரு...,

தொகுதி-4: பேச்சுக் கலை

பேச்சுத் திறன் – விளக்கம் – பேச்சுத்திறனின் அடிப்படைகள் – வகைகள் – மேடைப்பேச்சு – உரையாடல் – பயிற்சிகள்

கற்றலின் விளைவுகள்:

COC1: மாணவர்களுக்குத் தமிழ் இலக்கியத்தின் மீது ஆர்வத்தை ஏற்படுத்தல்.

COC2: மாணவர்களிடம் கற்பனைத் திறனைத் தூண்டி படைப்பாளியாக உருவாதல் .

COC3: மாணவர்களின் சிந்தனைத் திறனை வளர்த்தல்

COC4: மாணவர்களின் பேச்சுக்கலையைச் செம்மையாக்கல்

பார்வை நூல்கள்

1. **தமிழ் இலக்கிய வரலாறு**, மு.வரதராசன், சாகித்திய அக்காதெமி, புது தில்லி. **பதிப்பு** 2002.
2. **நந்திக்கலம்பகம் மூலமும் உரையும்**, சாரதா பதிப்பகம், சென்னை.
3. **தமிழ்விடு தூது,** டாக்டர் சரவணன், சந்தியா பதிப்பகம், சென்னை.
4. **திருக்குற்றாலக் குறவஞ்சி**, திரிகூடராசப்பக்கவிராயர், யாழ்வெளியீடு, சென்னை.
5. **கலிங்கத்துப் பரணி,** புலியூர்க் கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை.
6. **செவ்வாழை**, அறிஞர் அண்ணா, பூம்புகார்பிரசுரம் பிரஸ், சென்னை.
7. **கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்,** புதுமைப்பித்தன், ஸ்ரீ செண்பகா பதிப்பகம், சென்னை.
8. **கதவு**, கி.ராஜநாராயணன், அன்னம் அகரம் வெளியீட்டகம், சென்னை.
9. **பேச்சுக் கலை,** ம.திருமலை மீனாட்சி பதிப்பகம், சென்னை. பதிப்பு 2009
10. **பாடநூல் தேடலுக்கான இணையம் -** https://archive.org/

நந்திக்கலம்பகம்

தமிழில் உருவான கலம்பக இலக்கியங்களில் ஒன்று நந்திக்கலம்பகம். இது காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவ மன்னன் தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன் மீது பாடப்பட்டது. இதுவே கலம்பக நூல்களில் காலத்தால் முற்பட்டு விளங்குகிறது. நந்திக் கலம்பகத்தின் காலம் கி.பி.9 ஆம் நூற்றாண்டு. காஞ்சி, மல்லை (மாமல்ல புரம்), மயிலை (மயிலாப்பூர்) ஆகிய நகரங்கள் இந்நூலில் சிறப்பாகப் போற்றப்பட்டுள்ளன. சிறந்த சொற்சுவை பொருட்சுவையோடு கற்பனை வளமும் நிறைந்த இந்நூலின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை.

நூல் வரலாறு

நந்திவர்மனிடம் இருந்து அரசைக் கவரும் நோக்கில் அவனது தம்பியால் ஒழுங்கு செய்யப்பட்டு அறம் பாடுதல் என்னும் முறையில் இப்பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அறம் வைத்துப்பாடிய நூலின் பாடலைத் தற்செயலாகக் கேட்ட நந்திவர்மன் அப்பாடலின் சிறப்பில் மனம் பறிகொடுத்துப் பாடல் முழுவதையும் கேட்க விரும்பினான். நூல் முழுவதையும் கேட்டால் மன்னன் உடல் எரிந்து இறப்பான் என்பதை அறிந்தும் தமிழின் மீதுள்ள தனியாத காதலால் உயிரையும் பொருட்படுத்தாது, எரியும் பந்தலின் கீழிருந்து கேட்டு உயிர் இறந்தான் என்று கூறப்படுகிறது. 'நந்தி, கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்' - என்னும் சோமேசர் முதுமொழிவெண்பா என்னும் நூலின் வெண்பா வரிகள் இக்கருத்தை வலியுறுத்துகின்றது. இதற்கேற்ப இந்நூலிலும் பல வசைக்குறிப்புகள் இடம் பெறுகின்றன. இந்நூல், மற்ற கலம்பக நூற்களைப் போலல்லாமல் வரலாற்று நூலாகவே திகழ்கின்றது. மூன்றாம் நந்திவர்மனது அரசியல் தொடர்பான செய்திகள் நந்திக் கலம்பகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் மூன்றாம் நந்திவர்மனின் கொடைச்சிறப்பு, தமிழ்ப்பற்று, சிவபெருமான் மீது கொண்ட பக்தி, வீரம், அறிவு போன்ற பண்புகளுடன் அறம், கொடை போன்ற பண்புகளும் நந்திக் கலம்பகத்தில் மிகவும் போற்றப்படுகின்றன.

நூல் அமைப்பு

நந்திக் கலம்பகத்தில் அகம், புறம், ஆகிய துறைகள் கலந்து வர அமையப்பெற்றபோதும் அவற்றுள் அகத்திணைச் செய்திகள் பெரும்பான்மையினதாகவும், புறத்திணைச் செய்திகள் சிறுபான்மையினதாகவும் இடம் பெறுகின்றன. நந்திக் கலம்பகத்தில் 144 பாடல்கள் காணப்படுகின்றன. ஆனால் அரசர் மீது பாடப்பெறும் கலம்பகம் 90 பாடல்களுடையதாய் இருக்க வேண்டும் என்பது நியதியாகும். எனவே, இதில் உள்ள அதிகப்படியான 54 பாடல்கள் பிற்காலத்தில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. இந்நூலில் நந்தி வர்மனின் தெள்ளாறு வெற்றியைப் பற்றி மட்டும் 16 பாடல்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன. கொற்ற வாயில் முற்றம், வெறியலூர், வெள்ளாறு, தெள்ளாறு போன்ற பல்வேறு போர்க்களங்களைப் பற்றிக் கூறும் சிறந்த வரலாற்று நூலாகவும் இது திகழ்கிறது.

1.1 வானுறு மதியை கையறுநிலை

வானுறு மதியை அடைந்ததுன் வதனம்
மறிகடல் புகுந்ததுன் கீர்த்தி
கானுறு புலியை அடைந்ததுன் வீரம்
கற்பகம் அடைந்ததுன் கரங்கள்
தேனுறு மலராள் அரியிடம் புகுந்தாள்
செந்தழல் அடைந்ததுன் தேகம்
நானும் என்கலியும் எவ்விடம் புகுவேம்
நந்தியே நந்தயா பரனே.

மறிகடல் – அலைகள் மோதுகின்ற கடல், கலி – வறுமைத் துன்பம், தயாபரன் – அருளாளன். திரு – திருமகள்

விளக்கம்

“அருளுடைய நந்திவர்மனே! நீ இப்போது இறந்து விட்டாய். உன் முகத்தின் ஒளி வானத்துச் சந்திரனை அடைந்துவிட்டது. உன் புகழ் கடலைச் சென்று சேர்ந்துவிட்டது. உன் வீரம் காட்டில் உள்ள புலியிடம் அடைக்கலமானது. உன் கொடைத்திறம் கற்பக மரத்திடம் தஞ்சமானது. திருமகள் திருமாலிடம் சேர்ந்து விட்டாள். உன் உடல் நெருப்பிடம் சேர்ந்து விட்டது. நானும் என்னைத் தொடர்ந்து

வரும் வறுமையும் எங்கே போய் இனி வாழ்வோம்” என புலவர்கள் கையற்றுப் பாடுகின்றனர்.

1.1 உரைவரம் பிகந்த கண்டோர் கூற்று

உரைவரம் பிகந்த உயர்புகழ்ப் பல்லவன்
அரசர் கோமான் அடுபோர் நந்தி
மாவெள் ளாற்று மேவலர்க் கடந்த
செருவே லுயர்வு பாடினன் கொல்லோ
நெருநல் துணியரைச் சுற்றிப்
பரடு திறப்பத் தன்னால் பல்கடைத்
திரிந்த பாணன் நறுந்தார் பெற்றுக்
காஅர் தளிர்த்த கானக் கொன்றையின்
புதுப்பூப் பொலன்கலன் அணிந்து
விளங்கொளி ஆனனன் இப்போது
இளங்களி யானை எருத்தமிசை யன்னே.

அருஞ்சொற்பொருள்

மேலவர் – பகைவர், செருநர் - பகைவர், பொலன்கலன்

செருவேல்

விளக்கம்

பாணன் ஒருவன் வீதி வழியே வந்து கொண்டிருக்கின்றான். முன்பு தன் ஆடையின் துண்டு ஒன்றை இடையிலே சுற்றிக் கொண்டவனாய், உடுத்தியிருக்கும் ஆடை அகலம் இல்லாமல் கால்கள் மறையாது வெளிப்படும்படியாக நடந்து சென்று வீடு வீடாகத் திரிந்திருந்தான். அவனைக் கண்டோர் யாவரும் வியப்படைகின்றனர். அஏனெனில், இப்போது அவன் மாலையும், பொற்கலனும் அணிந்து கொண்டு, யானையின் மேல் ஏறி, அழகான தோற்றத்துடன் வருகின்றான். இச்சிறப்பு அவனுக்கு எவ்வாறு கிடைத்திருக்கும் என்று எண்ணி முடிவில், வெள்ளாற்றங்கரையில் பகைவரை வென்ற பெருமைக்குரிய நந்தி மன்னனைப் பாடிப் இப்பரிசுகளைப் பெற்றிருப்பான் என்று வியந்து கூறுகின்றனர். இதனால் நந்திவர்மனின் கொடைச் சிறப்பு விளக்கம் பெறுகின்றது.

தமிழ்விடு தூது

தூது இலக்கியம்

பொருள் அடிப்படையில் அமையும் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றாகிய தூது இலக்கியம் பற்றிப் பார்ப்போம்.

பெயர்க்காரணம்

ஒருவர் மற்றொருவரிடத்து மக்களையோ அல்லது அஃறிணைப் பொருள்களையோ தூது அனுப்புவதாக அமைந்த இலக்கியம் ஆகையால் இதற்குத் தூது இலக்கியம் என்ற பெயர் ஏற்பட்டது.

இலக்கணம்

பல்வேறு இலக்கிய வகைகளுக்கு உரிய இலக்கணம் கூறும் பாட்டியல் நூல்கள் தூது இலக்கியத்தின் இலக்கணத்தையும் கூறுகின்றன. நவநீதப் பாட்டியல், பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், சிதம்பரப் பாட்டியல், இலக்கணச் சுருக்கம் முதலிய பாட்டியல் நூல்களில் தூது இலக்கிய வகையின் இலக்கணத்தைக் காணமுடிகின்றது. பாட்டியல் நூல்கள் கூறும் வகைப்படி தூது இலக்கியம் பின்வருமாறு அமையும்.

1)காதல் துயரம் காரணமாக ஓர் ஆண் அல்லது பெண், தான் காதல் கொண்ட பெண் அல்லது ஆணுக்குத் தூது அனுப்புவதாக அமைவது.

2)உயர்திணையைப்போல் ஓர் அஃறிணைப் பொருளைத் தூது சென்று வருமாறு வேண்டுவது.

3)தூது பெறுவோரிடம் சென்று மாலை வாங்கி வருமாறு தூது அனுப்புவோர், தூது செல்லும் பொருளிடம் வேண்டுவது.

• கிடைக்கப் பெறும் தூது நூல்களின் மூலம் கிடைக்கும் விளக்கம்

இப்போது கிடைக்கப் பெறும் தூது நூல்களைப் பார்க்கும் போது காதல் காரணமாக மட்டும் அன்றி, வேறு பல காரணங்களுக்காகவும் தூது அனுப்புவதாக அமைவதை அறிய முடிகின்றது.

தோற்றமும் வளர்ச்சியும்

எல்லா இலக்கிய வகைகளையும் போலவே தூது இலக்கியமும் இலக்கணம், இலக்கியம் ஆகிய நூல்களில் காணப்படும் கருக்களிலிருந்து வளர்ச்சி அடைந்து, தனி

இலக்கிய வகையாகத் தோன்றியுள்ளது. இவ்வகையில், தூது இலக்கிய வகையின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் சிறிது காணலாம்.

• தொல்காப்பியத்தில்

தொல்காப்பியர் தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு நிகழ்வதற்குரிய காரணங்கள் கூறுகின்றார்.

கல்வி கற்கும் பொருட்டுச் செல்லுதல், மன்னனின் பகைவர்கள் மேல் போர்தொடுத்துச் செல்லுதல், தூது செல்லுதல் ஆகிய காரணங்களுக்காகத் தலைவன் செல்வான். அப்போது தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே பிரிவு ஏற்படும் என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இந்த இடத்தில் தூது செல்லுதல் பற்றிய குறிப்பு உள்ளது.

தூதாகச் செல்வதற்கு உரியவர்களைத் தொல்காப்பியர் வாயில்கள் என்று குறிப்பிடுகிறார்.

• இலக்கியங்களில்

இலக்கியங்களிலும் தூது பற்றிய செய்திகள் பல காணப்படுகின்றன. சங்க இலக்கியங்களில், அகப்பொருள் நிலையிலும் புறப்பொருள் நிலையிலும் தூதுச் செய்திகள் அமைவதைக் காணலாம்.

தூது வந்தன்றே தோழி (கலித்தொகை - 32 : 18)

(வந்தன்றே = வந்தது)

என வரும் அடியை அகப்பொருள் தூதுக்குச் சான்றாகக் கூறலாம்.

அதியமான் என்ற மன்னனுக்காக ஔவையார் என்ற புலவர் தொண்டைமான் என்ற அரசனிடம், போர் மேற்கொள்ள வேண்டாம் என்று வலியுறுத்துவதற்காகத் தூது சென்றதாகப் புறநானூற்றுப் பாடல் (95) ஒன்று உள்ளது. இதைப் புறப்பொருள் சார்பான தூதுக்குச் சான்றாகக் கூறலாம்.

திருவள்ளுவர் திருக்குறளில் தூது என்ற ஒரு தனி அதிகாரமே அமைத்துள்ளார். இப்பகுதியில் தூது செல்பவர்களின் பண்புகள், தூது செல்பவர்களின் இலக்கணம், தூது சொல்லும் முறை முதலியவற்றைக் கூறக் காணலாம்.

பக்தி இலக்கியம் ஆகிய திருமுறைகளிலும், நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்திலும், தலைவனாகிய இறைவனிடம் அன்பு கொண்ட தலைவி தூது அனுப்புவதாய் அமைந்த பாடல்கள் உள்ளன.

காப்பியங்களாகிய கம்பராமாயணம், சீவக சிந்தாமணி ஆகியவற்றிலும் தூதுச் செய்திகள் காணப்படுகின்றன. கம்பராமாயணத்தில் அனுமன் தூது காணப்படுகிறது. சீவகசிந்தாமணியில் சீவகனிடம் குணமாலை கிளியைத் தூது அனுப்பும் செய்தி இடம் பெறுகின்றது.

இவ்வாறு, இலக்கணத்திலும் இலக்கியங்களிலும் இடம்பெறும் கருக்களை அடிப்படையாகக் கொண்டு தூது என்ற தனியான ஓர் இலக்கியம் தோன்றியது எனலாம்.

முதல் தூது நூல்

தூது இலக்கிய வகையின் முதல் நூல் நெஞ்சுவிடு தூது என்ற நூல் ஆகும். இதனை இயற்றியவர் உமாபதி சிவாச்சாரியர் ஆவார். இதன் காலம் கி.பி. 14-ஆம் நூற்றாண்டு. தமது ஞானாசாரியரிடம் சென்று தமது குறைகளை எடுத்துக் கூறுமாறு, உமாபதி சிவாச்சாரியர் தமது நெஞ்சைத் தூது விடுக்கிறார். இந்நூலைத் தொடர்ந்து பல நூல்கள் இயற்றப்பட்டுள்ளன. இப்போது முந்நூற்றுக்கும் மேற்பட்ட தூது நூல்கள் உள்ளன.

அமைப்பும் செய்திகளும்

தமிழில் காணப்படும் தூது நூல்களை அடிப்படையாகக் கொண்டு தூது இலக்கிய வகையின் அமைப்பையும், அதில் இடம்பெறும் செய்திகளையும் சுருக்கமாகக் காணலாம்.

பெயர் பெறும் முறை

எல்லாத் தூது நூல்களும் பொதுவாகத் தூது என்ற சொல்லை இறுதியில் பெற்றுள்ளன. சான்றாக நெஞ்சுவிடு தூது என்ற நூலைக் கூறலாம். ஆனால் சோம சுந்தர பாரதியார் இயற்றிய தூது நூல் மட்டும் மாரிவாயில் என்ற பெயரைப் பெற்றுள்ளது. மாரி என்றால் மேகம் என்றும் வாயில் என்றால் தூது என்றும் பொருள்படும். மேகவிடு தூது என்பது இதன் பொருள் ஆகும்.

தூது நூல்கள் பெயர் பெறும் நிலையில் சில முறைகள் உள்ளன.

தூது அனுப்பும் பொருளின் பெயரால் பெயர் பெறுகின்றன. சான்றாக, மான்விடு தூது என்ற நூலைக் கூறலாம். இதில் தூது செல்வது மான் ஆகும்.

சில நூல்கள் தூது பெறும் தலைவன் பெயரையும், தூது செல்லும் பொருளின் பெயரையும் கொண்டு அமைகின்றன. சான்றாக, மதுரை சொக்கநாதர் தமிழ்விடு தூது

என்ற நூலைக் கூறலாம். இதில் தூது பெறுவோர் இறைவனாகிய சொக்கநாதர், தூது செல்வது தமிழ் ஆகும்.

இவ்வாறு, தூது நூல்கள் பெயர் பெறும் முறைகளைக் காணலாம்.

தூது நூல் வகைகள்

தூது அனுப்புவோர், தூது பெறுவோர் ஆகிய அடிப்படையில் தூது நூல்களை மூன்று வகைகளாகப் பாகுபடுத்தலாம்.

1) ஆடவர் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

2) ஆடவர் பெண்களுக்குத் தூது அனுப்பும் நூல்கள்

3) பெண்கள் ஆடவர்க்குத் தூது அனுப்பும் நூல்கள்

என்று வகைப்படுத்தலாம்.

தலைவன் பெருமைகள் கூறுதல்

தூது நூல்களில் தூது பெறும் தலைவன் பெருமைகளை விளக்கிக் கூறும் பகுதி இடம் பெறுகின்றது. இப்பகுதியில் தலைவனின் தசாங்கங்கள் (பத்து உறுப்புகள்), தலைவனின் உறுப்புகளின் சிறப்புகள், தலைவன் இன்னின்னார்க்கு இன்னின்ன உறவுடையவன் என்று கூறும் உறவு முறைகள் போன்ற பல்வேறு பெருமைகள் விளக்கிக் கூறப்படும்.

தூது அனுப்பும் தலைவியின் நிலை கூறுதல்

பெண் ஆணுக்குத் தூது அனுப்பும் நூல்களில் தலைவியின் நிலை விளக்கிக் கூறப்படும். தலைவன் உலா வருகின்றான். அதைத் தலைவி காண்கின்றாள். தலைவி தலைவன் அழகைக் கண்டு மயங்கிக் காதல் கொள்கின்றாள். அப்போது தலைவனின் உலா தலைவியைக் கடந்து சென்று விடுகின்றது. தலைவனிடம் காதல் கொண்ட தலைவி மயங்கி விழுகின்றாள். இதைக் கண்ட அவள் தோழியர் தலைவியின் மயக்கத்தை நீக்க முயலுகின்றனர். மயக்கம் நீங்கிய தலைவி தலைவனிடம் கொண்ட காதலால் வருந்துகின்றாள். அப்போது தூதுவிடும் பொருளைக் காணுகின்றாள். அதை அழைத்துத் தன் நிலையைக் கூறுகின்றாள். தலைவனிடம் சென்று கூற வேண்டிய செய்திகளைக் கூறித் தூது சென்று வருமாறு வேண்டுகின்றாள். இவ்வாறு, தூது அனுப்பும் தலைவி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

தூதுப் பொருளின் பெருமைகளைக் கூறுதல்

தூது அனுப்புவோன் தூது செல்லும் பொருளை அழைத்து இன்னாரிடம் எனக்காகத் தூது சென்று வரவேண்டும் என வேண்டுகின்றான். அப்போது, தனக்காகத் தூது செல்லும் பொருளின் பெருமைகளை விளக்கிக் கூறும் பகுதி

தூது நூல்களில் இடம்பெறக் காணலாம்.

இப்பகுதியில் இதற்கு முன்னால் யாருக்காக யார் தூது சென்றுள்ளார், தூது அனுப்புவதற்கு ஏற்ற பொருள்கள் யாவை, அவற்றை ஏன் தான் தூது அனுப்பவில்லை, தான் தேர்ந்தெடுத்த பொருளின் பெருமைகள் யாவை என்பன விளக்கப்படும்.

தூதுப்பொருளிடம் அறிவுரைகள் கூறுதல்

தூது அனுப்புவோர் தூது பெறுவோரிடம் தூது சொல்வதற்காகச் செல்லும் போது, எவ்வாறு செயல்படவேண்டும் என்று அறிவுரை கூறும் பகுதியும் இடம்பெறும். தூதுப் பொருள் செய்ய வேண்டுவன யாவை, செய்யக் கூடாதவை யாவை, தூது பெறுவோரைக் காண்பதற்கு ஏற்ற சமயம் யாது, தூது பெறுவோரைக் காண்பதற்குப் பொருந்தாத சமயம் யாது, தூது பெறுவோரின் அடையாளங்கள் யாவை, அவரிடம் எவ்வாறு கூற வேண்டும் என்பன போன்ற அறிவுரைகளைத் தூது அனுப்புவோர் கூறக் காணலாம்.

தூது வேண்டுதல்

தூது நூலின் அமைப்பில் கடைசியாகக் காணப்படும் பகுதி இது ஆகும். தூது அனுப்புவோர் தூது பெறுவோரிடம் சென்று இதை வாங்கி வர வேண்டும் என்று கூறுவதாக அமையும் பகுதி இது. தூது பெறுவோரிடம் சென்று தூதுப் பொருள் தம் துன்ப நிலைகளை அல்லது தன் செய்திகளைக் கூறிவிட்டு, மாலை வாங்கி வர வேண்டும். அல்லது தூது சொல்லி வர வேண்டும் எனத் தூது அனுப்புவோர் வேண்டுவதாக இப்பகுதி அமையும்.

இவ்வாறு, தூது இலக்கிய வகையின் அமைப்பும் பொருளும் அமையக் காணலாம்.

தமிழ்விடு தூது என்ற நூல், மதுரையில் எழுந்தருளி உள்ள சோமசுந்தரக் கடவுளிடம் ஒரு பெண் தன் காதல் துன்பத்தைக் கூறித் தமிழ்மொழியைத் தூது அனுப்பியதாக அமைந்துள்ளது. இந்த நூலில் தூது பெறுவோர் கடவுள். அதாவது சோமசுந்தரக் கடவுள். தூது விடுவோர் ஒரு பெண். தூது செல்லும் பொருள்

தமிழ்மொழி. இந்த நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. இந்த நூலை இயற்றிய ஆசிரியரின் பெயர் தெரியவில்லை.

நூல் கூறும் பொருள்கள்

தூது செல்லும் தமிழ் மொழியின் பெருமைகளைக் கூறுதல். பிற பொருட்களைத் தூதாக அனுப்பாமைக்குரிய காரணங்களைத் தலைவி தூதுப் பொருளிடம் கூறுதல். தூது பெறும் தலைவன் ஆகிய சோமசுந்தரக் கடவுளைப் புகழ்ந்து கூறுதல். தலைவி தன் துன்பம் கூறுதல். தலைவி தமிழிடம் தன் தூதுச் செய்தியைக் கூறித் தூது வேண்டுதல், என்ற பகுதிகளைக் கொண்டு திகழ்கின்றது தமிழ்விடுதூது.

தமிழ்மொழியின் பெருமை

தூது அனுப்புவோர் தூதுப்பொருளிடம் அதன் பெருமைகளைக் கூறித் தூது செல்ல வேண்டுவதை, எல்லாத் தூது நூல்களிலும் காணலாம். இந்த நூலில் தூது விடும் தலைவி, தூதுப் பொருளான தமிழின் பல்வேறு பெருமைகளைப் புகழ்ந்து கூறுகின்றாள்.

திருச்சிற்றம்பலம் - மதுரைச் சொக்கநாதர் - தமிழ் விடுதூது - (கலிவெண்பா)

15. கல்லாதார் சிங்கமெனக் கல்விகேள் விக்குரியர்
எல்லாரு நீயா யிருந்தமையாற் - சொல்லாரும்
16. என்னடிக ளேயுனைக்கண் டேத்தினிடர் தீருமென்றுன்
பொன்னடிக ளேபுகலாப் போற்றினேன் – பன்னியமென்

15 – 16 சொல்லாரும்.... போற்றினேன்

கல்லாத மூடர்கட்குச் சிங்கம் போன்ற கல்வி கேள்வியிற் சிறந்த எல்லாரும் நீயாயிருந்தமையால், புகழ் நிறைந்த எனக்கு வாய்த்த தெய்வமே உன்னைக் கண்டு துதித்தால் என் குறைகள் எல்லாம் நீங்கும் என்று கருதி நின் பொன் போன்ற திருவடிகளையே புகலாகக் கொண்டு போற்றுகின்றேன்.

17. பஞ்சிபடா நூலே பலர்நெருடாப் பாவேகீண்
டெஞ்சியழுக் கேறா வியற்கலையே - விஞ்சுநிறந்
18. தோயாத செந்தமிழே சொல்லே ருழவரகந்
தீயாது சொல்விளையுஞ் செய்யுளே - வீயா
19. தொருகுலத்தும் வாரா துயிர்க்குயிராய் நின்றாய்
வருகுலமோ ரைந்தாயும் வந்தாய் – இருநிலத்துப்

16-19: பன்னியமென்..................வந்தாய்

நெருங்கிய மெல்லிய பஞ்சியால் நூற்கப்படாத நூலே! பலரால் நெருடப்படாத பாவே! கிழிந்து குறைந்து அழுக்குப்படாத இயல்புள்ள கலையே! மிஞ்சிய நிறம் தோயாத செந்தமிழே! சொல்லினை ஏராகக் கொண்டுழும் புலவர் மனம் கருகாது சொல்லை விளைக்கும் செய்யுளே! ஒரு குலத்தினும் பிறவாமல் இறவாமல் உயிர்க்குயிராக நின்றாய். வந்த குலங்கள் ஐந்தாகவும் தோன்றிவளர்ந்தாய்.

20.புண்ணியஞ்சே ருந்திப் புலத்தே வளிதரித்துக்

கண்ணிய வாக்காங் கருப்பமாய் - நண்ணித்

21. தலைமிடறு மூக்குரத்திற் சார்ந்திதழ்நாத் தந்தம்

உலைவிலா வண்ணத் துருவாய்த் - தலைதிரும்பி

22. ஏற்பமுதன் முப்பதெழுத் தாய்ச்சார் பிருநூற்று

நாற்ப தெழுத்தா நனிபிறந்தாய் – மேற்படவே

19 - 22 : இருநிலத்து.................பிறந்தாய்

பெருமை தங்கிய புவியிற் புண்ணியம் வாய்ந்த உந்தியிடத்தில் காற்றுத் தங்கிப் பின் வாக்கு ஆகிய சூற் கொண்டிருந்து, தலையும் கழுத்தும் மூக்கும் மார்பும் ஆய நான்கிடத்தினும் சார்ந்து உதடும், நாக்கும் பல்லும் கெடாத மேல் வாயும் ஆய கருவிகளால் வடிவமாகித் தலையினின்று மீண்டு ஏற்குமாறு முதலெழுத்து முப்பதாகவும் சார்பெழுத்து இருநூற்று நாற்பதாகவும் நன்றாகப் பிறந்தாய்.

23. எண்முதலா கப்பகரு மீரா றெனும்பருவம்

மண்முதலோர் செய்து வளர்க்குநாட் - கண்மணியோற்

24. பள்ளிக்கூ டத்தசையாம் பற்பலதொட் டிற்கிடத்தித்

தள்ளிச் சிறார்கூடித் தாலாட்டி - உள்ளிலகு

25. மஞ்சட் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்

மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய் - மஞ்சரையே

26. பன்னியொரு பத்துப் பருவமிட்டு நீவளர்த்தாய்

உன்னை வளர்த்துவிட வொண்ணுமோ

27. நினையும் படிப்பெல்லா நின்னைப் படிப்பார்

உனையும் படிப்பிப்பா ருண்டோ

22 - 27 : மேற்படவே......................படிப்பிப்பாருண்டோ

இவ்வாறு நீ பிறந்ததற்கு மேற்பட்டு எண் முதலாகச் சொல்லும் பன்னிரண்டு பகுதிகளாகச் செய்து மண்ணுலகிற் பிறந்த முதன்மையுடையோர் வளர்க்குங்காலத்தில் ஆசிரியர்கட்குக் கண்மணிபோல் விளங்கிப் பள்ளிக்கூடத்தில் அசையாம் பலப்பல தொட்டில்களிற் படுப்பித்துச் சிறுவர் கூடித் தள்ளித் தாலாட்டி உள்ளிடம் விளங்கும்படி மஞ்சளாற்றேய்த்துக் கழுவி மையிட்டு மூன்று பாலும் மிகுதியாகப் புகட்ட உயர்ந்து வளர்ந்தாய். மைந்தர்களையே பத்துப் பருவமாக்கி நீ வளர்க்கின்றாய்; அத்தகைய இயல்பு வாய்ந்த நின்னையொருவரால் வளர்த்துவிடக் கூடுமோ? கூடாதன்றோ? முதலில் நினைக்கும் கல்வியெல்லாம் நின்பாலே யுள்ளனவெனவுணர்ந்து நின்னைப் படிக்கும் இயல்புடையவரே மனிதர் எல்லாரும். உனக்குக் கற்பிப்பவர் ஒருவருண்டோ? இல்லை.

2.1 திருக்குற்றாலக் குறவஞ்சி

திருக்குற்றாலக் குறவஞ்சி தமிழ்ச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று. தமிழ்நாட்டின் தென்கோடியில் தென்காசிக்கு அருகில் அமைந்திருக்கும் குற்றாலம் எனும் ஊரின் சிறப்பைப் புகழ்ந்து அங்குள்ள ஈசரான குற்றாலநாதரைப் போற்றி, தெய்வக் காதல் பற்றிய கற்பனையை அமைத்துப் பாடப்பெற்ற நூல் ஆகும்.

நூலாசிரியர்

குறவஞ்சி நாடகம் என்று போற்றப்படும் இந்நூல் வடகரை அரசனான சின்னணஞ்சாத் தேவரின் அவைப்புலவராக விளங்கிய திரிகூடராசப்பக் கவிராயர் என்பவரால் இயற்றப்பட்டது. இவர் திருநெல்வேலி மாவட்டம் தென்காசிக்கு அருகில் உள்ள மேலகரம் என்னும் ஊரைச் சார்ந்தவர் (இவர் திருவாவடுதுறை ஆதினத் தலைவராக விளங்கிய சுப்பிரமணிய தேசிகரின் சகோதரர் ஆவார்). திருக்குற்றாலநாதாரின் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட இந்நூல் அன்றைய மதுரை மன்னனான முத்துவிஜயரங்க சொக்கநாத நாயக்கரின் பாராட்டையும் பரிசையும் பெற்றது.

கதை அமைப்பு

குறவஞ்சி நாடகத்திற்கென வரையறை செய்யப்பட்ட கதை அமைப்போடே இந்நூலும் விளங்குகிறது. குற்றாலநாதரின் திருவுலா எழுச்சியைக் குறித்து முன்னரே

கட்டியங்காரன் கூறுகிறான். திருவுலா தொடங்குகிறது மூவர் தமிழும் நான்மறைகள் முழங்க குற்றலாநாதர் வீதியில் உலா வருகிறார். குற்றாலநாதாரின் திருவுலாவைக் காண பெண்கள் எழுந்து வருகின்றனர். அப்பொழுது பந்து ஆடிக்கொண்டிருந்த வசந்தவல்லி (கதைத்தலைவி) என்பவளும் திருவுலாக்காண வருகிறாள். தோழியின் வாயிலாக இறைவனைப் பற்றி அறிந்த வசந்தவல்லி இறைவன் மீது காதல்கொண்டு தோழியைத் தூதனுப்புகிறாள். இந்நிலையில் குறிசொல்லும் குறத்தி தெருவழியே வருகிறாள். தோழி அவளைக் குறிசொல்ல அழைத்தவுடன் குறப்பெண் தன்நாட்டு மலைவளமும் தொழில்வளமும் சிறப்பாக எடுத்துக்கூறுகிறாள். பின் வசந்தவல்லி கையைப் பார்த்து அவள் குற்றாலநாதர் மீது காதல் கொண்டுள்ள செய்தியையும், (தலைவனின்) குற்றாலநாதரின் புகழ்பற்றியும் எடுத்துச்சொல்லி வசந்தவல்லியின் எண்ணம் நிறைவேறும் என்று குறி சொல்லி பரிசு பெறுகிறாள் குறத்தி சிங்கி. அவள் கணவன் சிங்கன் அவளைக் காணத் தேடிவருகிறான். குறத்தியைக் கண்ட சிங்கனிடம் குறத்தி நடந்ததைச் சொல்ல இருவரும் குற்றாலநாதரைப் பாடி இன்பம் அடைகின்றனர். இவ்வாறு கதை முடிகிறது.

நூலின் சிறப்புகள்

குறவஞ்சி நூல்களுள் பாராட்டுக்குரியதாக விளங்கி வருவதும், இன்றும் நாட்டிய நாடகமாக மேடைகளில் நடிக்கப்பட்டு வருவதும், இக்குற்றாலக் குறவஞ்சி ஆகும். திரிகூடராசப்பக்கவிராயர் குற்றாலத்தின் மீது தலபுராணம், மாலை, சிலேடை, பிள்ளைத்தமிழ், யமகஅந்தாதி முதலிய நூல்களை இயற்றியிருந்தாலும் இன்று பலரும் விரும்பிப் படிப்பது அவருடைய குறவஞ்சி ஒன்றே. குற்றாலக்குறவஞ்சியானது இறைவன்மீது பாடப் பெற்றதால் திருக்குற்றலாக்குறவஞ்சி எனும் பெயர் பெற்றது. நாடகச்சுவை நிரம்பிய இந்நூல் சந்த (ஓசை) நயத்தோடு கூடிய பாடல்களையும் கற்பனை நயம் கொண்ட பாடல்களையும் நிரம்பப் பெற்றுள்ளது. சான்றாக வசந்தவல்லி பந்தாடும் பாங்கைப்பற்றி எடுத்துரைக்கும்,

செங்கையில் வண்டு கலின்கலின் என்று
செயம் செயம் என்றாட இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாடஇரு
கொங்கை கொடும்பகைவென்றனம் என்று

குழைந்து குழைந்தாடமலர்ப்

பைங்கொடி நங்கை வசந்த

சவுந்தார் பந்து பயின்றனளே

மலைவளம்

---

(1)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்

மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும் கானவர்கள் விழிஎறிந்து வானவரை அழைப்பார் கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார் தேனருவித் திரையெழும்பி வானின்வழி ஒழுகும் செங்கதிரோன் பரிக்காலும் தேர்க்காலும் வழுகும் கூனலிளம் பிறைமுடித்த வேணிஅலங் காரர் குற்றாலத்திரிகூட மலைஎங்கள் மலையே;

(1) ஆண் குரங்குகள் பல்வகைப் பழங்களைப் பறித்துக் கொடுத்துப் பெண் குரங்குகளோடு தழுவும்; அக் குரங்குகளால் சிதறியெறியப்படுகின்ற பழங்களை வானுலகத்தில் வாழும் தேவர்கள் இரந்து இரந்துவேண்டிக் கேட்பார்கள், வனவேடர்கள் தம் கண்களால் ஏறெடுத்துப்) பார்த்து உற்று நோக்கித் தேவர்களை அழைப்பார்கள்; வானின் வழியாகச் செல்கின்ற சித்தர்கள் கீழிறங்கி வந்து காயசித்தி மருந்துகளாகிய வன மூலிகைகளை வளர்ப்பார்கள்; தேன் கலந்த மலையருவியினது அலைகள் மேலெழுந்து வானத்தினின்றும் வழிந்து ஓடும்; அதனால் செந்நிற ஞாயிற்றின் தேரிற்பூட்டிச் செல்லும் குதிரைக் கால்களும் தேர்ச்சக்கரமும் வழுக்கி விழும்; வளைந்துள்ள இளம் பிறையைச் சூடியிருக்கின்ற சடைமுடியையுடைய அழகரான திருக்குற்றால நாதர் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றாலமாகிய இச் சிறப்புவாய்ந்த திரிகூடமலையே எங்களுக்குரிமையாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும்;

(2) முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும் முற்றம்எங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக் கொண்டோடும் கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம் கிம்புரியின் கொம்பொடித்து வேம்புதினை இடிப்போம் செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப்பந் தடிக்கும் தேன் அலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும் வழங்குகொடை மகராசர் குறும்பலவின் ஈசர் வளம்பெருகும் திரிகூட மலைஎங்கள் மலையே;

(2) ஒலிக்கின்ற அலைகளையுடைய நீர் வீழ்ச்சி, செல்லும் வேகத்தில் கழங்காடுகின்ற தென்னும்படி முத்துக்களை ஒதுக்கிச் செல்லும்; அவ்வருவி, மக்கள் வாழ்கின்ற வீட்டின் முற்றங்களிலெல்லாம் பரவிச் சென்று சிறுமிகளின் மணல்வீடுகளை அழித்துக் கொண்டு ஓட்டம் பிடிக்கும்; நாங்கள் மலைக்கிழங்குகளைத் தோண்டியும், தேன் இறால்களைப் பிய்த்து எடுத்தும், மலையின் செழிப்பைப் பாடிக்கொண்டே கூத்தாடுவோம்; பூண்கட்டிய யானைக்கொம்புகளை ஒடித்து உலக்கையாகக் கொண்டு வறுத்த தினைத் தானியத்தை இடிப்போம். இளமை பொருந்திய குரங்குகள் இனிமையுள்ள மாம் பழங்களையே பந்தாகக் கொண்டு அடித்து விளையாடும்; தேன் பெருகி ஓடுகின்ற செண்பகப் பூவின் மணம், தேவருலகினிடத்தே போய்ப் பரவும்; அருட்கொடை வழங்குகின்ற தேவாதி தேவராகிய குறும்பலா மரத்தினடியில் எழுந்தருளியிருக்கின்ற திருக்குற்றால நாதருக்குரியதான எல்லா வளப்பமும் பெருகியிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழுகின்ற மலையாகும்;

(3) ஆடுமர வீனுமணி கோடிவெயில் எறிக்கும் அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும் வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும் விந்தை அகில் குங்குமமுஞ் சந்தனமும் நாறும் காடுதொறும் ஓடிவரை ஆடுகுதி பாயும் காகமணு காமலையில் மேகநிரை சாயும் நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர் நிலைதங்கும் திரிகூடமலை எங்கள் மலையே;

(3) ஆடுகின்ற நாகப் பாம்புகள் கக்கிய எண்ணிறந்த மணிகள் எங்கும் ஒளிகொடுக்கும்; யானைகளானவை திங்களைத் தாம் உண்ணும் கவள உருண்டையென எண்ணி அது செல்கின்ற வான்வழியில் போகவொட்டாமல் தடைசெய்யும், மலைக் குறவர்கள் தினைப்பயிரை விதைப்பதற்காக அழிக்கப் படுகின்ற காடுகளிலெல்லாம் உள்ள பலவகை மரங்களும் அகில் குங்குமம் சந்தனமரங்களும் கண்டோர் வியக்கும்படி தம் மணங்களைப் பரப்பும்; காடுகளில் எங்கும் ஓடிச்சென்று வரையாடுகள் துள்ளிக் கீழே பாயும்; காகமும் பறவாத உயர்ந்த மலையில் மேகக் கூட்டங்கள் உச்சியில் சாய்ந்தோடும்; நீண்ட குறும்பலாவடியில் எழுந்தருளியிருக்கின்றவரும் கைலை மலையில் வாழ்பவருமாகிய திருக்குற்றாலநாதரின் நிலைபெற்றிருக்கின்ற திருக்குற்றாலமலையே எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும்;

(4) கயிலைஎனும் வடமலைக்குத் தெற்குமலை அம்மே கனகமகா மேருஎன

நிற்குமலை அம்மே சயிலமலை தென்மலைக்கு வடக்குமலை அம்மே சகலமலை யுந்தனக்குள் அடக்குமலை அம்மே வயிரமுடன் மாணிக்கம் விளையுமலை அம்மே வான்இரவி முழைகள்தொறும் நுழையுமலை அம்மே துயிலுமவர் விழிப்பாகி அகிலமெங்கும் தேடும் துங்கர் திரிகூடமலை எங்கள்மலை அம்மே;

(4) திருக்கைலைமலை யென்று கூறப்படுகின்ற வடக்குப் பக்க மலைக்குத் தென்பக்கத்தில் இருக்கின்ற மலையாகும்; இது பெரிய பொன்மலை என்னும் மேருமலை போன்ற தென்னும்படி உயர்ந்த மலை அம்மே! சிவசைலம் என்னும் தெற்கு பக்கமுள்ள மலைக்கு வடக்குப் பக்கமாக இருக்கின்ற மலை இஃது அம்மே! இம்மலை மற்ற எல்லா மலைகளின் சிறப்பெல்லாம் தனக்குள் நிறையக்கொண்டிருக்கும் வளமுடையது அம்மே! அது வைரமணியுடன் பலவகை மணிகளையும் விளைத்துத் தருவது அம்மே! வான்வழியாகச் செல்லும் ஞாயிறு குகைகளையே வழியாகக்கொண்டு நுழைந்து செல்வதற்கு இடனாக இருப்பதும் அந்த மலைதான் அம்மே! அறிதுயில் புரிகின்ற திருமாலான வருங்கூடத் துயில் விட்டெழுந்து எல்லா உலகங்களிலும் போய்த் தேடுகின்ற மேன்மையாளராகிய திரிகூடநாதப் பெருமானுக்குரிய திரிகூட மலைத் எங்களுக்குரியதாக நாங்கள் வாழ்கின்ற மலையாகும் அம்மே! (இன்னுங் கேள்)

(5) கொல்லிமலை எனக்கிளைய செல்லிமலை அம்மே
கொழுநனுக்குக் காணிமலை பழநிமலை அம்மே
எல்லுலவும் விந்தைமலை எந்தைமலை அம்மே
இமயமலை என்னுடைய தமையன்மலை அம்மே
சொல்லரிய சாமிமலை மாமிமலை அம்மே
தோழிமலை நாஞ்சிநாட்டு வேள்விமலை அம்மே
செல்லினங்கள் முழவுகொட்ட மயிலினங்கள் ஆடும்
திரிகூட மலையெங்கள் செல்வமலை அம்மே;

(5) கொல்லி மலையானது எனக்குப் பின் பிறந்த செல்லி என்னும் பெயருடையாளுக்குரிய மலையாகும்; அவளின் கணவனுக்குக் குடிக்காணியாட்சியாக இருப்பது பழனிமலை ஆகும் அம்மே! ஞாயிறு மேலே செல்கின்ற விந்தை என்னும் மலையே என் தந்தைக்குரிய மலையாகும் அம்மே! இமயமலை என்னுடைய தமையனுக்குரிய மலையாகும் அம்மே! சொல்லுதற்கரிய சுவாமி மலை என்னும் மலையே என் மாமியாளுக்குரிய மலையாகும் அம்மே! என் தோழிக்குரிய மலையோ

நாஞ்சில் நாட்டிலுள்ள வேள்வி யென்னும் மலையாகும் அம்மே! மேகங்கள் குமுறலாகிய பறையை முழக்க, அதற்கேற்ப மயிலினங்கள் நடனஞ்செய்கின்ற திரிகூட மென்னும் திருக்குற்றாலமலையே எங்களுக்குச் செல்வப்பொருளாக இருக்கின்ற நாங்கள் வாழும் மலையம்மே!

கலிங்கத்துப் பரணி

பரணி என்பது சிற்றிலக்கிய வகைகளுல் ஒன்றாகும்.

பரணி இலக்கிய வகையில் சிறந்து விளங்குவது கலிங்கத்துப்பரணி ஆகும்.

பரணி நூல்களில் காலத்தால் முற்பட்டது இந்நூல்.

முதல் குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின் மீது படை எடுத்து வெற்றி பெற்றான். இந்த வெற்றியைச் சிறப்பித்துப் பாடியதே கலிங்கத்துப் பரணி ஆகும்.

நூலாசிரியர்

கலிங்கத்துப் பரணியின் ஆசிரியர் ஜெயங்கொண்டார் ஆவார்.

'பரணிக்கு ஓர் ஜெயங்கொண்டான்' என்று பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் இவரைப் பாராட்டி உள்ளார்.

இவர் முதற்குலோத்துங்க சோழனுடைய அவைக்களப் புலவராகத் திகழ்ந்தவர்.

குலோத்துங்க சோழனுடைய புகழையும் அவனின் தலைமைப் கருணாகரத்தொண்டைமானின் சிறப்பையும் கலிங்கத்துப் பரணி என்னும் நூலைப் பாடி நிலை நிறுத்தியவர்.

பாட்டுடைத் தலைவன்

கலிங்கத்துப் பரணியின் பாட்டுடைத் தலைவன் முதல் குலோத்துங்க சோழன்.

இவர் இராசேந்திர சோழன் மகள் சோழ இளவரசி அம்மங்கைக்கும் சாளுக்கியர் குல இராசராச நரேந்திரனுக்கும் பிறந்தவர்.

இவர் மாமன் வீரராசேந்திர சோழன் இறந்த பின்பு, அவரின் மகன் அதிராசேந்திரன் அரசர் பட்டம் ஏற்றார். இவரும் சில திங்களில் இறந்தான்.

சோழ நாடு வாரிசு இல்லாமல் குழப்பத்தில் ஆழ்ந்தது. குழப்பத்தை நீக்கச் சாளுக்கியர் குலத்தைச் சேர்ந்த குலோத்துங்கன் பட்டம் ஏற்றார்.

பரணி உருவான கதை

குலோத்துங்கன் காஞ்சிபுரத்தில் தங்கி இருந்தான். அப்போது தென்னவர், வில்லவர் முதலிய மன்னர்கள் திறை (தோற்ற மன்னர் தன்னை வென்றமன்னர்க்குக் கொடுக்கும் நிதி) செலுத்திப் பணிந்தனர்.

வட கலிங்க மன்னன் மட்டும் திறை செலுத்தாமல் இருந்தான்.

இதனை அறிந்த குலோத்துங்கன் சினம் கொண்டான். அவன் சினத்தைக் கண்டு ஏனைய மன்னர்கள் நடுங்கினார்கள்.

'வட கலிங்க மன்னனின் அரண்கள் (மதில்கள்) வலிமை உடையனவாம்! அவற்றை அழித்து வாருங்கள்; அவனுடைய யானைகளை வென்று வாருங்கள்' என்று கூறினான்.

அந்த அளவில் குலோத்துங்கன் தளபதி கருணாகரன் எழுந்து நானே சென்று கலிங்கனை அடக்குவேன் என்று சபதம் இட்டான்.

பின்னர்க் கலிங்கப் போர் மூண்டது. சோழர்கள் வெற்றி வாகை சூடினர் என்று கதை முடிகிறது.

கலிங்கம் வென்ற கருணாகரன்

குலோத்துங்கனின் படைத்தலைவர்களுள் சிறந்தவன்.

கலிங்கத்துப் பரணியின் இன்னொரு கதாநாயகன் கருணாகரன் ஆவான்.

குலோத்துங்கன் ஆணையின்படி கலிங்க நாட்டின் மீது படை எடுத்துச் சென்று அந்நாட்டை அழித்தவன்.

திருவரங்கன் எனும் இயற்பெயரை உடையவன்.

'வேள்' 'தொண்டைமான்' எனும் பட்டங்கள் குலோத்துங்கனால் இவனுக்கு வழங்கப்பட்டன.

இவன் பல்லவர் குலத்தைச் சேர்ந்தவன்.

கலிங்கப் போரினால் குலோத்துங்கனுக்குப் புகழ் தேடித் தந்தான் கருணாகரன்.

கருணாகரனுக்குப் பரணியின் வாயிலாகப் புகழ் தேடித் தந்தார் செயங்கொண்டார்.

பரணி இலக்கணம்

“ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி.” (இலக்.வி. 839)

என்று பரணி இலக்கியத்திற்கு இலக்கண விளக்கம் என்னும் நூல் இலக்கணம் வகுத்துள்ளது.

(அமர் - போர்; மானவன் - படைவீரன்.)

பரணி என்பது போரில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாடும் சிற்றிலக்கிய வகை என்பது இதன் பொருளாகும்.

பரணி அமைப்பு

போரிலிருந்து மீண்ட தலைமகன் பால் புலவியுற்ற தலைமகளது ஊடலைத் தீர்க்க புலவர்கள் வாயிலாவதும்,

புலவியாற்றிய பின்னர், தலைவன் சென்ற காட்டின் கொடுமையையும் தலைவனின் வீரத்தையும், அக்காட்டிலுள்ள பேய்கள் காளிக்குச் சொல்லுவதையும்,

காளி பேய்களுக்கு உரைப்பதையும் எடுத்துச் சொல்லும் வடிவுடன் பரணி நூலானது அமையும்.

பரணி நாளில் பேய்கள் கூடி நிணச்சோறு (இரத்தமும் இறைச்சியும் கலந்த உணவு) அட்டு (சமைத்து), உண்டு, மகிழ்ந்து, ஆடிப்பாடிக் களித்துப் போரில் வென்ற மன்னரைப் புகழும் புகழ்ச்சியைக் கூறுவது.

கலிங்கத்துப்பரணி - உள்ளடக்கம்

கடவுள் வாழ்த்து, கடை திறப்பு, காடு பாடியது, கோயில் பாடியது, தேவியைப் பாடியது, பேய்ப்பாடியது, இந்திரசாலம், இராச பாரம்பரியம், பேய் முறைப்பாடு, அவதாரம், காளிக்குக் கூளி கூறியது, போர் பாடியது, களம் பாடியது என்னும் தலைப்புகளில் கலிங்கத்துப்பரணி பாடப்பட்டுள்ளது.

இவற்றுள், “காடு பாடியது” என்னும் பகுதியில் இடம்பெறும் பாலை நிலக் காட்சிகள் நமக்குப் பாடமாக அமைந்துள்ளன.

வரண்ட பாலை

காளியின் உறைவிடமாகச் சங்க இலக்கியங்கள் கூறுவது பாலை நிலம் ஆகும்.

பாலை என்பது மிகுந்த வறட்சி உடையது; வெப்பம் மிக்கது.

கலிங்கத்துப்பரணியில் உள்ள காடு பாடியது எனும் பகுதி, காளி கோயில் உள்ள

காட்டைப் பாடுகின்றது.

இக்காடு, மிகுந்த வெப்பமும் வறட்சியும் உடையது.

1. பாலை நில மரங்கள்

பொரிந்த காரைக ரிந்த சூரைபு
கைந்த வீரையெ ரிந்தவேய்
உரிந்த பாரையெ றிந்த பாலையு
லர்ந்த வோமைக லந்தவே.

பொரிந்த காரை மரம், எரிந்த சூரை மரம், புகைந்த வீரை மரம், எரிந்த மூங்கில் மரம், உரிந்த பாரை மரம், எரிந்த பாலை மரம், உலர்ந்த ஓமை மரம் ஆகியன அந்தக் பாலை நிலத்தில் உள்ளன.

அந்தப் பாலை நிலத்தின் வரட்சியையும் வெப்பக் கொடுமையையும் மரங்கள் வெளிப்படுத்துகின்றன.

2. பாலை நில வெம்மை

தீய வக்கொடிய கான கத்தரைதி
றந்த வாய்தொறுநு ழைந்துதன்
சாயை புக்கவழி யாதெ னப்பரிதி
தன்க ரங்கொடுதி ளைக்குமே.

அந்தக் காட்டில் தரைகள் வெடித்துக் கிடக்கும். அந்த வெடிப்புகளில், தன் மனைவி சாயை என்பவளைத் தேடும் விதமாக, சூரியன் தன் வெயில்-கைகளால் தடவிப்பார்க்கும். இந்த உவமையின் மூலம், அந்தப் பாலை நிலத்தில் சூரிய ஒளி படாத இடமே இல்லை என்பது உணர்தப்படுகின்றது.

3. நிழல் இல்லாப் பாலை

ஆடுகின்ற சிறைவெம் பருந்தின் நிழல்
அஞ்சி அக்கடு வனத்தை விட்டு
ஓடுகின்ற நிழல் ஒக்கும்;நிற்கும் நிழல்
ஓரிடத்தும் உள அல்லவே

இரை தேடுவதற்காக வானத்தில் வட்டமிட்டுப் பறந்து செல்கிறது பருந்து. அது பாலை வெப்பத்திற்கு அஞ்சிப் பறந்து ஓடுகிறது. அவ்வாறு ஓடுகின்ற பருந்தின் நிழலைத் தவிர வேறு எந்த நிழலும் அந்நிலத்தில் இல்லை. பாலை நிலத்தின் நிழலின்மை இச் செய்யுளில் வெளிப்படுகிறது.

4. பாலை நிலப் பறவை

செந்நெ ருப்பினைத் தகடு செய்துபார்
செய்த தொக்குமச் செந்த ரைப்பரப்
பந்நெ ருப்பினிற் புகைதி ரண்டதொப்
பல்ல தொப்புறா வதனி டைப்புறா.

தரை செந்நெருப்பினைத் தகடு செய்தது போல் தோன்றும், அந்த நிலத்தில் எழும் புகை போல் புறாக்கள் பறக்கும் என்கிறது இச் செய்யுள்.

5. பாலை நில விலங்கு

தீயின் வாயின் நீர் பெறினும் உண்பதோர்
சிந்தைகூர வாய்வெந் துலர்ந்துசெந்
நாயின் வாயின்நீர் தன்னை நீர்எனா
நவ்வி நாவினால் நக்கி விக்குமே

பாலை நிலத்தில் கொடிய வெப்பம். அதனால் மானின் வாய் வெந்துபோய் உள்ளது. மானுக்குத் தண்ணீர்த் தாகமும் மிகுதி. நெருப்பிலிருந்து நீர் கிடைத்தாலும்

குடித்துவிடும். தாகத்தினால் துன்புறும் மான் செந்நாயின் வாயிலிருந்து வடியும் எச்சில் நீரைக் குடிக்கிறது. செந்நாய்க்கு அஞ்சி ஓடும் மான் கூடத் தாகத்தால் இவ்வாறு செய்கிறது. இது பாலை நில வெப்பத்தால் ஏற்படும் கொடுமையின் உச்சநிலையை எடுத்தியம்புகிறது.

அலகு- 2

அறிஞர் அண்ணாவின் 'செவ்வாழை' – சிறுகதை

அறிஞர் அண்ணாதுரை

சி.என். அண்ணாதுரை, காஞ்சிபுரத்தில் நெசவாளர் குடும்பத்தில் 1909ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் தேதி பிறந்தார். 1934இல் இளங்கலைப் பட்டப்படிப்பிக்குப்பின் தொடர்ந்து பொருளியல் மற்றும் அரசியல் துறைகளில் முதுகலைப் பட்டக்கல்வி முடித்துவிட்டு ஆங்கில ஆசிரியராக தனது பணியைத் தொடங்கினார். பின்னர் ஊடகத்துறையிலும் அரசியலிலும் ஈடுபாடு கொண்டார்.

அறிஞர் அண்ணா குடியரசு, நம் நாடு, திராவிட நாடு, காஞ்சி உள்ளிட்ட பல தமிழ் ஏடுகளிலும், 'ஹோம் லேண்ட்', 'ஹோம் ரூல்' ஆகிய ஆங்கில வார ஏடுகளிலும் பன்னாட்டு அரசியல் தொடங்கி இந்திய அரசியல் வரை பல துறைகளில் ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்.

சிறுகதை, கவிதை, கட்டுரை, நாடகம், மேடைப்பேச்சு என பலதுறைகளிலும் அண்ணா சிறந்து விளங்கினார். அண்ணாவின் வேலைக்காரி, ஓர் இரவு ஆகிய நாடகங்கள் அவரை நாடக ஆசிரியராகப் புகழ்பெற வைத்தன. அவரது நாடகங்களைக் கண்ட எழுத்தாளர் கல்கி கிருஷ்ணமூர்த்தி, அவரைத் 'தென்னாட்டு பெர்னார்ட்ஷா' எனப் புகழ்ந்தார்.

அண்ணாவின் எழுத்திலும் பேச்சிலும் பகுத்தறிவு, மூட நம்பிக்கை எதிர்ப்பு, சாதி ஒழிப்பு, இடஒதுக்கீடு, சமஉரிமை, மாநிலத் தன்னாட்சி போன்ற கொள்கைகள் தொடர்ந்து இடம்பெற்றன. அடுக்குமொழி பேசுவதில் தேர்ந்த அண்ணாவின் ஆளுமைமிகு சொற்பொழிவு இளையர்களைப் பெரிதும் ஈர்த்தது.

1967ல் தமிழகத்தின் முதல்வராகப் பதவியேற்ற அண்ணா, மதராஸ் என்றிருந்த சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு மாநிலம் என்று பெயர் சூட்டுவதற்கும் சுயமரியாதைத் திருமணச் சட்டம் இயற்றுவதற்கும் வழிவகுத்தார்.

"கடவுள் ஒன்று, மனித நேயமும் ஒன்றுதான்", "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்ற கோட்பாட்டில் அண்ணா இறுதிவரை உறுதியுடன் இருந்தார். மூடநம்பிக்கை மற்றும் சமயச் சுரண்டல்களைச் சாடினார். தமிழ் மொழி, தமிழ்நாடு, தமிழக மக்கள் தொடர்பான உரிமைகள் முடக்கப்பட்டபோது நாடாளுமன்றத்தில் குரல் எழுப்ப அண்ணா தயங்கியதில்லை.

"பொதுவாழ்வில் ஈடுபடும் ஒவ்வொருவரும் தனது தனிப்பட்ட வாழ்க்கையில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும்" என்று வலியுறுத்திய அண்ணா, மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் மதித்துப் போற்றும் அரசியல் நாகரிகம் மிக்கவர் எனப்போற்றப்படுபவர்.

தமிழகத்தின் காங்கிரஸ் அல்லாத முதல் அமைச்சராக முதன்முறை பதவியேற்ற அண்ணாவால் இரண்டு ஆண்டுகள் மட்டுமே அந்தப் பதவியை வகிக்க முடிந்தது. புற்றுநோயால் பாதிக்கப்பட்ட அண்ணா 1969ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் தேதி உயிர்நீத்தார்.

செங்-கோ-ட-னின் குழந்-தை-க-ளுக்கு இப்-போது விளை-யாட்டு இடமே செவ்-வாழை இருந்த இடந்-தான்! மல-ரி-டம் மங்-கை-ய-ருக்-கும், தேனி-டம் வண்-டு-க-ளுக்-கும் ஏற்-படும் பிரேமை போல, அந்-தக் குழந்-தை-க-ளுக்-குச் செவ்-வா-ழை-யி-டம் பாசம் ஏற்-பட்டு விட்-டது. செங்-கோடன், அந்-தச் செவ்-வா-ழைக் கன்-றைத் தன் செல்-லப் பிள்ளை போல் வளர்த்து வந்-தான்.

இருட்-டு-கிற நேரம் வீடு திரும்-பி-னா-லும் கூட, வய-லிலே அவன் பட்ட கஷ்-டத்-தைக் கூடப் பொருட்-ப-டுத்-தா-மல், கொல்-லைப்-பு-றம் சென்று, செவ்-வா-ழைக் கன்-றைப் பார்த்-து-விட்டு, தண்-ணீர் போது-மா-ன-படி பாய்ச்-சப்-பட்-டி-ருக்-கி-றதா என்று கவ-னித்து விட்-டுத்-தான், தன் நான்கு குழந்-தை-க-ளி-ட-மும் பேசு-வான். அவ்-வ-ளவு பிரே-மை-யு-டன் அந்-தச் செவ்-வா-ழையை அவன் வளர்த்து வந்-தான். கன்று வளர வளர அவன் களிப்-பும் வளர்ந்-தது. செவ்-வா-ழைக்கு நீர் பாய்ச்-சும் போதும், கல் மண்-ணைக் கிள-றி-வி-டும் போதும், அவன் கண்-கள் பூரிப்-ப-டை-யும்- மகிழ்ச்-சி-யால். கரி-ய-னி-டம் - அவ-னு-டைய முதல் பையன் காட்-டியதைவிட அதிகமான அன்-பும், அக்கறையும் காட்-டு-கி-றாரே என்று ஆச்-ச-ரி-யம், சற்-றுப் பொறா-மை-கூட ஏற்-பட்-டது குப்-பிக்கு. "குப்பி! ஏதாச்-சும் மாடு-கீடு வந்து வாழையை மிதிச்-சி-டப் போகுது. ஜாக்-ர-தை-யாக் கவ-னிச்-சுக்கோ.

அரு-மை-யான கன்று - ஆமாம், செவ்-வா-ழைன்னா சாமான்-ய-மில்லே. குலை, எம்-மாம் பெரிசா இருக்-கும் தெரி-யுமோ? பழம், வீச்சு வீச்-சா-க-வும் இருக்-கும், உருண்-டை-யா-க-வும் இருக்-கும்-ரொம்ப ருசி-பழத்-தைக் கண்-ணாலே பார்த்-தாக்

கூடப் போதும்; பசி-யா-றிப் போகும்" என்று குப்-பி-யி-டம் பெரு-மை-யா-கப் பேசுவான் செங்கோடன்.

அப்பா சொல்-லு-வதை நாலு பிள்-ளை-களும் ஆமோ-திப்-பார்-கள் - அது மட்-டுமா - பக்-கத்-துக் குடிசை - எதிர்க் குடி-சை-க-ளிலே உள்ள குழந்-தை-க-ளி-ட-மெல்-லாம், இதே பெரு-மை-யைத்-தான் பேசிக் கொள்-வார்-கள். உழ-வர் வீட்-டுப் பிள்-ளை-கள், வேறே எதைப் பற்-றிப் பேசிக் கொள்ள முடி-யும்?

அப்பா வாங்-கிய புதிய மோட்-டா-ரைப் பற்-றியா, அம்-மா-வின் வைரத்-தோடு பற்-றியா, அண்-ணன் வாங்கி வந்த ரேடி-யோ-வைப் பற்-றியா, எதைப் பற்-றிப் பேச முடி-யும்? செவ்-வா-ழைக் கன்-று-தான், அவர்-க-ளுக்கு, மோட்-டார், ரேடியோ, வைர-மாலை, சக-ல-மும்! மூத்த பயல் கரி-யன், "செவ்-வா-ழைக் குலை தள்-ளி-ய-தும், ஒரு சீப்-புப் பழம் எனக்-குத்-தான்" என்று சொல்-லு-வான்.

"ஒண்-ணுக்-கூட எனக்-குத் தர-மாட்-டா-யாடா - நான் உனக்கு மாம்-ப-ழம் தந்-தி-ருக்-கி-றேன்? கவ-ன-மி-ருக்-கட்-டும் - வறுத்த வேர்க்-க-டலை கொடுத்-தி-ருக்-கி-றேன்; கவ-ன-மி-ருக்-கட்-டும்" என்று எதிர்க் குடிசை எல்-லப்-பன் கூறு-வான்.

கரி-ய-னின் தங்கை, காமாட்-சியோ, கண்-ணைச் சிமிட்-டிக் கொண்டே "உனக்கு ஒரு சீப்-புன்னா, எனக்கு இரண்டு தெரி-யுமா? அம்-மா-வைக் கேட்டு ஒரு சீப்பு, அப்-பா-வைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்-பா-கப் பேசு-வாள்.

மூன்-ற-வாது பையன் முத்து, "சீப்-புக் கணக்-குப் போட்-டுக்-கிட்டு ஏமாந்து போகா-தீங்க ஆமா - பழ-மா-வ-தற்-குள்ளே யாரார் என்-னென்ன செய்து விடு-வாங்-களோ, யாரு கண்-டாங்க." என்று சொல்-லு-வான்.வெறும் வேடிக்-கைக்-காக அல்ல, திரு-டி-யா-வது மற்-ற-வர்-க-ளை-விட அதி-கப்-ப-டி-யான பழங்-க-ளைத் தின்றே தீர்த்துவிடு-வது என்று தீர்-மா-னித்தே விட்-டான்.

செங்-கோ-ட-னின் செல்-லப்பிள்-ளை-யாக வளர்ந்து வந்-தது செவ்-வாழை. உழைப்பு அதி-கம் வய-லில். பண்ணை மானே-ஜ-ரின் ஆர்ப்-பாட்-டம் அதி-கம். இவ்-வ-ள-வை-யும் சகித்-துக்கொள்-வான். செவ்-வா-ழை-யைக் கண்-ட-தும் சக-ல-மும் மறந்-து-போ-கும்.

குழந்-தை-கள் அழு-தால், செவ்-வா-ழை-யைக் காட்-டித்-தான் சமா-தா-னப்-ப-டுத்-து-வான்! துஷ்-டத்-த-னம் செய்-கிற குழந்-தையை மிரட்-ட-வும், செவ்-வா-ழை-யைத்-தான் கவ-னப்-ப-டுத்-து-வான்!

குழந்-தை-கள், பிரி-ய-மா-கச் சாப்-பி-டு-வார்-கள், செவ்-வா-ழையை என்ற எண்-ணம் செங்-கோ-ட-னுக்கு. பண்ணை வீட்-டுப் பிள்-ளை-கள் ஆப்-பிள், திராட்சை தின்ன முடி-கிறது-கரி-ய-னும் முத்-து-வும், எப்-படி விலை உயர்ந்த அந்-தப் பழங்-க-ளைப் பெற முடி-யும்? செவ்-வா-ழை-யைத் தந்து தன் குழந்-தை-க-ளைக் குதூ-க-லிக்-கச் செய்ய வேண்-டும் என்ற எண்-ணந்-தான் செங்-கோ-டனை, அந்-தச் செவ்-வா-ழைக் கன்-றைச் செல்-ல-மாக வளர்க்-கும்-ப-டிச் செய்-தது. உழ-வன் செங்-கோ-ட-னி-டம், எவ்-வ-ளவு பாடு-பட்-டா-லும், குழந்-தை-க-ளுக்-குப் பழ-மும், பட்-ச-ண-மும், வாங்-கித் தரக்-கூ-டிய 'பணம்' எப்-ப-டிச் சேர முடி-யும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்-பவே உத-வும்-குப்-பி-யின் 'பாடு' குடும்-பத்-தின் பசி-யைப் போக்-கக் கொஞ்-சம் உத-வும். இப்-ப-டிப் பிழைப்பு! பல-னில் மிகப் பெரும் பகு-தியோ, பண்-ணைக்-குச் சேர்ந்து விடு-கிறது. இந்-தச் 'செவ்-வாழை' ஒன்-று-தான் அவன் சொந்-த-மாக மொத்-த-மாக பலன் பெறு-வ-தற்கு உத-வக்-கூ-டிய, உழைப்பு!இதிலே பங்கு பெற பண்-ணை-யார் குறுக்-கிட முடி-யா-தல்-லவா? அவ-ருக்-கா-கப் பாடு-பட்ட நேரம் போக, மிச்-ச-மி-ருப்-ப-திலே, அலுத்-துப் படுக்க வேண்-டிய நேரத்-திலே பாடு-பட்டு, கண்-ணைப் போல வளர்த்து வரும் செவ்-வாழை! இதன் முழுப் பய-னும் தன் குடும்-பத்-துக்கு! இது ஒன்-றி-லா-வது தான் பட்ட பாட்-டுக்கு உரிய பல-னைத் தானே பெற முடி-கி-றதே என்று சந்-தோ-ஷம் செங்-கோ-ட-னுக்கு.இவ்-வ-ள-வும் அவன் மன-திலே, தெளி-வா-கத் தோன்-றிய கருத்-து-கள் அல்ல. புகைப்-ப-ட-லம் போல, அந்த எண்-ணம் தோன்-றும், மறை-யும்-செவ்-வா-ழை-யைப் பார்க்-கும்-போது

பூரிப்-பு-டன் பெரு-மை-யும் அவன் அடைந்-த-தற்-குக் கார-ணம் இந்த எண்-ணந்-தான். கன்று வளர்ந்-தது கள்-ளங்-க-ப-ட-மின்றி.

செங்-கோ-ட-னுக்-குக் களிப்-பும் வளர்ந்-தது. செங்-கோ-ட-னின் குழந்-தை-க-ளுக்கு இப்-போது விளை-யாட்டு இடமே செவ்-வாழை இருந்த இடந்-தான்!

மல-ரி-டம் மங்-கை-ய-ருக்-கும், தேனி-டம் வண்-டு-க-ளுக்-கும் ஏற்-படும் பிரேமை போல, அந்-தக் குழந்-தை-க-ளுக்-குச் செவ்-வா-ழை-யி-டம் பாசம் ஏற்-பட்டு விட்-டது. "இன்-னும் ஒரு மாசத்-திலே குலை தள்-ளு-மாப்பா?" கரி-யன் கேட்-பான் ஆவ-லு-டன் செங்-கோ-டனை. "இரண்டு மாச-மா-கும்டா கண்ணு" என்று செங்-கோ-டன் பதி-ல-ளிப்-பான். செவ்-வாழை குலை தள்-ளிற்று-செங்-கோ-ட-னின் நடை-யி-லேயே ஒரு புது முறுக்கு ஏற்-பட்டு விட்-டது. நிமிர்ந்து பார்ப்-பான் குலையை பெரு-மை-யு-டன். பண்ணை பரந்-தாம முத-லி-யார், தமது மரு-ம-கப் பெண் முத்து-வி-ஜ-யா-வின் பொன்-னிற மேனியை அழ-கு-ப-டுத்-திய வைர மாலை-யைக் கூட அவ்-வ-ளவு பெரு-மை-யு-டன் பார்த்-தி-ருக்க மாட்-டார்! செங்-கோ-ட-னின் கண்-க-ளுக்கு அந்-தச் செவ்-வா-ழைக் குலை, முத்-து-வி-ஜ-யா-வின் வைர மாலை-யை-விட விலை-ம-திப்-புள்-ள-தா-கத்-தான் தோன்-றிற்று.

குலை முற்-ற-முற்ற செங்-கோ-ட-னின் குழந்-தை-க-ளின் ஆவ-லும், சச்-ச-ர-வும் பங்-குத் தக-ரா-றும், அப்-பா-வி-டமோ அம்-மா-வி-டமோ 'அப்-பீல்' செய்-வ-தும் ஓங்கி வள-ர-லா-யிற்று.

"எப்-போது பழ-மா-கும்?" என்று கேட்-பாள் பெண். 'எத்-தனை நாளைக்கு மரத்-தி-லேயே இருப்-பது?' என்று கேட்-பான் பையன்.செங்-கோ-டன், பக்-கு-வ-ம-றிந்து குலையை வெட்டி, பத-மா-கப் பழுக்க வைத்-துப் பிள்-ளை-க-ளுக்-குத் தர-வேண்-டு-மென்று எண்-ணிக் கொண்-டி-ருந்-தான். உழைப்-பின் விளைவு! முழுப் பலனை நாம் பெறப் போகி-றோம-இடையே தர-கர் இல்லை-முக்-காலே மூன்று வீசம் பாகத்-தைப் பறித்-துக் கொள்-ளும் முத-லாளி இல்லை. உழைப்பு நம்-மு-டை-யது என்-றா-லும் உடைமை

பண்-ணை-யா-ரு-டை-யது. அவர் எடுத்-துக் கொண்-டது போக மீதம் தானே தனக்கு என்று, வய-லில் விளை-யும் செந்-நெல்-லைப் பற்றி எண்ண வேண்-டும். அது-தானே முறை! ஆனால் இந்-தச் செவ்-வாழை அப்-படி அல்ல! உழைப்-பும் உடை-மை-யும் செங்-கோ-ட-னுக்கே சொந்-தம். இரண்டு நாளை-யில், குலையை வெட்-டி-வி-டத் தீர்-மா-னித்-தான். பிள்-ளை-கள் துள்-ளின சந்-தோ-ஷத்-தால். மற்ற உழ-வர் வீட்-டுப் பிள்-ளை-க-ளி-டம் 'சேதி' பறந்-தது. பழம் தர வேண்-டும் என்று சொல்லி, அவலோ, கட-லையோ, கிழங்கோ, மாம்-பிஞ்சோ, எதை எதையோ, 'அச்-சா-ரம்' கொடுத்-த-னர் பல குழந்-தை-கள் கரி-ய-னி-டம். பாடு-பட்-டோம், பல-னைப் பெறப் போகி-றோம், இதிலே ஏற்-ப-டு-கிற மகிழ்ச்-சிக்கு ஈடு எது-வும் இல்லை. இதைப் போலவே, வய-லி-லும் நாம் பாடு-ப-டு-வது நமக்கு முழுப்-ப-யன் அளிப்-ப-தாக இருந்-தால் எவ்-வ-ளவு இன்-ப-மாக இருக்-கும்!

செவ்-வா-ழைக்-காக நாம் செல-விட்ட உழைப்பு, பண்-ணை-யா-ரின் நிலத்-துக்-கா-கச் செல-விட்ட உழைப்-பிலே, நூற்-றுக்கு ஒரு பாகம் கூட இராது. ஆனால் உழைப்பு நம்-மு-டை-ய-தா-க-வும் வயல் அவ-ரு-டைய உடை-மை-யா-க-வும் இருந்-த-தால் பலனை அவர் அனு-ப-விக்-கி-றார் பெரும்-ப-குதி. இதோ, இந்-தச் செவ்-வாழை நம்-மக் கொல்-லை-யிலே நாம் உழைத்து வளர்த்-தது. எனவே பலன் நமக்-குக் கிடைக்-கிறது. இது-போல நாம் உழைத்-துப் பிழைக்க நம்-மு-டை-யது என்று ஒரு துண்டு வயல் இருந்-தால், எவ்-வ-ளவு இன்-ப-மாக இருக்-கும். அப்-படி ஒரு காலம் வருமா! உழைப்-ப-வ-னுக்-குத்-தான் நிலம் சொந்-தம். பாடு-ப-டா-த-வன் பண்-ணை-யா-ராக இருக்-கக் கூடாது என்று சொல்-லும் காலம் எப்-போ-தா-வது வருமா என்-றெல்-லாம் கூட, இலே-சா-கச் செங்-கோ-டன் எண்-ணத் தொடங்-கி-னான்.

செவ்-வாழை இது-போன்ற சித்-தாந்-தங்-க-ளைக் கிளறி விட்-டது அவன் மன-தில். குழந்-தை-க-ளுக்கோ நாக்-கிலே நீர் ஊற-லா-யிற்று.

செங்-கோ-டன் செவ்-வா-ழைக் குலை-யைக் கண்டு களித்-தி-ருந்த சம-யம், பண்ணை பரந்-தா-மர், தமது மரு-ம-கப் பெண் முத்-து-வி-ஜ-யத்-தின் பிறந்-த-நாள் விழாவை விம-ரி-சை-யா-கக் கொண்-டாட ஏற்-பா-டு-கள் செய்து கொண்-டி-ருந்-தார்.

அம்-பிகை கோயி-லில் அபி-ஷேக ஆரா-தனை செய்-வ-தற்-காக, 'ஐய-ரி-டம்' சொல்லி விட்-டார். கணக்-கப்-பிள்-ளை-யைக் கூப்-பிட்டு, 'பட்டி' தயா-ரிக்-கச் சொன்-னார். பல பண்-டங்-க-ளைப் பற்-றிக் குறிப்பு எழு-தும் போது, 'பழம்' தேவை என்று தோன்-றா-ம-லி-ருக்-குமா? 'இரண்டு சீப்பு வாழைப்-ப-ழம்' என்-றார் பண்-ணை-யார்.

"ஏனுங்க பழம்.. கடை-யிலே நல்ல பழமே இல்லை. பச்சை நாடன்-தான் இருக்கு" என்று இழுத்-தான் சுந்-த-ரம், கணக்-கப்-பிள்ளை. "சரிடா, அதி-லே-தான் இரண்டு சீப்பு வாங்-கேன்? வேறே நல்ல பழமா எங்கே இருக்கு!" என்று பண்-ணை-யார் சொல்லி முடிப்-ப-தற்-குள், சுந்-த-ரம், "நம்ம செங்-கோ-டன் கொல்-லை-யிலே, தரமா, ஒரு செவ்-வாழைக் குலை இருக்-கு-துங்க. அதைக் கொண்-டு-கிட்டு வர-லாம்," என்-றான். "சரி" என்-றார் பண்-ணை-யார். செங்-கோ-ட-னின் செவ்-வா-ழைக் குலை! அவ-னு-டைய இன்-பக் கனவு!! உழைப்-பின் விளைவு!! குழந்-தை-க-ளின் குதூ-க-லம்!! அதற்கு மரண ஓலை தயா-ரித்து விட்-டான் சுந்-த-ரம்! எத்-த-னையோ பகல் பார்த்-துப் பார்த்து, செங்-கோ-ட-னின் குடும்-பம் பூரா-வும் பூரித்-தது அந்-தக் குலையை! அதற்-குக் கொலைகா-ர-னான் சுந்-த-ரம்.

மகிழ்ச்சி, பெருமை, நம்-பிக்கை இவற்றைத் தந்து வந்த, அந்-தச் செவ்-வா-ழைக் குலைக்கு வந்-தது ஆபத்து.

தெரு-விலே, சுந்-த-ர-மும் செங்-கோ-ட-னும் பேசும்-போது குழந்-தை-கள், செவ்-வா-ழை-யைப் பற்-றி-ய-தாக இருக்-கும் என்று எண்-ணவே இல்லை!

செங்-கோ-ட-னுக்-குத் தலை கிறு-கி-று-வென்று சுற்-றிற்று. நாக்-குக் குழ-றிற்று, வார்த்-தை-கள் குபு-கு-பு-வென்று கிளம்பி, தொண்-டை-யில் சிக்-கிக் கொண்-டன.

மாட்-டுப் பெண்-ணுக்குப் பிறந்த நாள் பூஜை என்று கார-ணம் காட்-டி-னான் சுந்-த-ரம். என்ன செய்-வான் செங்-கோடன்! என்ன சொல்-வான்?

அவன் உள்-ளத்-திலே, வாழை-யோடு சேர்ந்து வளர்ந்த ஆசை; அவன் குழந்-தை-க-ளின் நாக்-கில் நீர் ஊறச்-செய்த ஆசை; இன்று, நாளை, என்று நாள் பார்த்-துக் கொண்-டி-ருந்த ஆவல் எனும் எதைத்-தான் சொல்ல முடி-யும்? கேட்-ப-வர் பண்ணை பரந்-தா-மர்! எவ்-வ-ளவு அல்-ப-னடா, வாழைக் குலையை அவர் வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்-டாக மதித்-துக் கேட்-ட-னுப்-பி-னால் முடி-யாது என்று சொல்லி விட்-டாயே! அவ-ரு-டைய உப்-பைத் தின்று பிழைக்-கி-ற-வ-னுக்கு இவ்-வ-ளவு நன்றி கெட்-ட-த-னமா? கேவ-லம், ஒரு வாழைக்-குலை! அவ-ரு-டைய அந்-தஸ்-துக்கு இது ஒரு பிர-மா-தமா! என்று ஊர் ஏசு-கிறது போல் அவன் கண்-க-ளுக்-குத் தெரி-கிறது.

'அப்பா! ஆசை காட்டி மோசம் செய்-யாதே! நான் கூடத்-தான் தண்-ணீர் பாய்ச்-சி-னேன். மாடு மிதித்து விடா-த-படி பாது-காத்-தேன். செவ்-வாழை ரொம்ப ருசி-யாக இருக்-கும். கல்-கண்டு போல இருக்-கும் என்று நீதானே என்-னி-டம் சொன்-னாய்.

"அப்பா! தங்-கச்-சிக்-குக்கூட, 'உசிர்' அந்-தப் பழத்-தி-டம். மரத்தை அண்-ணாந்து பார்க்-கும்-போதே, நாக்-கிலே நீர் ஊறும். எங்-க-ளுக்-குத் தரு-வ-தா-கச் சொல்-லி-விட்டு, இப்-பொ-ழுது ஏமாற்-று-கி-றாயே. நாங்-கள் என்-னப்பா, உன்னை கடை-யிலே காசு போட்-டுத் திராட்சை, கம-லாவா வாங்-கித் தரச் சொன்-னோம்.

"நம்ம கொல்-லை-யிலே நாம் வளர்த்-த-தல்-லவா!" என்று அழு-கு-ர-லு-டன் கேட்-கும் குழந்-தை-களும், 'குழந்-தை-க-ளைத் தவிக்-கச் செய்-கி-றாயே, நியா-யமா?" என்று கோபத்-து-டன் கேட்-கும் மனை-வி-யும், அவன் மனக்-கண்-க-ளுக்-குத் தெரிந்-த-னர்!

எதிரே நின்-ற-வரோ, பண்-ணைக் கணக்-கப்-பிள்ளை! அரி-வாள் இருக்கு-மி-டம் சென்-றான்.

'அப்பா, குலையை வெட்-டப் போறாரு, செவ்-வா-ழைக்-குலை' என்று ஆனந்-தக் கூச்-ச-லிட்-டுக் கொண்டு, குழந்-தை-கள் கூத்-தா-டின. செங்-கோ-ட-னின் கண்-க-ளிலே நீர்த்-து-ளி-கள் கிளம்-பின!

குலையை வெட்-டி-னான். உள்ளே கொண்டு வந்-தான். அரி-வா-ளைக் கீழே போட்-டான். "குலை-யைக் கீழே வை அப்பா, தொட்-டுப் பார்க்-க-லாம்," என்று குதித்-தன குழந்-தை-கள். கரி-ய-னின் முது-கைத் தட-வி-னான் செங்-கோ-டன்.

"கண்ணு! இந்-தக் குலை, நம்ம ஆண்-டைக்கு வேணு-மாம் கொண்டு போகி-றேன், அழா-தீங்க. இன்-னும் ஒரு மாசத்-திலே, பக்-கத்-துக் கண்ணு மர-மா-கிக் குலை தள்-ளும். அத உங்-க-ளுக்-குக் கட்-டா-ய-மா-கக் கொடுத்து விட-றேன்," என்று கூறிக்-கொண்டே, வீட்டை விட்-டுக் கிளம்-பி-னான், குழந்-தை-யின் அழு-கு-ரல் மன-தைப் பிளப்-ப-தற்-குள்.செங்-கோ-டன் குடிசை, அன்று பிணம் விழுந்த இடம் போலா-யிற்று.

இரவு நெடு-நே-ரத்-திற்-குப் பிற-கு-தான் செங்-கோ-ட-னுக்-குத் துணிவு பிறந்-தது வீட்-டுக்கு வர! அழுது அலுத்-துத் தூங்-கி-விட்ட குழந்-தை-க-ளைப் பார்த்-தான்.

அவன் கண்-க-ளிலே, குபு-கு-பு-வெனக் கண்-ணீர் கிளம்-பிற்று. துடைத்-துக்கொண்டு, படுத்-துப் புரண்-டான். அவன் மன-திலே ஆயி-ரம் எண்-ணங்-கள். செவ்-வா-ழையை, செல்-லப்-பிள்-ளை-போல் வளர்த்து என்ன பலன்...! அவ-ருக்கு அது ஒரு பிர-மா-த-மல்ல. ஆயி-ரம் குலை-க-ளை-யும் அவர் நினைத்த மாத்-தி-ரத்-தில் வாங்க முடி-யும்! ஆனால் செங்கோடனுக்கு..? அந்த ஒரு குலை-யைக் காண அவன் எவ்-வ-ளவு பாடு-பட்-டான்.

எத்-தனை இரவு அதைப் பற்றி இன்-ப-மான கன-வு-கள். எத்-தனை ஆயி-ரம் தடவை, குழந்-தை-க-ளுக்கு ஆசை காட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்-கறை எத்-துணை! எல்லாம் ஒரு நொடி-யில் அழிந்-தன!

நாலு நாட்-க-ளுக்-குப் பிறகு, வெள்-ளித் தட்-டிலே, ஒரு சீப்பு செவ்-வா-ழைப் பழத்தை வைத்துக் கொண்டு, அன்-ன-நடை நடந்து அழகுமுத்துவிஜயா அம்-பிகை ஆல-யத்-துக்-குச் சென்-றாள்.

நாலு நாட்-கள் சமா-தா-னம் சொல்-லி-யும், குழந்-தை-க-ளின் குமு-றல் ஓய-வில்லை. கரி-யன் ஒரே பிடி-வா-தம் செய்-தான், ஒரு பழம் வேண்டு-மென்று.

குப்பி, ஒரு கால-ணாவை எடுத்-துக் கொடுத்-த-னுப்-பி-னாள் பழம் வாங்-கிக் கொள்-ளச் சொல்லி. பறந்-தோ-டி-னான் கரி-யன். கடை-யிலே செவ்-வா-ழைச் சீப்பு, அழ-கா-கத் தொங்-கிக் கொண்-டி-ருந்-தது.

கணக்-கப்-பிள்ளை பண்ணை வீட்-டிலே இருந்து நாலு சீப்பை முத-லி-லேயே தீர்த்-து-விட்-டான். அவன் விற்-றான் கடைக்-கா-ர-னுக்கு, அதன் எதிரே, ஏக்-கத்-து-டன் நின்-றான் கரி-யன்!

"பழம், ஒரு அணாடா, பயலே, கால-ணா-வுக்-குச் செவ்-வாழை கிடைக்-குமா... போடா" என்று விரட்-டி-னான், கடைக்-கா-ரன்.

கரி-யன் அறி-வானா, பாபம், தன் கொல்-லை-யிலே இருந்த செவ்-வாழை, இப்-போது கடை-யில் கொலு வீற்-றி-ருக்-கிறது என்ற விந்-தையை! பாபம்! எத்-த-னையோ நாள் அந்-தச் சிறு-வன், தண்-ணீர் பாய்ச்-சி-னான், பழம் கிடைக்-கு-மென்று! பழம் இருக்-கிறது; கரி-ய-னுக்கு எட்-டாத இடத்-தில்! விசா-ரத்-தோடு வீட்-டிற்கு வந்-தான் வறுத்த கட-லையை வாங்-கிக் கொரித்-துக்கொண்டே.

செங்-கோ-டன் கொல்-லைப்-பு-றத்-தி-ல் இருந்து வெளியே வந்-தான் வாழை மரத்-துண்-டு-டன்.

"ஏம்பா! இது-வும் பண்ணை வீட்-டுக்கா?" என்று கேட்-டான் கரி-யன். "இல்-லேடா, கண்ணு! நம்ம பார்-வதி பாட்டி செத்-துப் போயிட்டா, அந்-தப் பாடை-யிலே கட்ட," என்-றான் செங்-கோ-டன். அலங்-கா-ரப் பாடை-யிலே, செவ்-வா-ழை-யின் துண்டு!

பாடை-யைச் சுற்றி அழு-கு-ரல்! கரி-ய-னும், மற்-றக் குழந்-தை-களும் பின்-பக்-கம். கரி-யன் பெரு-மை-யா-கப் பாடை-யைக் காட்-டிச் சொன்-னான்.

"எங்க வீட்-டுச் செவ்-வா-ழை-யடா" என்று. "எங்க கொல்-லை-யிலே இருந்த செவ்-வா-ழைக் குலை-யைப் பண்ணை வீட்-டுக்-குக் கொடுத்து விட்-டோம். மரத்தை வெட்டி 'பாடை'யிலே கட்டி விட்-டோம்," என்-றான் கரி-யன். பாபம் சிறு-வன்-தானே!! அவன் என்ன கண்-டான், செங்-கோ-ட-னின் செவ்-வாழை, தொழி-லா-ளர் உல-கிலே சர்வ சாதா-ர-ணச் சம்-ப-வம் என்-பதை. *

கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்

மேலகரம் மே. க. ராமசாமிப் பிள்ளை அவர்களின் ஏகபுத்திரனும் செல்லப்பா என்பவருமான மேலகரம் மே. க. ரா. கந்தசாமிப் பிள்ளையவர்கள், 'பிராட்வே'யும் 'எஸ்பிளனேடு'ம் கூடுகிற சந்தியில் ஆபத்தில்லாத ஓரத்தில் நின்றுகொண்டு வெகு தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார். 'டிராமில் ஏறிச்சென்றால் ஒன்றே காலணா. காலணா மிஞ்சும். பக்கத்துக் கடையில் வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டு வீட்டுக்கு நடந்து விடலாம். பஸ்ஸில் ஏறிக் கண்டக்டரை ஏமாற்றிக் கொண்டே ஸென்ட்ரலைக் கடந்துவிட்டு அப்புறம் டிக்கட் வாங்கித் திருவல்லிக்கேணிக்குப் போனால் அரைக் 'கப்' காப்பி குடித்துவிட்டு வீட்டுக்குப் போகலாம்; ஆனால் வெற்றிலை கிடையாது...'

'கண்டக்டர்தான் என்னை ஏமாற்று ஏமாற்று என்று வெற்றிலை வைத்து அழைக்கும்போது அவனை ஏமாற்றுவது, அதாவது அவனை ஏமாறாமல் ஏமாற்றுவது தர்ம விரோதம். நேற்று அவன் அப்படிக் கேட்டபடி ஸென்ட்ரலிலிருந்து மட்டும் கொடுத்திருந்தால் காப்பி சாப்பிட்டிருக்கலாம்.'

'இப்பொழுது காப்பி சாப்பிட்டால் கொஞ்சம் விறுவிறுப்பாகத் தான் இருக்கும்.'

இப்படியாக மேற்படியூர் மேற்படி விலாசப் பிள்ளையவர்கள் தர்ம விசாரத்தில் ஈடுபட்டிருக்கும் பொழுதுதான் அவருக்குக் கடவுள் பிரசன்னமானார்.

திடீரென்று அவருடைய புத்தி பரவசத்தால் மருளும்படித் தோன்றி, "இந்தா, பிடி வரத்தை" என்று வற்புறுத்தவில்லை.

"ஐயா, திருவல்லிக்கேணிக்கு எப்படிப் போகிறது?" என்று தான் கேட்டார்.

"டிராமிலும் போகலாம், பஸ்ஸிலும் போகலாம், கேட்டுக் கேட்டு நடந்தும் போகலாம்; மதுரைக்கு வழி வாயிலே" என்றார் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை.

"நான் மதுரைக்குப் போகவில்லை; திருவல்லிக்கேணிக்குத்தான் வழி கேட்டேன்; எப்படிப் போனால் சுருக்க வழி?" என்றார் கடவுள். இரண்டு பேரும் விழுந்துவிழுந்து சிரித்தார்கள்.

சாடி மோதித் தள்ளிக்கொண்டு நடமாடும் ஜனக் கூட்டத்திலிருந்து விலகி, செருப்பு ரிப்பேர் செய்யும் சக்கிலியன் பக்கமாக இருவரும் ஒதுங்கி நின்றார்கள்.

மேலகரம் ராமசாமிப் பிள்ளையின் வாரிசுக்கு நாற்பத்தைந்து வயசு; நாற்பத்தைந்து வருஷங்களாக அன்ன ஆகாரமில்லாமல் வளர்ந்தவர் போன்ற தேகக் கட்டு; சில கறுப்பு மயிர்களும் உள்ள நரைத்த தலை; இரண்டு வாரங்களாக க்ஷவரம் செய்யாத முகவெட்டு; எந்த ஜனக் கும்பலிலும், எவ்வளவு தூரத்திலும் போகும் நண்பர்களையும் கொத்திப் பிடிக்கும் அதிதீட்சண்யமான கண்கள்; காரிக்கம் ஷர்ட், காரிக்கம் வேஷ்டி, காரிக்கம் மேல் அங்கவஸ்திரம்.

வழி கேட்டவரைக் கந்தசாமிப் பிள்ளை கூர்ந்து கவனித்தார். வயசை நிர்ணயமாகச் சொல்ல முடியவில்லை. அறுபது இருக்கலாம்; அறுபதினாயிரமும் இருக்கலாம். ஆனால் அத்தனை வருஷமும் சாப்பாட்டுக் கவலையே இல்லாமல் கொழுகொழு என்று வளர்ந்த மேனி வளப்பம்.

தலையிலே துளிக்கூடக் கறுப்பில்லாமல் நரைத்த சிகை, கோதிக் கட்டாமல் சிங்கத்தின் பிடரிமயிர் மாதிரி கழுத்தில் விழுந்து சிலிர்த்துக் கொண்டு நின்றது. கழுத்திலே நட்ட நடுவில் பெரிய கறுப்பு மறு. கண்ணும் கன்னங்கரேலென்று, நாலு திசையிலும் சுழன்று, சுழன்று வெட்டியது. சில சமயம் வெறியனுடையது போலக் கனிந்தது. சிரிப்பு? அந்தச் சிரிப்பு, கந்தசாமிப் பிள்ளையைச் சில சமயம் பயமுறுத்தியது. சில சமயம் குழந்தையுடையதைப் போலக் கொஞ்சியது.

"ரொம்பத் தாகமாக இருக்கிறது" என்றார் கடவுள்.

"இங்கே ஜலம் கிலம் கிடைக்காது; வேணுமென்றால் காப்பி சாப்பிடலாம்; அதோ இருக்கிறது காப்பி ஹோட்டல்" என்றார் கந்தசாமிப் பிள்ளை. "வாருங்களேன், அதைத்தான் சாப்பிட்டுப் பார்ப்போம்" என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை பெரிய அபேதவாதி. அன்னியர், தெரிந்தவர் என்ற அற்ப பேதங்களைப் பாராட்டுகிறவர் அல்லர்.

"சரி, வாருங்கள் போவோம்" என்றார். 'பில்லை நம் தலையில் கட்டிவிடப் பார்த்தால்?' என்ற சந்தேகம் தட்டியது. 'துணிச்சல் இல்லாதவரையில் துன்பந்தான்' என்பது கந்தசாமிப் பிள்ளையின் சங்கற்பம்.

இருவரும் ஒரு பெரிய ஹோட்டலுக்குள் நுழைந்தனர். கடவுள் கந்தசாமிப் பிள்ளையின் பின்புறமாக ஒண்டிக்கொண்டு பின் தொடர்ந்தார்.

இருவரும் ஒரு மேஜையருகில் உட்கார்ந்தார்கள். பையனுக்கு மனப்பாடம் ஒப்பிக்க இடங் கொடுக்காமல், "சூடா, ஸ்ட்ராங்கா இரண்டு கப் காப்பி!" என்று தலையை உலுக்கினார்

கந்தசாமிப் பிள்ளை.

"தமிழை மறந்துவிடாதே. இரண்டு கப் காப்பிகள் என்று சொல்" என்றார் கடவுள்.

"அப்படி அல்ல; இரண்டு கப்கள் காப்பி என்று சொல்ல வேண்டும்" என்று தமிழ்க் கொடி நாட்டினார் பிள்ளை.

முறியடிக்கப்பட்ட கடவுள் அண்ணாந்து பார்த்தார். "நல்ல உயரமான கட்டிடமாக இருக்கிறது; வெளிச்சமும் நன்றாக வருகிறது" என்றார்.

"பின்னே பெரிய ஹோட்டல் கோழிக் குடில் மாதிரி இருக்குமோ? கோவில் கட்டுகிறது போல என்று நினைத்துக் கொண்டீராக்கும்! சுகாதார உத்தியோகஸ்தர்கள் விடமாட்டார்கள்" என்று தமது வெற்றியைத் தொடர்ந்து முடுக்கினார் பிள்ளை.

கோவில் என்ற பதம் காதில் விழுந்ததும் கடவுளுக்கு உடம்பெல்லாம் நடுநடுங்கியது.

"அப்படி என்றால்...?" என்றார் கடவுள். தோற்றாலும் விடவில்லை. "சுகாதாரம் என்றால் என்ன என்று சொல்லும்?" என்று கேட்டார் கடவுள்.

"ஓ! அதுவா? மேஜையை லோஷன் போட்டுக் கழுவி, உத்தியோகஸ்தர்கள் அபராதம் போடாமல் பார்த்துக் கொள்வது. பள்ளிக்கூடத்திலே, பரீட்சையில் பையன்கள் தோற்றுப் போவதற்கென்று சொல்லிக் கொடுக்கும் ஒரு பாடம்; அதன்படி இந்த ஈ, கொசு எல்லாம் ராக்ஷசர்களுக்குச் சமானம். அதிலும் இந்த மாதிரி ஹோட்டல்களுக்குள்ளே வந்துவிட்டால் ஆபத்துதான். உயிர் தப்பாது என்று எழுதியிருக்கிறார்கள்" என்றார் கந்தசாமிப் பிள்ளை. அவருக்கே அதிசயமாக இருந்தது இந்தப் பேச்சு. நாக்கில் சரஸ்வதி கடாட்சம் ஏற்பட்டுவிட்டதோ என்று சந்தேகித்தார்.

கடவுள் அவரைக் கவனிக்கவில்லை. இவர்கள் வருவதற்கு முன் ஒருவர் சிந்திவிட்டுப் போன காப்பியில் சிக்கிக் கொண்டு தவிக்கும் ஈ ஒன்றைக் கடவுள் பார்த்துக் கொண்டே இருந்தார். அது முக்கி முனகி ஈரத்தைவிட்டு வெளியே வர முயன்று கொண்டிருந்தது.

"இதோ இருக்கிறதே!" என்றார் கடவுள். உதவி செய்வதற்காக விரலை நீட்டினார். அது பறந்துவிட்டது. ஆனால் எச்சில் காப்பி அவர் விரலில் பட்டது.

"என்ன ஐயா, எச்சிலைத் தொட்டுவிட்டீரே! இந்த ஜலத்தை எடுத்து மேஜைக்குக் கீழே கழுவும்" என்றார் பிள்ளை.

"ஈயை வரவிடக்கூடாது, ஆனால் மேஜையின் கீழே கழுவ வேண்டும் என்பது சுகாதாரம்" என்று முனகிக் கொண்டார் கடவுள்.

பையன் இரண்டு 'கப்' காப்பி கொண்டுவந்து வைத்தான்.

கடவுள் காப்பியை எடுத்துப் பருகினார். சோமபானம் செய்த தேவகளை முகத்தில் தெறித்தது.

"நம்முடைய லீலை" என்றார் கடவுள்.

"உம்முடைய லீலை இல்லைங்காணும், ஹோட்டல்காரன் லீலை. அவன் சிக்கரிப் பவுடரைப் போட்டு வைத்திருக்கிறான்; உம்முடைய லீலை எல்லாம் பில் கொடுக்கிற படலத்திலே" என்று காதோடு காதாய்ச் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை. சூசகமாகப் பில் பிரச்சனையைத் தீர்த்துவிட்டதாக அவருக்கு ஓர் எக்களிப்பு.

"சிக்கரிப் பவுடர் என்றால்...?" என்று சற்றுச் சந்தேகத்துடன் தலையை நிமிர்த்தினார் கடவுள்.

"சிக்கரிப் பவுடர், காப்பி மாதிரிதான் இருக்கும்; ஆனால் காப்பி அல்ல; சிலபேர் தெய்வத்தின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஊரை ஏமாற்றிவருகிற மாதிரி" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

தெய்வம் என்றதும் திடுக்கிட்டார் கடவுள்.

பெட்டியடியில் பில்லைக் கொடுக்கும்பொழுது, கடவுள் புத்தம்புதிய நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டினார்; கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார்.

"சில்லறை கேட்டால் தரமாட்டேனா? அதற்காக மூன்றணா பில் எதற்கு? கண்ணைத் துடைக்கவா, மனசைத் துடைக்கவா?" என்றார் ஹோட்டல் சொந்தக்காரர்.

"நாங்கள் காப்பி சாப்பிடத்தான் வந்தோம்" என்றார் கடவுள்.

"அப்படியானால் சில்லறையை வைத்துக்கொண்டு வந்திருப்பீர்களே?" என்றார் ஹோட்டல் முதலாளி. அதற்குள் சாப்பிட்டுவிட்டு வெளியே காத்திருப்போர் கூட்டம் ஜாஸ்தியாக, வீண் கலாட்டா வேண்டாம் என்று சில்லறையை எண்ணிக் கொடுத்தார். "தொண்ணூற்று ஒன்பது ரூபாய் பதின்மூன்று - சரியா? பார்த்துக்கொள்ளும் சாமியாரே!"

"நீங்கள் சொல்லிவிட்டால் நமக்கும் சரிதான்; எனக்குக் கணக்கு வராது" என்றார் கடவுள்.

ஒரு போலிப் பத்து ரூபாய் நோட்டைத் தள்ளிவிட்டதில் கடைக்காரருக்கு ஒரு திருப்தி.

வெளியே இருவரும் வந்தார்கள். வாசலில் அவ்வளவு கூட்டமில்லை. இருவரும் நின்றார்கள்.

கடவுள், தம் கையில் கற்றையாக அடுக்கியிருந்த நோட்டுக்களில் ஐந்தாவதை மட்டும் எடுத்தார். சுக்கு நூறாகக் கிழித்துக் கீழே எறிந்தார்.

கந்தசாமிப் பிள்ளைக்கு, பக்கத்தில் நிற்பவர் பைத்தியமோ என்ற சந்தேகம். திடுக்கிட்டு வாயைப் பிளந்து கொண்டு நின்றார்.

"கள்ள நோட்டு; என்னை ஏமாற்றப் பார்த்தான்; நான் அவனை ஏமாற்றிவிட்டேன்" என்றார் கடவுள். அவருடைய சிரிப்பு பயமாக இருந்தது.

"என் கையில் கொடுத்தால், பாப்பான் குடுமியைப் பிடித்து மாற்றிக் கொண்டு வந்திருப்பேனே!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"சிக்கரிப் பவுடருக்கு நீர் உடன்பட்டீரா இல்லையா? அந்த மாதிரி இதற்கு நான் உடன்பட்டேன் என்று வைத்துக்கொள்ளும். அவனுக்குப் பத்து ரூபாய்தான் பெரிசு; அதனால்தான் அவனை ஏமாற்றும்படி விட்டேன்" என்றார் கடவுள்.

வலிய வந்து காப்பி வாங்கிக் கொடுத்தவரிடம் எப்படி விடைபெற்றுக் கொள்வது என்று பட்டது கந்தசாமிப் பிள்ளைக்கு.

"திருவல்லிக்கேணிக்குத்தானே? வாருங்கள் டிராமில் ஏறுவோம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அது வேண்டவே வேண்டாம்; எனக்குத் தலை சுற்றும்; மெதுவாக நடந்தே போய்விடலாமே" என்றார் கடவுள்.

"ஐயா, நான் பகலெல்லாம் காலால் நடந்தாச்சு. என்னால் அடி எடுத்து வைக்க முடியாது; ரிக்ஷாவிலே ஏறிப் போகலாமே" என்றார் கந்தசாமிப் பிள்ளை. 'நாம்தாம் வழி காட்டுகிறோமே; பத்து ரூபாய் நோட்டைக் கிழிக்கக் கூடியவர் கொடுத்தால் என்ன?' என்பதுதான் அவருடைய கட்சி.

"நர வாகனமா? அதுதான் சிலாக்கியமானது" என்றார் கடவுள்.

இரண்டு பேரும் ரிக்ஷாவில் ஏறிக் கொண்டார்கள். "சாமி, கொஞ்சம் இருங்க; வெளக்கை ஏத்திக்கிறேன்" என்றான் ரிக்ஷாக்காரன்.

பொழுது மங்கி, மின்சார வெளிச்சம் மிஞ்சியது.

"இவ்வளவு சீக்கிரத்தில் அன்னியோன்னியமாகி விட்டோ மே! நீங்கள் யார் என்றுகூட எனக்குத் தெரியாது; நான் யார் என்று உங்களுக்குத் தெரியாது. பட்டணத்துச் சந்தை இரைச்சலிலே இப்படிச் சந்திக்க வேண்டுமென்றால்..."

கடவுள் சிரித்தார். பல், இருட்டில் மோகனமாக மின்னியது. "நான் யார் என்பது இருக்கட்டும். நீங்கள் யார் என்பதைச் சொல்லுங்களேன்" என்றார் அவர்.

கந்தசாமிப் பிள்ளைக்குத் தம்மைப் பற்றிச் சொல்லிக் கொள்வதில் எப்பொழுதுமே ஒரு தனி உத்ஸாகம். அதிலும் ஒருவன் ஓடுகிற ரிக்ஷாவில் தம்மிடம் அகப்பட்டுக்கொண்டால் விட்டுவைப்பாரா? கனைத்துக் கொண்டு ஆரம்பித்தார்.

"சித்த வைத்திய தீபிகை என்ற வைத்தியப் பத்திரிகையைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

"இல்லை" என்றார் கடவுள்.

"அப்பொழுது வைத்திய சாஸ்திரத்தில் பரிச்சயமில்லை என்றுதான் கொள்ள வேண்டும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"பரிச்சயம் உண்டு" என்றார் கடவுள்.

'இதென்னடா சங்கடமாக இருக்கிறது?' என்று யோசித்தார் கந்தசாமிப் பிள்ளை. "உங்களுக்கு வைத்திய சாஸ்திரத்தில் பரிசயமுண்டு; ஆனால் சித்த வைத்திய தீபிகையுடன் பரிசயமில்லை என்று கொள்வோம்; அப்படியாயின் உங்கள் வைத்திய சாஸ்திர ஞானம் பரிபூர்ணமாகவில்லை. நம்மிடம் பதினேழு வருஷத்து இதழ்களும் பைண்டு வால்யூம்களாக

இருக்கின்றன. நீங்கள் அவசியம் வீட்டுக்கு ஒரு முறை வந்து அவற்றைப் படிக்க வேண்டும்; அப்பொழுதுதான்..."

'பதினேழு வருஷ இதழ்களா? பதினேழு பன்னிரண்டு இருநூற்று நாலு.' கடவுளின் மனசு நடுநடுங்கியது. 'ஒருவேளை கால் வருஷம் ஒருமுறைப் பத்திரிகையாக இருக்கலாம்' என்ற ஓர் அற்ப நம்பிக்கை தோன்றியது.

"தீபிகை மாதம் ஒரு முறைப் பத்திரிகை. வருஷ சந்தா உள் நாட்டுக்கு ரூபாய் ஒன்று; வெளிநாடு என்றால் இரண்டே முக்கால்; ஜீவிய சந்தா ரூபாய் 25. நீங்கள் சந்தாதாராகச் சேர்ந்தால் ரொம்பப் பிரயோஜனம் உண்டு; வேண்டுமானால் ஒரு வருஷம் உங்களுக்கு அனுப்புகிறேன். அப்புறம் ஜீவிய சந்தாவைப் பார்க்கலாம்" என்று கடவுளைச் சந்தாதாராகச் சேர்க்கவும் முயன்றார்.

'பதினேழு வால்யூம்கள் தவிர, இன்னும் இருபத்தைந்து ரூபாயை வாங்கிக்கொண்டு ஓட ஓட விரட்டலாம் என்று நினைக்கிறாரா? அதற்கு ஒரு நாளும் இடம் கொடுக்கக் கூடாது' என்று யோசித்து விட்டு, "யாருடைய ஜீவியம்?" என்று கேட்டார் கடவுள்.

"உங்கள் ஆயுள்தான். என் ஆயுளும் அல்ல, பத்திரிகை ஆயுளும் அல்ல; அது அழியாத வஸ்து. நான் போனாலும் வேறு ஒருவர் சித்த வைத்திய தீபிகையை நடத்திக்கொண்டுதான் இருப்பார்; அதற்கும் ஏற்பாடு பண்ணியாச்சு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

இந்தச் சமயம் பார்த்து ரிக்ஷாக்காரன் வண்டி வேகத்தை நிதானமாக்கிவிட்டுப் பின்புறமாகத் திரும்பிப் பார்த்தான்.

வேகம் குறைந்தால் எங்கே வண்டியில் இருக்கிற ஆசாமி குதித்து ஓடிப்போவாரோ என்று கந்தசாமிப் பிள்ளைக்குப் பயம்.

"என்னடா திரும்பிப் பார்க்கிறே? மோட்டார் வருது, மோதிக்காதே; வேகமாகப் போ" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்ன சாமி, நீங்க என்ன மனுசப்பெறவியா அல்லது பிசாசுங்களா? வண்டியிலே ஆளே இல்லாத மாதிரி காத்தாட்டம் இருக்கு" என்றான் ரிக்ஷாக்காரன்.

"வாடகையும் காத்தாட்டமே தோணும்படி குடுக்கிறோம்; நீ வண்டியே இஸ்துக்கினு போ" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"தவிரவும் நான் வைத்தியத் தொழிலும் நடத்தி வருகிறேன்; சித்த முறைதான் அநுஷ்டானம். வைத்தியத்திலே வருவது பத்திரிகைக்பத்திரிகைக்கும், குடும்பத்துக்கும் கொஞ்சம் குறையப் போதும். இந்த இதழிலே ரசக்கட்டைப் பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கேன்; பாருங்கோ, நமக்கு ஒரு பழைய சுவடி ஒன்று கிடைத்தது; அதிலே பல அபூர்வப் பிரயோகம் எல்லாம் சொல்லியிருக்கு" என்று ஆரம்பித்தார் கந்தசாமிப் பிள்ளை.

'ஏதேது, மகன் ஓய்கிற வழியாய்க் காணமே' என்று நினைத்தார் கடவுள். "தினம் சராசரி எத்தனை பேரை வேட்டு வைப்பீர்?" என்று கேட்டார்.

"பெருமையாகச் சொல்லிக்கொள்ளும்படி அவ்வளவு ஒன்றுமில்லை. மேலும் உங்களுக்கு, நான் வைத்தியத்தை ஜீவனோபாயமாக வைத்திருக்கிறேன் என்பது ஞாபகம் இருக்க வேண்டும். வியாதியும் கூடுமானவரையில் அகன்றுவிடக்கூடாது. ஆசாமியும் தீர்ந்துவிடக்கூடாது. அப்பொழுதுதான், சிகிச்சைக்கு வந்தவனிடம் வியாதியை ஒரு வியாபாரமாக வைத்து நடத்த முடியும். ஆள் அல்லது வியாது என்று முரட்டுத்தனமாகச் சிகிச்சை பண்ணினால், தொழில் நடக்காது. வியாதியும் வேகம் குறைந்து படிப்படியாகக் குணமாக வேண்டும். மருந்தும் வியாதிக்கோ மனுஷனுக்கோ கெடுதல் தந்து விடக் கூடாது. இதுதான் வியாபார முறை. இல்லாவிட்டால் இந்தப் பதினேழு வருஷங்களாகப் பத்திரிகை நடத்திக் கொண்டிருக்க முடியுமா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் விஷயம் புரிந்தவர் போலத் தலையை ஆட்டினார்.

"இப்படி உங்கள் கையைக் காட்டுங்கள், நாடி எப்படி அடிக்கிறது என்று பார்ப்போம்" என்று கடவுளின் வலது கையைப் பிடித்தார் கந்தசாமிப் பிள்ளை.

"ஓடுகிற வண்டியில் இருந்துகொண்டா?" என்று சிரித்தார் கடவுள்.

"அது வைத்தியனுடைய திறமையைப் பொறுத்தது" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

நாடியைச் சில விநாடிகள் கவனமாகப் பார்த்தார். "பித்தம் ஏறி அடிக்கிறது; விஷப் பிரயோகமும் பழக்கம் உண்டோ ?" என்று கொஞ்சம் விநயத்துடன் கேட்டார் பிள்ளை.

"நீ கெட்டிக்காரன் தான்; வேறும் எத்தனையோ உண்டு" என்று சிரித்தார் கடவுள்.

"ஆமாம், நாம் என்னத்தையெல்லாமோ பேசிக்கொண்டிருக்கிறோம்; அதிருக்கட்டும், திருவல்லிக்கேணியில் எங்கே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"ஏழாம் நம்பர் வீடு, ஆபீஸ் வேங்கடாசல முதலி சந்து" என்றார் கடவுள்.

"அடெடே! அது நம்ம விலாசமாச்சே; அங்கே யாரைப் பார்க்க வேண்டும்?"

"கந்தசாமிப் பிள்ளையை!"

"சரியாய்ப் போச்சு, போங்க; நான் தான் அது. தெய்வந்தான் நம்மை அப்படிச் சேர்த்து வைத்திருக்கிறது. தாங்கள் யாரோ? இனம் தெரியவில்லையே?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"நானா? கடவுள்!" என்றார் சாவகாசமாக, மெதுவாக. அவர் வானத்தைப் பார்த்துக் கொண்டு தாடியை நெருடினார்.

கந்தசாமிப் பிள்ளை திடுக்கிட்டார். கடவுளாவது, வருவதாவது!

"பூலோகத்தைப் பார்க்க வந்தேன்; நான் இன்னும் சில நாட்களுக்கு உம்முடைய அதிதி."

கந்தசாமிப் பிள்ளை பதற்றத்துடன் பேசினார். "எத்தனை நாள் வேண்டுமானாலும் இரும்;

அதற்கு ஆட்சேபம் இல்லை. நீர் மட்டும் உம்மைக் கடவுள் என்று தயவு செய்து வெளியில் சொல்லிக் கொள்ள வேண்டாம்; உம்மைப் பைத்தியக்காரன் என்று நினைத்தாலும் பரவாயில்லை. என்னை என் வீட்டுக்காரி அப்படி நினைத்துவிடக்கூடாது" என்றார்.

"அந்த விளக்குப் பக்கத்தில் நிறுத்துடா" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

வண்டி நின்றது. இருவரும் இறங்கினார்கள்.

கடவுள் அந்த ரிக்ஷாக்காரனுக்குப் பளபளப்பான ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுத்தார்.

"நல்லா இருக்கணும் சாமீ" என்று உள்ளம் குளிரச் சொன்னான் ரிக்ஷாக்காரன்.

கடவுளை ஆசீர்வாதம் பண்ணுவதாவது!

"என்னடா, பெரியவரைப் பாத்து நீ என்னடா ஆசீர்வாதம் பண்ணுவது?" என்று அதட்டினார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்படிச் சொல்லடா அப்பா; இத்தனை நாளா, காது குளிர மனசு குளிர இந்த மாதிரி ஒரு வார்த்தை கேட்டதில்லை. அவன் சொன்னால் என்ன?" என்றார் கடவுள்.

"அவன்கிட்ட இரண்டணாக் கொறச்சுக் குடுத்துப் பார்த்தால் அப்போ தெரியும்!" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"எசமான், நான் நாயத்துக்குக் கட்டுப்பட்டவன், அநியாயத்துக்குக் கட்டுப்பட்டவனில்லெ, சாமி! நான் எப்பவும் அன்னா அந்த லெக்கிலேதான் குந்திக்கிட்டு இருப்பேன்; வந்தா கண் பாக்கணும்" என்று ஏர்க்காலை உயர்த்தினான் ரிக்ஷாக்காரன்.

"மகா நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன் தான்! தெரியும் போடா; கள்ளுத் தண்ணிக்கிக் கட்டுப்பட்டவன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"வாடகை வண்டியெ இஸ்துகிட்டு நாள் முச்சூடும் வெயிலிலே ஓடினாத் தெரியும். உன்னை என்ன சொல்ல? கடவுளுக்குக் கண்ணில்லெ; உன்னியே சொல்ல வச்சான், என்னியே கேக்க வச்சான்" என்று சொல்லிக்கொண்டே வண்டியை இழுத்துச் சென்றான்.

கடவுள் வாய்விட்டு உரக்கச் சிரித்தார். விழுந்து விழுந்து சிரித்தார். மனசிலே மகிழ்ச்சி, குளிர்ச்சி.

"இதுதான் பூலோகம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இவ்வளவுதானா!" என்றார் கடவுள்.

இருவரும் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

வீட்டுக்கு எதிரில் உள்ள லாந்தல் கம்பத்தின் பக்கத்தில் வந்ததும் கடவுள் நின்றார்.

கந்தசாமிப் பிள்ளையும் காத்து நின்றார்.

"பக்தா!" என்றார் கடவுள்.

எதிரில் கிழவனார் நிற்கவில்லை.

புலித் தோலாடையும், சடா முடியும், மானும், மழுவும், பிறையுமாகக் கடவுள் காட்சியளித்தார். கண்ணிலே மகிழ்ச்சி வெறி துள்ளியது. உதட்டிலே புன்சிரிப்பு.

"பக்தா!" என்றார் மறுபடியும்.

கந்தசாமிப் பிள்ளைக்கு விஷயம் புரிந்துவிட்டது.

"ஓய் கடவுளே, இந்தா பிடி வரத்தை என்கிற வித்தை எல்லாம் எங்கிட்டச் செல்லாது. நீர் வரத்தைக் கொடுத்துவிட்டு உம்பாட்டுக்குப் போவீர்; இன்னொரு தெய்வம் வரும், தலையைக் கொடு என்று கேட்கும். உம்மிடம் வரத்தை வாங்கிக் கொண்டு பிறகு தலைக்கு ஆபத்தைத் தேடிக்கொள்ளும் ஏமாந்த சோணகிரி நான் அல்ல. ஏதோ பூலோகத்தைப் பார்க்க வந்தீர்; நம்முடைய அதிதியாக இருக்க ஆசைப்பட்டீர்; அதற்கு ஆட்சேபம் எதுவும் இல்லை. என்னுடன் பழக வேண்டுமானால் மனுஷனைப் போல, என்னைப் போல நடந்து கொள்ள வேண்டும்; மனுஷ அத்துக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்; நான் முந்திச் சொன்னதை மறக்காமல் வீட்டுக்கு ஒழுங்காக வாரும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் மௌனமாகப் பின் தொடர்ந்தார். கந்தசாமிப் பிள்ளையின் வாதம் சரி என்று பட்டது. இதுவரையில் பூலோகத்தில் வரம் வாங்கி உருப்பட்ட மனுஷன் யார் என்ற கேள்விக்குப் பதிலே கிடையாது என்றுதான் அவருக்குப் பட்டது.

கந்தசாமிப் பிள்ளை வாசலருகில் சற்று நின்றார். "சாமி, உங்களுக்குப் பரமசிவம் என்று பேர் கொடுக்கவா? அம்மையப்பப் பிள்ளை என்று கூப்பிடவா?" என்றார்.

"பரமசிவந்தான் சரி; பழைய பரமசிவம்."

"அப்போ, உங்களை அப்பா என்று உறவுமுறை வைத்துக் கூப்பிடுவேன்; உடன்பட வேணும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"அப்பா என்று வேண்டாமப்பா; பெரியப்பா என்று கூப்பிடும். அப்போதுதான் என் சொத்துக்கு ஆபத்தில்லை" என்று சிரித்தார் கடவுள். பூலோக வளமுறைப்படி நடப்பது என்று தீர்மானித்தபடி சற்று ஜாக்கிரதையாக இருந்து கொள்ள வேண்டும் என்று பட்டது கடவுளுக்கு.

"அப்படி உங்கள் சொத்து என்னவோ?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இந்தப் பிரபஞ்சம் முழுவதுந்தான்" என்றார் கடவுள்.

"பயப்பட வேண்டாம்; அவ்வளவு பேராசை நமக்கு இல்லை" என்று கூறிக்கொண்டே நடைப்படியில் காலை வைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

2

வீட்டு முன் கூடத்தில் ஒரு தகர விளக்கு அவ்விடத்தைக் கோவிலின் கர்ப்பக் கிருகமாக்கியது. அதற்கு அந்தப் புறத்தில் நீண்டு இருண்டு கிடக்கும் பட்டகசாலை. அதற்கப்புறம் என்னவோ? ஒரு குழந்தை, அதற்கு நாலு வயசு இருக்கும். மனசிலே இன்பம் பாய்ச்சும் அழகு. கண்ணிலே எப்பொழுது பார்த்தாலும் காரணமற்ற சந்தோஷம். பழைய காலத்து ஆசாரப்படி உச்சியில் குறுக்காக வகிடு எடுத்து முன்னும் பின்னுமாகப் பின்னிய எலிவால் சடை வாலை வாளைத்துக் கொண்டு நின்றது. முன்புறம் சடையைக் கட்டிய வாழைநார், கடமையில் வழுவித் தொங்கி, குழந்தை குனியும்போதெல்லாம் அதன் கண்ணில் விழுந்து தொந்தரவு கொடுத்தது. குழந்தையின் கையில் ஒரு கரித்துண்டும், ஓர் ஓட்டுத் துண்டும் இருந்தன. இடையில் முழங்காலைக் கட்டிக்கொண்டிருக்கும் கிழிசல் சிற்றாடை. குனிந்து தரையில் கோடு போட முயன்று, வாழைநார் கண்ணில் விழுந்ததனால் நிமிர்ந்து நின்று கொண்டு, இரண்டு கைகளாலும் வாழை நாரைப் பிடித்துப் பலங்கொண்ட மட்டும் இழுத்தது. அதன் முயற்சி பலிக்கவில்லை. வலித்தது. அழுவோமா அல்லது இன்னும் ஒரு தடவை இழுத்துப் பார்ப்போமா என்று அது தர்க்கித்துக் கொண்டிருக்கும் போது அப்பா உள்ளே நுழைந்தார்.

"அப்பா!" என்ற கூச்சலுடன் கந்தசாமிப் பிள்ளையின் காலைக் கட்டிக்கொண்டது. அண்ணாந்து பார்த்து, "எனக்கு என்னா கொண்டாந்தே?" என்று கேட்டது.

"என்னைத்தான் கொண்டாந்தேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னப்பா, தினந்தினம் உன்னியேத்தானே கொண்டாரே; பொரி கடலையாவது கொண்டாரப்படாது?" என்று சிணுங்கியது குழந்தை.

"பொரி கடலை உடம்புக்காகாது; இதோ பார். உனக்கு ஒரு தாத்தாவைக் கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இதுதான் உம்முடைய குழந்தையோ?" என்று கேட்டார் கடவுள். குழந்தையின் பேரில் விழுந்த கண்களை மாற்ற முடியவில்லை அவருக்கு.

கந்தசாமிப் பிள்ளை சற்றுத் தயங்கினார்.

"சும்மா சொல்லும்; இப்பொவெல்லாம் நான் சுத்த சைவன்; மண்பானைச் சமையல்தான் பிடிக்கும். பால், தயிர்கூடச் சேர்த்துக் கொள்ளுவதில்லை" என்று சிரித்தார் கடவுள்.

"ஆசைக்கு என்று காலம் தப்பிப் பிறந்த கருவேப்பிலைக் கொழுந்து" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"இப்படி உட்காருங்கள்; இப்பொ குழாயிலே தண்ணீர் வராது; குடத்திலே எடுத்துக் கொண்டு வருகிறேன்" என்று உள்ளே இருட்டில் மறைந்தார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் துண்டை உதறிப் போட்டுவிட்டுக் கூடத்தில் உட்கார்ந்தார்.

மனசிலே ஒரு துறுதுறுப்பும் எல்லையற்ற நிம்மதியும் இருந்தன.

"வாடியம்மா கருவேப்பிலைக் கொழுந்தே?" என்று கைகளை நீட்டினார் கடவுள்.

ஒரே குதியில் அவருடைய மடியில் வந்து ஏறிக் கொண்டது குழந்தை.

"எம்பேரு கருகப்பிலைக் கொளுந்தில்லெ; வள்ளி. அப்பா மாத்திரம் என்னெக் கறுப்பி கறுப்பின்னு கூப்பிடுதா; நான் என்ன அப்பிடியா?" என்று கேட்டது.

அது பதிலை எதிர்பார்க்கவில்லை. அதன் கண்களுக்குத் தாத்தாவின் கண்டத்தில் இருந்த கறுப்பு மறு தென்பட்டது.

"அதென்ன தாத்தா, கன்னங்கறேலுன்னு நவ்வாப் பழம் மாதிரி களுத்திலே இருக்கு? அதைக் கடிச்சுத் திங்கணும் போலே இருக்கு" என்று கண்களைச் சிமிட்டிப் பேசிக் கொண்டு மடியில் எழுந்து நின்று, கழுத்தில் பூப்போன்ற உதடுகளை வைத்து அழுத்தியது. இளம் பல் கழுத்தில் கிளுகிளுத்தது. கடவுள் உடலே குளுகுளுத்தது.

"கூச்சமா இருக்கு" என்று உடம்பை நெளித்தார் கடவுள்.

"ஏன் தாத்தா, களுத்திலே நெருப்பு கிருப்புப் பட்டு பொத்துப் போச்சா? எனக்கும் இந்தா பாரு" என்று தன் விரல் நுனியில் கன்றிக் கறுத்துப் போன கொப்புளத்தைக் காட்டியது.

"பாப்பா, அது நாகப்பளந்தாண்டி யம்மா; முந்தி ஒரு தரம் எல்லாரும் கொடுத்தாளேன்னு வாங்கி வாயிலே போட்டுக்கொண்டேன். எனக்குப் பங்கில்லியான்னு களுத்தெப் புடிச்சுப்புட்டாங்க. அதிலெ இருந்து அது அங்கியே சிக்கிக்கிச்சு; அது கெடக்கட்டும். உனக்கு விளையாடத் தோழிப் பிள்ளைகள் இல்லியா?" என்று கேட்டார் கடவுள்.

"வட்டும் கரித்துண்டும் இருக்கே; நீ வட்டாட வருதியா?" என்று கூப்பிட்டது.

குழந்தையும் கடவுளும் வட்டு விளையாட ஆரம்பித்தார்கள்.

ஒற்றைக் காலை மடக்கிக்கொண்டே நொண்டியடித்து ஒரு தாவுத் தாவினார் கடவுள்.

"தாத்தா, தோத்துப் போனியே" என்று கை கொட்டிச் சிரித்தது குழந்தை.

"ஏன்?" என்று கேட்டார் கடவுள்.

கால் கரிக்கோட்டில் பட்டுவிட்டதாம்.

"முந்தியே சொல்லப்படாதா?" என்றார் கடவுள்.

"ஆட்டம் தெரியாமே ஆட வரலாமா?" என்று கையை மடக்கிக் கொண்டு கேட்டது குழந்தை.

அந்தச் சமயத்தில் ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளை முன்னே வர, ஸ்ரீமதி பின்னே குடமும் இடுப்புமாக இருட்டிலிருந்து வெளிப்பட்டார்கள்.

"இவுங்கதான் கைலாசவரத்துப் பெரியப்பா, கரிசங்கொளத்துப் பொண்ணை இவுங்களுக்கு ஒண்ணுவிட்ட அண்ணாச்சி மகனுக்குத் தான் கொடுத்திருக்கு. தெரியாதா?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னமோ தேசாந்திரியாகப் போயிட்டதாகச் சொல்லுவார்களே, அந்த மாமாவா? வாருங்க மாமா, சேவிக்கிறேன்" என்று குடத்தை இறக்கி வைத்துவிட்டு விழுந்து நமஸ்கரித்தாள். காது நிறைந்த பழங்காலப் பாம்படம் கன்னத்தில் இடிபட்டது.

"பத்தும் பெருக்கமுமாகச் சுகமாக வாழவேணும்" என்று ஆசீர்வதித்தார் கடவுள்.

காந்திமதி அம்மையாருக்கு (அதுதான் கந்தசாமிப் பிள்ளை மனைவியின் பெயர்) என்றும் அநுபவித்திராத உள்ள நிறைவு ஏற்பட்டது. மனமும் குளிர்ந்தது. கண்ணும் நனைந்தது.

"வாசலில் இருக்கற அரிசி மூட்டையை அப்படியே போட்டு வச்சிருந்தா?" என்று ஞாபகமூட்டினார் கடவுள்.

"இவுகளுக்கு மறதிதான் சொல்லி முடியாது. அரிசி வாங்கியாச்சான்னு இப்பந்தான் கேட்டேன். இல்லைன்னு சொன்னாக. ஊருக்கெல்லாம் மருந்து கொடுக்காக; இவுக மறதிக்குத்தான் மருந்தைக் காங்கலெ. படெச்ச கடவுள்தான் பக்கத்திலே நின்னு பார்க்கணும்" என்றாள் காந்திமதி அம்மாள்.

"பாத்துக்கிட்டுத்தான் நிக்காறே" என்றார் கடவுள் கிராமியமாக.

"பாத்துச் சிரிக்கணும், அப்பந்தான் புத்தி வரும்" என்றாள் அம்மையார்.

கடவுள் சிரித்தார்.

கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும் வாசலுக்குப் போனார்கள்.

"இந்தச் செப்பிடுவித்தை எல்லாம் கூடாது என்று சொன்னேனே" என்றார் பிள்ளை காதோடு காதாக.

"இனிமேல் இல்லை" என்றார் கடவுள்.

கந்தசாமிப் பிள்ளை முக்கி முனகிப் பார்த்தார்; மூட்டை அசையவே இல்லை.

"நல்ல இளவட்டம்!" என்று சிரித்துக் கொண்டே மூட்டையை இடுப்பில் இடுக்கிக் கொண்டார் கடவுள்.

"நீங்க எடுக்கதாவது; உங்களைத்தானே, ஒரு பக்கமாத் தாங்கிப் பிடியுங்க; சும்மா பாத்துக்கிட்டே நிக்கியளே!" என்று பதைத்தாள் காந்திமதியம்மாள்.

"நீ சும்மா இரம்மா; எங்கே போடணும்னு சொல்லுதெ?" என்றார் கடவுள்.

"இந்தக் கூடத்திலியே கெடக்கட்டும்; நீங்க இங்கே சும்மா வச்சிருங்க" என்று வழி மறித்தாள் காந்திமதியம்மாள்.

கந்தசாமிப் பிள்ளையும் கடவுளும் சாப்பிட்டுவிட்டு வாசல் திண்ணைக்கு வரும்பொழுது இரவு மணி பதினொன்று.

"இனிமேல் என்ன யோசனை?" என்றார் கடவுள்.

"தூங்கத்தான்" என்றார் பிள்ளை கொட்டாவி விட்டுக்கொண்டே.

"தாத்தா, நானும் ஒங்கூடத்தான் படுத்துக்குவேன்" என்று ஓடிவந்தது குழந்தை.

"நீ அம்மையெக் கூப்பிட்டுப் பாயும் தலையணையும் எடுத்துப் போடச் சொல்லு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"என்னையுமா தூங்கச் சொல்லுகிறீர்?" என்று கேட்டார் கடவுள்.

"மனுஷாள்கூடப் பழகினால் அவர்களைப் போலத்தான் நடந்தாகணும்; தூங்க இஷ்டமில்லை என்றால் பேசாமல் படுத்துக்கொண்டிருங்கள். ராத்திரியில் நடமாடினால் அபவாதத்துக்கு இடமாகும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

3

கந்தசாமிப் பிள்ளை பவழக்காரத் தெரு சித்தாந்த தீபிகை ஆபீசில் தரையில் உட்கார்ந்து கொண்டு பதவுரை எழுதிக் கொண்டிருக்கிறார். போகர் நூலுக்கு விளக்கவுரை பிள்ளையவர்கள் பத்திரிகையில் மாதமாதம் தொடர்ச்சியாகப் பிரசுரமாகி வருகிறது.

"ஆச்சப்பா இன்னமொன்று சொல்லக் கேளு, அப்பனே வயமான செங்கரும்பு, காச்சிய வெந்நீருடனே கருடப் பிச்சு, கல்லுருவி புல்லுருவி நல்லூமத்தை (கருடப்பச்சை என்றும் பாடம்)..." என்று எழுதிவிட்டு, வாசல் வழியாகப் போகும் தபாற்காரன் உள்ளே நுழையாமல் நேராகப் போவதைப் பார்த்துவிட்டு, "இன்றைக்கு பத்திரிகை போகாது" என்று முனகியபடி, எழுதியதைச் சுருட்டி மூலையில் வைத்துவிட்டு விரல்களைச் சொடுக்கு முறித்துக் கொண்டார்.

வாசலில் ரிக்ஷா வந்து நின்றது. கடவுளும் குழந்தையும் இறங்கினார்கள். வள்ளியின் இடுப்பில் பட்டுச் சிற்றாடை; கை நிறைய மிட்டாய்ப் பொட்டலம்.

"தாத்தாவும் நானும் செத்த காலேஜ் உசிர் காலேஜெல்லாம் பார்த்தோம்" என்று துள்ளியது குழந்தை.

"எதற்காக ஓய், ஒரு கட்டடத்தைக் கட்டி, எலும்பையும் தோலையும் பொதிந்து பொதிந்து வைத்திருக்கிறது? என்னைக் கேலி செய்ய வேண்டும் என்ற நினைப்போ?" என்று கேட்டார் கடவுள். குரலில் கடுகடுப்புத் தொனித்தது.

"அவ்வளவு ஞானத்தோடே இங்கே யாரும் செய்துவிடுவார்களா? சிருஷ்டியின் அபூர்வத்தைக் காட்டுவதாக நினைத்துக்கொண்டுதான் அதை எல்லாம் அப்படி வைத்திருக்கிறார்கள். அது கிடக்கட்டும்; நீங்க இப்படி ஓர் இருபத்தைந்து ரூபாய் கொடுங்கள்; உங்களை ஜீவிய சந்தாதாராகச் சேர்த்துவிடுகிறேன்; இன்று பத்திரிகை போய் ஆக வேணும்" என்று கையை நீட்டினார் பிள்ளை.

"இது யாரை ஏமாற்ற? யார் நன்மைக்கு?" என்று சிரித்தார் கடவுள்.

"தானம் வாங்கவும் பிரியமில்லை; கடன் வாங்கும் யோசனையும் இல்லை; அதனால் தான் வியாபாரார்த்தமாக இருக்கட்டும் என்கிறேன். நன்மையைப் பற்றிப் பிரமாதமாகப்

பேசிவிட்டீர்களே! இந்தப் பூலோகத்திலே நெய் முதல் நல்லெண்ணம் வரையில் எல்லாம் கலப்படம் தான். இது உங்களுக்குத் தெரியாதா?" என்று ஒரு போடு போட்டார் கந்தசாமிப் பிள்ளை.

கடவுள் யோசனையில் ஆழ்ந்தார்.

"அதிருக்கட்டும், போகரிலே சொல்லியிருக்கிறதே, கருடப்பச்சை; அப்படி ஒரு மூலிகை உண்டா? அல்லது கருடப்பிச்சுதானா?" என்று கேட்டார் கந்தசாமிப் பிள்ளை.

"பிறப்பித்த பொறுப்புதான் எனக்கு; பெயரிட்ட பழியையும் என்மேல் போடுகிறீரே, இது நியாயமா? நான் என்னத்தைக் கண்டேன்? உம்மை உண்டாக்கினேன்; உமக்குக் கந்தசாமிப் பிள்ளையென்று உங்க அப்பா பெயர் இட்டார்; அதற்கும் நான் தான் பழியா?" என்று வாயை மடக்கினார் கடவுள்.

"நீங்கள் இரண்டு பேரும் வெயிலில் அலைந்துவிட்டு வந்தது கோபத்தை எழுப்புகிறது போலிருக்கிறது. அதற்காக என்னை மிரட்டி மடக்கிவிட்டதாக நினைத்துக்கொள்ள வேண்டாம்; அவசரத்தில் திடுதிப்பென்று சாபம் கொடுத்தீரானால், இருபத்தைந்து ரூபாய் வீணாக நஷ்டமாய்ப் போகுமே என்பதுதான் என் கவலை" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

பொட்டலத்தை அவிழ்த்துத் தின்றுகொண்டிருந்த குழந்தை, "ஏன் தாத்தா அப்பாகிட்டப் பேசுதே? அவுங்களுக்கு ஒண்ணுமே தெரியாது; இதைத் தின்னு பாரு, இனிச்சுக் கெடக்கு" என்று கடவுளை அழைத்தது.

குழந்தை கொடுக்கும் லட்டுத் துண்டுகளை சாப்பிட்டுக் கொண்டே, "பாப்பா, உதுந்தது எனக்கு, முழுசு உனக்கு!" என்றார் கடவுள்.

குழந்தை ஒரு லட்டை எடுத்துச் சற்று நேரம் கையில் வைத்துக் கொண்டே யோசித்தது.

"தாத்தா, முழுசு வாய்க்குள்ளே கொள்ளாதே. உதுத்தா உனக்குன்னு செல்லுதியே. அப்போ எனக்கு இல்லையா?" என்று கேட்டது குழந்தை.

கடவுள் விழுந்துவிழுந்து சிரித்தார். "அவ்வளவும் உனக்கே உனக்குத்தான்" என்றார்.

"அவ்வளவுமா! எனக்கா!" என்று கேட்டது குழந்தை.

"ஆமாம். உனக்கே உனக்கு" என்றார் கடவுள்.

"அப்புறம் பசிக்காதே! சாப்பிடாட்டா அம்மா அடிப்பாங்களே! அப்பா லேவியம் குடுப்பாங்களே!" என்று கவலைப்பட்டது குழந்தை.

"பசிக்கும்; பயப்படாதே!" என்றார் கடவுள்.

"தாங்கள் வாங்கிக் கொடுத்திருந்தாலும், அது ஹோட்டல் பட்சணம். ஞாபகம் இருக்கட்டும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"நான் தான் இருக்கிறேனே!" என்றார் கடவுள்.

"நீங்கள் இல்லையென்று நான் எப்பொழுது சொன்னேன்?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

சில விநாடிகள் பொறுத்து, "இன்றைச் செலவு போக, அந்த நூறு ரூபாயில் எவ்வளவு மிச்சம்?" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

"உமக்கு ரூபாய் இருபத்தைந்து போகக் கையில் ஐம்பது இருக்கிறது" என்று சிரித்தார் கடவுள்.

"அதற்குப் பிறகு என்ன யோசனை?"

"அதுதான் எனக்கும் புரியவில்லை."

"என்னைப் போல வைத்தியம் செய்யலாமே!"

"உம்முடன் போட்டிபோட நமக்கு இஷ்டம் இல்லை."

"அப்படி நினைத்துக்கொள்ள வேண்டாம். என்னோடே போட்டி போடல்லே; லோகத்து முட்டாள்தனத்தோடே போட்டி போடுகிறீர்கள்; பிரியமில்லை என்றால் சித்தாந்த உபந்நியாசங்கள் செய்யலாமே?"

"நீர் எனக்குப் பிழைக்கிறதற்கா வழி சொல்லுகிறீர்; அதில் துட்டு வருமா!" என்று சிரித்தார் கடவுள்.

"அப்போ?"

"எனக்குத்தான் கூத்து ஆட நன்றாக வருமே; என்ன சொல்லுகிறீர்? தேவியை வேண்டுமானாலும் தருவிக்கிறேன்."

கந்தசாமிப் பிள்ளை சிறிது யோசித்தார். "எனக்கு என்னவோ பிரியமில்லை!" என்றார்.

"பிறகு பிழைக்கிற வழி? என்னங்காணும், பிரபஞ்சமே எங்கள் ஆட்டத்தை வைத்துத்தானே பிழைக்கிறது?"

"உங்கள் இஷ்டம்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

கந்தசாமிப் பிள்ளை மறுபடியும் சிறிது நேரம் சிரித்தார். "வாருங்கள், போவோம்" என்று ஆணியில் கிடந்த மேல்வேட்டியை எடுத்து உதறிப் போட்டுக் கொண்டார்.

"குழந்தை!" என்றார் கடவுள்.

"அதுதான் உறங்குகிறதே; வருகிற வரையிலும் உறங்கட்டும்" என்றார் பிள்ளை.

கால்மணிப் போது கழித்து மூன்று பேர் திவான் பகதூர் பிரகதீசுவர சாஸ்திரிகள் பங்களாவுக்குள் நுழைந்தனர். ஒருவர் கந்தசாமிப் பிள்ளை; மற்றொருவர் கடவுள்; மூன்றாவது பெண் - தேவி.

"நான் இவருக்குத் தங்கபஸ்பம் செய்து கொடுத்து வருகிறேன். நான் சொன்னால் கேட்பார்" என்று விளக்கிக் கொண்டே முன் வராந்தாப் படிக்கட்டுகளில் ஏறினார் பிள்ளை; இருவரும் பின் தொடர்ந்தனர். தேவியின் கையில் ஒரு சிறு மூட்டை இருந்தது.

"சாமி இருக்காங்களா; நான் வந்திருக்கேன் என்று சொல்லு" என்று அதிகாரத்தோடு

வேலைக்காரனிடம் சொன்னார் கந்தசாமிப் பிள்ளை.

"பிள்ளையவர்களா! வரவேணும், வரவேணும்; பஸ்பம் நேத்தோடே தீர்ந்து போச்சே; உங்களைக் காணவில்லையே என்று கவலைப் பட்டேன்" என்ற கலகலத்த பேச்சுடன் வெம்பிய சரீரமும், மல் வேஷ்டியும், தங்க விளிம்புக் கண்ணாடியுமாக ஒரு திவான் பகதூர் ஓடி வந்தது. எல்லோரையும் கும்பிட்டுக்கொண்டே அது சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டது.

"உட்காருங்கள், உட்காருங்கள்" என்றார் திவான் பகதூர்.

கந்தசாமிப் பிள்ளை அவரது நாடியைப் பிடித்துப் பார்த்துக் கொண்டே, "பரவாயில்லை; சாயங்காலம் பஸ்மத்தை அனுப்பி வைக்கிறேன்; நான் வந்தது இவாளை உங்களுக்குப் பரிசயம் பண்ணி வைக்க. இவாள் ரெண்டு பேரும் நாட்டிய சாஸ்திர சாகரம்; உங்கள் நிருத்திய கலாமண்டலியில் வசதி பண்ணினா சௌகரியமாக இருக்கும்" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

திவான் பகதூரின் உத்ஸாகம் எல்லாம் ஆமையின் காலும் தலையும் போல் உள்வாங்கின. கைகளைக் குவித்து, ஆள்காட்டி விரல்களையும் கட்டை விரல்களையும் முறையே மூக்கிலும் மோவாய்க்கட்டையிலுமாக வைத்துக்கொண்டு "உம்", "உம்" என்று தலையை அசைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

"இவர் பெயர் கூத்தனார்; இந்த அம்மாளின் பெயர் பார்வதி. இருவரும் தம்பதிகள்" என்று உறவைச் சற்று விளக்கிவைத்தார் கந்தசாமிப் பிள்ளை.

"நான் கேள்விப்பட்டதே இல்லை; இதற்கு முன் நீங்கள் எங்கேயாவது ஆடியிருக்கிறீர்களா?" என்று தேவியைப் பார்த்துக் கொண்டு கூத்தனாரிடம் திவான் பகதூர் கேட்டார்.

கடவுளுக்கு வாய் திறக்கச் சந்தர்ப்பம் கொடுக்காமல் "நாங்கள் ஆடாத இடம் இல்லை" என்றாள் தேவி.

"என்னவோ என் கண்ணில் படவில்லை. இருக்கட்டும்; அம்மா ரொம்பக் கறுப்பா இருக்காங்களே, சதஸிலே சோபிக்காதே என்று தான் யோசிக்கிறேன்" என்றார் வர்ணபேத திவான் பகதூர்.

"பெண் பார்க்க வந்தீரா அல்லது நாட்டியம் பார்க்கிறதாக யோசனையோ?" என்று கேட்டாள் தேவி.

"அம்மா, கோவிச்சுக்கப்படாது. ஒன்று சொல்லுகிறேன் கேளுங்க; கலைக்கும் கறுப்புக்கும் கானாவுக்கு மேலே சம்பந்தமே கிடையாது. நானும் முப்பது வருஷமா இந்தக் கலாமண்டலியிலே பிரஸிடெண்டாக இருந்து வருகிறேன். சபைக்கு வந்தவர்கள் எல்லாருக்கும் கண்கள் தான் கறுத்திருக்கும்."

"உம்ம மண்டலியுமாச்சு, சுண்டெலியுமாச்சு!" என்று சொல்லிக் கொண்டே தேவி

எழுந்திருந்தாள்.

"இப்படி கோவிச்சுக்கப்படாது" என்று ஏக காலத்தில் திவான் பகதூரும் கந்தசாமிப் பிள்ளையும் எழுந்திருந்தார்கள்.

"இவர்கள் புதுப் புதுப் பாணியிலே நாட்டியமாடுவார்கள். அந்த மாதிரி இந்தப் பக்கத்திலேயே பார்த்திருக்க முடியாது. சாஸ்திரம் இவர்களிடம் பிச்சை வாங்க வேணும். ஒரு முறை தான் சற்றுப் பாருங்களேன்" என்று மீண்டும் சிபார்சு செய்தார் கந்தசாமிப் பிள்ளை.

"சரி, பார்க்கிறது; பார்க்கிறதுக்கு என்ன ஆட்சேபம்?" என்று சொல்லிக்கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். "சரி, நடக்கட்டும்!" என்று சொல்லிக்கொண்டு இமைகளை மூடினார்.

"எங்கே இடம் விசாலமாக இருக்கும்?" என்று தேவி எழுந்து நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள்.

"அந்த நடு ஹாலுக்குள்ளேயே போவோமே" என்றார் கடவுள்.

"சரி" என்று உள்ளே போய்க் கதவைச் சாத்திக்கொண்டார்கள்.

சில விநாடிகளுக்கெல்லாம் உள்ளிருந்து கணீரென்று கம்பீரமான குரலில் இசை எழுந்தது.

மயான ருத்திரனாம் - இவன்

மயான ருத்திரனாம்!

கதவுகள் திறந்தன.

கடவுள் புலித்தோலுடையும் திரிசூலமும் பாம்பும் கங்கையும் சடையும் பின்னிப் புரள, கண்மூடிச் சிலையாக நின்றிருந்தார்.

மறுபடியும் இசை, மின்னலைச் சிக்கலெடுத்து உதறியது போல, ஒரு வெட்டு வெட்டித் திரும்புகையில் கடவுள் கையில் சூலம் மின்னிக் குதித்தது; கண்களில் வெறியும், உதட்டில் சிரிப்பும் புரண்டோட, காலைத் தூக்கினார்.

கந்தசாமிப் பிள்ளைக்கு நெஞ்சில் உதைப்பு எடுத்துக் கொண்டது. கடவுள் கொடுத்த வாக்கை மறந்துவிட்டார் என்று நினைத்துப் பதறி எழுந்தார்.

"ஓய் கூத்தனாரே, உம் கூத்தைக் கொஞ்சம் நிறுத்தும்."

"சட்! வெறும் தெருக்கூத்தாக இருக்கு; என்னங்காணும், போர்னியோ காட்டுமிராண்டி மாதிரி வேஷம் போட்டுக்கொண்டு" என்று அதட்டினார் திவான் பகதூர்.

ஆடிய பாதத்தை அப்படியே நிறுத்தி, சூலத்தில் சாய்ந்தபடி பார்த்துக்கொண்டே நின்றார் கடவுள்.

"ஓய்! கலைன்னா என்னன்னு தெரியுமாங்காணும்? புலித்தோலைத்தான் கட்டிக்கொண்டீரே. பாம்புன்னா பாம்பையா புடிச்சுக்கொண்டு வருவா? பாம்பு மாதிரி ஆபரணம் போட்டுக் கொள்ள வேணும்; புலித்தோல் மாதிரி பட்டுக் கட்டிக் கொள்ள வேணும்; கலைக்கு முதல் அம்சம் கண்ணுக்கு அழகுங்காணும்! வாஸ்தவமாகப் பார்வதி பரமேசுவராளே இப்படி

ஆடினாலும் இது நாட்டிய சாஸ்திரத்துக்கு ஒத்து வராது. அதிலே இப்படிச் சொல்லலே. முதல்லே அந்தப் பாம்புகளையெல்லாம் பத்திரமாகப் புடிச்சுக் கூடையிலே போட்டு வச்சுப்புட்டு வேஷத்தைக் கலையும். இது சிறுசுகள் நடமாடற எடம், ஜாக்கிரதை!" என்றார் திவான் பகதூர்.

ஸ்ரீ கந்தசாமிப் பிள்ளையையும் அவர் லேசில் விட்டுவிடவில்லை. "கந்தசாமிப் பிள்ளைவாள், நீர் ஏதோ மருந்து கொடுத்துக்கொண்டிருக்கிறீர் என்பதற்காக இந்தக் கூத்துப் முடியாது; கச்சேரியும் வைக்க முடியாது; அப்புறம் நாலு பேரோடே தெருவிலே நான் நடமாட வேண்டாம்?"

கால் மணி நேரங்கழித்துச் சித்த வைத்திய தீபிகை ஆபீசில் இரண்டு பேர் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள், தேவியைத் தவிர. குழந்தை பாயில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது.

இரண்டு பேரும் மௌனமாக இருந்தார்கள். "தெரிந்த தொழிலைக் கொண்டு லோகத்தில் பிழைக்க முடியாது போல இருக்கே!" என்றார் கடவுள்.

"நான் சொன்னது உங்களுக்குப் பிடிக்கவில்லை; உங்களுக்குப் பிடித்தது லோகத்துக்குப் பிடிக்கவில்லை; வேணும் என்றால் தேவாரப் பாடசாலை நடத்திப் பார்க்கிறதுதானே!"

கடவுள், 'ச்சு' என்று நாக்கைச் சூள் கொட்டினார்.

"அதுக்குள்ளேயே பூலோகம் புளிச்சுப் போச்சோ!"

"உம்மைப் பார்த்தால் உலகத்தைப் பார்த்ததுபோல்" என்றார் கடவுள்.

"உங்களைப் பார்த்தாலோ?" என்று சிரித்தார் கந்தசாமிப் பிள்ளை.

"உங்களிடமெல்லாம் எட்டி நின்று வரம் கொடுக்கலாம்; உடன் இருந்து வாழ முடியாது" என்றார் கடவுள்.

"உங்கள் வர்க்கமே அதற்குத்தான் லாயக்கு" என்றார் கந்தசாமிப் பிள்ளை.

அவருக்குப் பதில் சொல்ல அங்கே யாரும் இல்லை.

மேஜையின் மேல் ஜீவிய சந்தா ரூபாய் இருபத்தைந்து நோட்டாகக் கிடந்தது.

"கைலாசபுரம் பழைய பரமசிவம் பிள்ளை, ஜீவிய சந்தா வரவு ரூபாய் இருபத்தைந்து" என்று கணக்கில் பதிந்தார் கந்தசாமிப் பிள்ளை.

2.4 கதவு — கி.ராஜநாராயணன்

கி. ரா. என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன் காலம் 16 செப்டம்பர் 1922 – 17 மே 2021. கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர். கோபல்ல கிராமம், கோபல்லபுரத்து மக்கள், மாயமான், நாட்டுப்புற கதை களஞ்சியம் ஆகியவை இவரது பிரபலமான

படைப்புகளில் சில. இவர் 1991-இல் சாகித்ய அகாதமி விருதைப் பெற்றவர். டைம்ஸ் ஆஃப் இந்தியா இவரை "தமிழ் வாய்மொழி பாரம்பரியத்தின் காவலர்" என்று அழைத்தது.

கதவு

கதவு ஆட்டம் ஆரம்பமாகியது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

"எல்லோரும் டிக்கட்டு வாங்கிக்கிடுங்க" என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட் " என்று சத்தம் போட்டார்கள்.

"எந்த ஊருக்கு வேணும்? ஏய் இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம். அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்"

"இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ."

"சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?"

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் "திருநெல்வேலிக்கு" என்று சொன்னான். "திருநெவேலிக்கு, திருநெவேலிக்கு" என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லட்சுமி ஒரு துணியால் கதவைத் துடைத்துக்கொண்டிருந்தாள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட் கிழித்துக் கொடுத்து முடித்ததும், கதவில் பிடித்துத் தொத்திக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன்மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை, அந்த பாரமான பெரிய கதவு பொங்கிப் பூரித்துப் போய் இருக்கும் அக் குழந்தைகளை, வேகமாக ஆடி மகிழ்வித்தது. "திருநெவேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன். எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளி யவர்கள் டிக்கட் வாங்கிக் கொண்டார்கள். ஏறினவர்கள் தள்ளினார் கள்; மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

அது பழைய காலத்துக் காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது. அதில் வசித்து வந்தவர்கள் முன்பு வசதி உள்ளவர். களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள பெண் குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும்; இன்னொன்று கைக்குழந்தை.

அம்மா காட்டுக்கு வேலைசெய்யப் போய்விடுவாள். அப்பா மணி முத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும் சீனிவாசனும் கைக்குழந்தையை அம்மா காட்டிலிருந்து வரும்வரை வைத்துக்கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால்

லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டது என்று.

படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து, தலையைக் கொஞ்சம் சாய்த்துக்கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். சிரித்துக்கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றும்முற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்கமுடியாமல்.

லட்சுமி வீட்டுக்கு வந்தபோது சீனிவாசன் நாடியைக் கையில் தாங்கிக்கொண்டு வாசல் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தைப் பின்புறமாக மறைத்துக்கொண்டு, "டேய் நா என்ன கொண்டு வந்திருக்கேன் சொல்லு பாப்போம்" என்றாள்.

"என்ன கொண்டு வந்திருக்கியோ? எனக்குத் தெரியாது”

"சொல்லேன் பாப்போம்"

"எனக்குத் தெரியாது"

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

"அக்கா அக்கா, எனக்குத் தரமாட்டியா" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். 'முடியாது' என்ற பாவனை யில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச்சுற்றி வந்தான் "ம்ஹூம். முடியாது. மாட்டேன். நான் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக்கொண்டு வந்திருக்கேன் தெரியுமா?" என்றாள்.

"ஒரே தடவை பாத்துட்டுக் கொடுத்துறேன். அக்கா, அக்கா” என்று கெஞ்சினான்.

"பாத்துட்டுக் கொடுத்துறணும்"

"சரி"

"கிழிக்கப்படாது”

“சரி சரி"

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

"டேய் உள்ளெ போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவிலே ஒட்டணும்” என்றாள்.

"ரொம்ப சரி" என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.

இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக்கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்துவீட்டுக் குழந்தைகளும் ஓடிவந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது!

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதேமாதிரி

வேறு ஒரு படம் ஒன்றை ஒட்டி இருப்பது தெரியவரும். அந்தப்படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப்போய் இருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும்போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக்கொண்டிருக்கும்போது கிராமத் துத் தலையாரி அங்கே வந்தான்.

"லட்சுமி உங்க ஐயா எங்கே?"

"ஊருக்குப் போயிருக்காக"

“உங்க அம்மா?"

"காட்டுக்குப் போயிருக்காக"

"வந்தா, தீர்வையைக்கொண்டு வந்து போடச்சொல்லு. தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு".

"சரி" என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

மறுநாள் தலையாரி, லட்சுமியின் அம்மா இருக்கும்போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

"ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாச மாச்சி. ஒரு தகவ ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கி யைக் கொடுப்போம்? ஏதோ காட்டிலே போய் கூலிவேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம்; உங்களுக்குத் தெரியாததா?" என்றாள்.

இந்த வார்த்தைகள் தலையாரியின் மனசைத் தொடவில்லை; இந்த மாதிரியான வசனங்களை பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதுக்கு; இந்த 'வருசம் எப்படியாவது கண்டிப்பா ப்பா தீர்வை போட்டறணும். அப்புறம் எங்க மேலே சடைச்சிப் ச்சிப் புண்ணியம் இல்லை" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

∏

ஒரு நாள் காலை, வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். தலையாரி, நான்குபேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் கழற்ற முயன்றார்கள்; முடியவில்லை. குழந்தைகள் வீட்டுப்பக்கம் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களுக்கு இது ஒரு வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒருமாதிரி கழற்றி, நான்குபேரும் கதவைத் தூக்கித் தலையில்

வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அதை ஒரு ஊர்வலம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப்போல் கைகளை வைத்துக்கொண்டு "பிப்பீ.. ......" என்று சத்தம் காட்டி விரல்களை நீட்டிக்கொண்டு, உடலைப் பின்வளைத்துத் துடைகளின்மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து "திடும்..திடும்.ததிக்குண..ததிக்குண" என்று தவுல் வாசிப்பவனைப்போல் முழங்கினான். சீனிவாசனும்

இதில் பங்கெடுத்துக்கொண்டான், இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்கமுடியவில்லை. "இப்போ போகிறீர் களா இல்லையா கழுதைகளே" என்று கத்தினான். குழந்தைகள் ஓட்டம் பிடித்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுதுகொண்டிருந்தாள். எல்லோரும் அரவம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக்கொண்டான். இப்படி வெகுநேரம் அவர்களால் இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், "நான் வீட்டுக்குப் போறேன்" என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந் தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பி னாள். இதற்குள் சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக்கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான். லட்சுமியும் பார்த்தாள்.

"பாப்பாவைத் தொட்டுப்பாரு அக்கா; உடம்பு சுடுது" என்றான். லட்சுமி தொட்டுப் பார்த்தாள்; அனலாகத் தகித்தது.

சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளி களுடன் வந்தாள். சுள்ளிகள் சேகரிக்கும்போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக்குழந்தையை வாங்கிக்கொண்டாள். "உடம்பு சுடுகிறதே?" என்று தனக்குள் கேட்டுக்கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.

செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது; உடம்பெல்லாம் கண்ணுக்குத் தெரியாத ஒரு நடுக்கம் பரவியது. அவள் விடும் சுவாசத்தின் வெப்பம் அதிகமாகியது. வயிற்றில் தாங்கமுடியாத ஒரு வலி தோன்றியதுபோல், குழந்தையை இறுகப் பிடித்துக்கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக்கூடாது என்று எவ்வளவுதான்

அடக்கினாலும் முடியவில்லை. "என்னைப் பெத்த தாயே" என்று அலறிவிட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்திலிருந்து விலகிக்கொண்டார்கள். இனம் தெரியாத பயத்தின் காரணத்தினால் அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்று கொண்டே இருந்தன. இரவு வந்துவிட்டால் குளிர் தாங்கமுடியாமல் குழந்தைகள் நடுங்குவார்கள்; கதவு இல்லாததால், வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக் காற்றைப்போல் வீட்டினுள் வந்து அலை மோதிக்கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக்கொண்டே வந்தது. ஒரு நாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டைவிட்டு அவர்களையும்

விட்டுப் பிரிந்து சென்றுவிட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்லமுடியாது. லட்சுமிக்காகவும் சீனிவாசனுக் காகவுமே அவள் உயிர் தரித்திருந்தாள்.

சீனிவாசன் இப்பொழுது பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியானம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது. கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் ஆர்வம் கொள்ளவில்லை.

"அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கி; சாப்பிட்டு இந்தப் படத்தை ஓட்டனும்”

"தம்பி, கஞ்சி இல்லை" இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.

"ஏன்! நீ காலையில் காய்ச்சும்போது நான் பாத்தேனே'

'ஆம்' என்ற முறையில் தலையசைத்து விட்டு, "நான் வெளிக்குப் போயிருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்து விட்டுப் போய்விட்டது தம்பி...கதவு இல்லையே" என்றாள் துக்கமும் ஏக்கமும் தொனிக்க. தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக்கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்துப் படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை. என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவரில் ஒட்டினான். படம் கீழே விழுந்துவிட்டது. அடுத்த இடத்தில் அடுத்த சுவரில், எல்லாம் ஒட்டிப்பார்த்தான்; ஒன்றும் பிரயோசனம் இல்லை. ஏமாற்றத்தாலும் பசியாலும் அவன் அழ ஆரம்பித்தான்.

சாயந்திரம் லட்சுமி சட்டிபானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்க ஓடி வந்தான். "அக்கா அக்கா நம்ம பள்ளிக் கூடத் துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு. அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டுக் கதவு இருக்கக்கா! கண்ணாலே நான் பாத்தேன்"™ பாத்தேன்" என்றான்.

"அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பாப்போம்" என்று சீனிவாச னின் கையைப்

பிடித்தாள், இருவரும் கிராமச் சாவடி நோக்கி ஓடினார்கள்.

உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தூரத்திலி ருந்தே தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச் சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றும்முற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.

அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்லமுடியாது.

அங்கே முளைத்திருந்த சாரணத்தியும் தைவாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள். அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள்.

கதவோடு தன் முகத்தை ஒட்டவைத்துக்கொண்டாள். அழ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு! சீனிவாசனைக் கட்டிப் பிடித்துக்கொண்டாள். முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது, சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

4.1 கலைச்சொல்லாக்கம்

முன்னுரை

அறிவுத்துறையில் கலைச்சொற்களின் பங்கு அளவிற்கரியது. பொருத்தமான கலைச்சொற்களை அடிப்படையாகக் கொண்டுதான், எந்தவொரு தகவல் தொடர்பும் முழுமையடைய முடியும். கருத்துத் தொடர்புகளை அடியொற்றி, அறிவுப் பகுதியை வரிசைப்படுத்த கலைச்சொல் உதவுகிறது. மனிதனின் எந்தவொரு செயலும் கருத்துக்களை அடியொற்றியதாக இருக்கும். இக் கருத்துக்கள், ஒரே புலத்திலுள்ள கருத்துக்களோட் மட்டுமின்றி, பிற புலக் கருத்துக்களோடும் தொடர்புடையனவாக இருக்கும்; கலைச்சொற்களொடும் தொடர்புடையனவாக இருக்கும். கருத்துக்களைக் குறிக்க புதிய கலைச்சொற்கள் உருவாக்கப்பட வேண்டும். புதிய

ஏனென்றால், அறிவு, திறமை, தொழில்நுட்பம் ஆகியவை ஆகியவற்றை ஒருவரிடமிருந்து மற்றவருக்குப் பரிமாற்றம் செய்ய கலைச்சொல் உதவுகிறது.

கலைச்சொல் வரைவிலக்கணம்

'Teachnic' என்னும் ஆங்கிலச் சொல், 'Technicus' என்ற இலத்தீன் சொல்லில் இருந்து வந்துள்ளது. இந்த இலத்தீன் சொல்லுக்கு கலை என்று பொருள். சாதாரசமாக வழக்கில் உள்ள சொற்கள் சிறப்புப் பொருண்மைக்கு உரியதாகிவிட்டால், அச்சொற்கள் கலைச்சொற்கள் என்ற

சிறப்பு நிலையினைப் பெற்றுவிடுகின்றன. குறிப்பிட்ட அறிவுத்துறையில் இடம்பெறும் கருத்தமைவுகளை விளக்கும் சொற்களே 'கலைச்சொற்கள்' என்னும் சொல்லால் குறிப்பிடப்படுகின்றன.

கலைச்சொல் என்பது வழக்குச் சொல்லைப் போலவே தொடரில் இயங்கும். பெயராகவோ, வினையாகவோ அல்லது பிற இலக்கணக் கூறாகவோ இருக்கும். குறியீடாகவும் இருக்கும். எப்படியிருந்தாலும், அதனுடைய கருத்துச் செம்மையாக வரையறுக்கப்படும் போதுதான், அது கலைச்சொல் என்ற மழுமையான நிலையை அடைகிறது.

கலைச்சொல்லின் பரிமாணங்கள்

கலைச்சொல் பணிக்கு மூன்று பரிமாணங்கள் உள்ளன. அவை:

1. பாடத்துரை
2. மொழி
3. அணுகுமுறை

(அ) கலைச்சொல்லாக்க அறுதியிட்டுக்கொள்ள வேண்டும். வேண்டியப் பாடத்துறையை முதலில்

(ஆ) தன்மைகளுக்க ஏற்ப கலைச்சொல் கொள்கைகளையும், கலைச்சொல்லாக்க நெறிமுறைகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

(இ) தமிழில் கலைச்சொல் உருவாக்கும்போது, அது தமிழ்மொழியின் தன்மைக்கு ஏற்ப அமைய வேண்டும்.

(ஈ) மலையாளம், தெலுங்கு முதலான இன மொழிகளோடும் பிற மொழிகளோடும் ஒப்பிட்டு, கருத்துக்களையும் கலைச்சொற்களையும் சீர்படுத்தலாம்.

(உ) பிறதுறைத் தொகுதியை உருவாக்க, முறையான கலைச்சொல் பணியும், கருத்துத் தொடர்புகளைத் தெளிவாக்கும் பணியும் உதவும்.

கலைச்சொற்களின் பண்புகள்

1. கலைச்சொற்கள் கருத்து விளக்கங்களையும், பொருள் விளக்கங்களையும் உடையவை.

2. பல்வேறு அறிவுத் துறைகளையும், அவற்றைச் சார்ந்த கருத்துப் படிமங்களையும் (Concept) தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு, மனிதன் படைத்துக் கொள்ளும் சொற்களே கலைச்சொற்கள்.

3. கலைச்சொல் ஒரே பொருளைக் குறிக்கும் தன்மையுடையது எனலாம். 'தெளிவாக வரையறுக்கப்பட்ட ஒன்று அல்லது பல பொருளைக் கொண்ட மொழியியல் குறிகளாலான ஒரு சொல், கலைச்சொல் எனப்படும்' என்று கலைச்சொல்லியல் (Terminograph) பற்றி அறிஞர் ஹெல்முட் பெல்பர் கூறுகிறார்.

4. குறிப்பிட்ட ஒரு துறைக்குள் பயன்படுத்தப்படும் கலைச்சொற்கள் காலம், இடம் ஆகியவற்றிற்கு ஏற்பப் பொருள் மாற்றம் பெறுவதில்லை; குறித்த ஒரு பொருளிலேயே வந்து அமைகிறது.

எ.கா: கணிதவியலின் இயற்கணிதத்தில் (Modern Algebra) 'Matrix' என்ற சொல் உள்ளது. இப் பாடத்திற்கானத் தமிழ் விளக்கத்தில் 'அணி' என இதற்குக் கலைச்சொல்லாக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆனால், அணி என்பது தமிழ்மொழியைப் பொறுத்தவரை, இலக்கணப் பிரிவைக் குறிக்கிறது.

5. தமிழ்மொழி சொல்லாக்கத்திற்கும், கலைச்சொல்லாக்கத்திறனுக்கும் உள்ள இயைபு, மிகுந்த வரையறை உடையது எனலாம்.

6. விரிவான சிந்தனைகளின் சுருக்கமான மொழி வடிவமே கலைச்சொல்லாகும்.

கலைச்சொல் உருவாக்கத்தில் கவனிக்க வேண்டியவை

1. தமிழில் புதிய கலைச்சொற்களை உருவாக்குவர், மூலமொழிப் புலமையுடன் தமிழ்மொழிப் புலமையும் பெற்றவர்களாக இருக்க வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே கலைச்சொல்லாக்கப் பணியைச் சிறப்பாகச் செய்யமுடியும்.

2. பிறமொழிச் சொற்களுக்குச் இணையானப் புதிய தமிழ்ச் சொற்களைப் படைக்க முற்படுவதற்கு முன்னால், அதே பொருளில் வழங்கும் பழந்தமிழ்ச் சொற்கள் உள்ளனவா என ஆய்ந்தரிய வேண்டும்.

எ.கா: பழஞ்சொற்கள்

Bachelor - DT गी

Counterfoil -

Nucleus - क

Atom-ग्या

புதிய சொற்கள்

Liquid - நீர்மை

Township कां

Impellar - की

Governor -

இவை தமிழ்ச் சொற்களில் சில விகுதிகளை இணைத்தமையால் ஏற்பட்ட புதிய கலைச்சொற்களாகும்.

3. பிறமொழிச் சொற்களுக்கு ஏற்ற கலைச்சொற்களாகப் புதிய பொருளில் வழங்குவது, புதிய கலைச்சொல் படைக்கும் முறையாகும்.

4. கலைச்சொல்லாக்கத்தின் போது மொழிபெயர்ப்பில் தகுந்த கவனம் தேவை என முனைவர் குழந்தைசாமி கூறுகிறார்.

5.கலைச்சொற்கள் இனிய, எளிய சொற்களாயிருத்தல் வேண்டும்.

6. கலைச்சொற்கள் தமிழில் அமைந்திருந்தால் மட்டும் போதாது, சுருக்கமாகவும், எளிமையாகவும், பொருட்பொருத்தத்துடன் அமைதல் வேண்டும்.

7. கலைச்சொல் மேன்மேலும் பல சொற்களைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும்.

Library

1. Library - நூலகம்

2. Librarian -நூலகர்

3. Library Science – நூலக அறிவில்

நூலகம் என்ற கலைச்சொல் மேற்கண்டவாறு, அதனோடு தொடர்புடைய LIGU கலைச்சொற்களை உருவாக்கத் துணை நிற்கின்றது.

8. கலைச்சொற்கள் ஒரு சீர்மைப் பண்பினைப் (Uniformity) பெற்றிருத்தல் வேண்டும்.

எ.கா: Photograph புகைப்படம் - நிழற்படம்

கலைச்சொல் உருவாக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவை

1. எளிதில் பொருள் விளங்காத, அளவில் பெரிய சொற்கள் அச்சத்தை ஏற்படுத்தும்.

எ.கா: Apartments - அடுக்குமாடிக் குடியிருப்பு

அடுக்ககம்

மேற் குறிப்பிட்டுள்ள 'அப்பார்ட்மென்ட்', என்ற ஆங்கிலச் சொல்லுக்கு முதலில் 'அடுக்குமாடிக் குடியிருப்பு' என்ற கலைச்சொல் உருவாக்கப்பட்டது. அது அளவில்

நீண்டும், ஒன்றுக்கு மேற்பட்ட சொற்களோடும், அச்சத்தை ஏற்படுத்தும் வகையிலும் உள்ளதால் பின், 'அடுக்ககம்' என்ற கலைச்சொல் உருவாக்கப்பட்டது.

2. பொருள் மயக்கத்தைத் தரும் சொற்களைத் தவிர்த்தல் வேண்டும்.

எ.கா: Ball point pen பந்து முனைப் பேனா

மைக்கோல்

Pencil -கரி எழுதுகோல்

- கரிக்கோல்

மேற் குறிப்படப்பட்டுள்ள, 'பால் பாய்ண்ட் பென்' என்ற சொல்லுக்கு 'பந்து முனைப் பேனா' என்ற கலைச்சொல் மிக நீண்ட, நேரடியான, பொருள் மயக்கமுள்ளதாகும். 'மைக்கோல்' என்பதே சரியான கலைச்சொல்லாகும். அதைப்போல, 'பென்சில்' என்பதற்கு 'கரிக்கோல்'

சரியான கலைச்சொல்லாகும்.

3. ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்களைப் பயன்படுத்தக் கூடாது.

ா.கா: Cell phone செல்பேசி

செல்லிடப்பேசி

- கைப்பேசி

-அலைப்பேசி

'செல்போன்' என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கலைச்சொற்கள் தமிழில் வழங்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் உருவாவதற்கு சில காரணங்கள் இருப்பினும், ஒரு பொருளைக் குறிக்க பல கலைச்சொற்கள் இருப்பது கருத்துக் குழப்பத்தையும், எச்சொல்லைக் கொண்டு அழைப்பது என்ற தடுமாற்றத்தையும் ஏற்படுத்தும். ஆகையால், ஒரு பொருளுக்கு ஒரு கலைச்சொல் இருப்பதே சரியாகும். அது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, பொருட் குழப்பமற்ற அளவில் சிறிய, , எளிமையான, அழகான கலைச்சொல்லாக இருப்பது அவசியம்.

4. பல பொருளைக் குறிக்க ஒரே சொல்லைப் பயன்படுத்துவது பெருங்குழப்பத்தை ஏற்படுத்தும்.

எ.கா: Bark - பட்டை

Band - பட்டை

Periderm - பட்டை

அறிவியல் கலைச்சொல்லாக்கமும், தேவைகளும்

அறிவியல் தொழில் நுட்பச் செய்திகளைத் தெளிவாகக் கண்டறியவும் பரப்பவும் கலைச்சொற்கள் முதன்மைத் தேவையாக உள்ளன.

அறிவியல் தொழில் நுட்ப உரைகள் மற்றும் நூல்கள் போன்றவற்றை வேறு மொழிகளுக்கு மொழிபெயர்க்க கலைச்சொற்கள் தேவையாகும்.

துறைக் கருத்துக்களின் சுருக்கங்களைத் தயாரிக்க கலைச்சொற்கள் அடிப்படைத் தேவையாக உள்ளன.

அறிவியல் தொழில் நுட்பச் செய்திகளைத் தொகுக்கவும், ஆவணப்படுத்தவும் கலைச்சொற்கள் தேவையாக உள்ளன. சேகரிக்கவும்,

அகராதிகள், கலைக் களஞ்சியத் தொகுதிகள் முதலானவற்றைத் தயாரிக்கவும் கலைச்சொற்கள் அடிப்படைத் தேவையாக உள்ளன.

ஆகையால், அறிவியல் முதலிய பல்வேறு துறைகளிலும் புதிய கலைச்சொற்களை உருவாக்கும் பணி, ஏறத்தாழ நாற்பது ஆண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டதைக் காணலாம்.

அறிவியல் கலைச்சொற்கள்

பொது

Agency -முகமை

Anthropology மானிடவியல்

Archeology -தொல்லியல்

Broadcast -ஒலிபரப்பு

Global warming -உலக வெப்பமயமாதல்

Globalisation உலகமயமாக்கல்

Heavy Vechilcle

கனரக வாகனம்

Liberalisation - தாராளமயமாக்கல்

Modernisation - நவீனமயமாக்கல்

Pollution மாசு

Telecast -ஒளிபரப்பு

கணிதம்

Analysis - பகுமுறை

Calculus - நுண்கணிதம்

Circumference சுற்றளவு

Desimal system - தசம முறை அல்லது பதின்முறை

Diameter விட்டம்

Divisible number - பகு எண்

Formula -வாய்ப்பாடு

Integer -முழு எண்

Pentagon - ஐங்கோணம்

perpendicular - செங்குத்து

Prime number - பகா எண்

Quadrangle - நாற்கோணம்

Radius ஆரம்

Square -சதுரம்

Statistics புள்ளியியல்

Symbol -குறியீடு

Triangle - முக்கோணம்

Unit அலகு

இயற்பியல்

Acceletator -முடுக்கி

Acoustic ஒலி சார்பியல்

Amplifier -ஆற்றல் பெருக்கி

Automatic Energy அணு ஆற்றல்

Boiler கொதிகலன்

Booster ஊக்கி

Capasiter மின் தேக்கி

Dynamo மின்னியக்கி

Equilibrium சமனநிலை

Filament -இழை

Fission -பிளப்பு

Flurescence -ஒளிர்வு

Fusion - பிணைப்பு

Infra red rays அகச் சிவப்புக் கதிர்

Photo Detector -ஒளித்துலக்கி

Piston - உந்துதண்டு

Power loom - விசைத்தறி

Radio activity -கதிரியக்கம்

Satellite செயற்கைக் கோள்

Spectrum -நிறமாலை

Speedo meter வேகமானி

Starter - தொடக்கி

Vibrator -அதிர்வி

Voltage மின்னழுத்தம்

Welding உருக்கி இணைத்தல்

வேதியியல்

Acid அமிலம்

Adhesive பசை

Alkaline காரத்தன்மை

Anod -நேர் மின்முனை

Atom அணு

Catalyst வினை வேகமாற்றி

Cathode - எதிர் மின்முனை

Compond சேர்மம்

Electrolysis - மின்னாற் பகுத்தல்

Element - தனிமம்

Evoporation ஆவியாதல்

Mixture கலவை

Molecule மூலக்கூறு

Non-Metals அலோகங்கள்

Solution கரைசல்

Sublimation - பதங்கமாதல்

உயிரியல்

Afforestation

Bio-synthesis

Culture medium

Fungi

Genera

Genes

-காடு வளர்த்தல்

உயிரியல் தொகுப்புமுறை

வளர் ஊடகம்

- பூஞ்சை (காளான்)

பேரினம்

- மரபணுக்கள்

Green house effect

- பசுங்குடில் விளைவு

Hybrid கலப்பினம்

Hydrophyte - நீர்வாழ் தாவரம்

Metabolas வளர்சிதை மாற்றம்

Mosh -அந்திப்பூச்சிகள்

Mutation - தடீர் மாற்றம்

Pollination

Species

Stigma

Synthesis

Tissue

Nodes

Osmosis

Pesticide

Photo-synthesis

கணுக்கள்

சவ்வூடு பரவல்

-பூச்சிக் கொல்லி

- ஒளிச்சேர்க்கை

- மகரந்தச் சேர்க்கை

- சிற்றினம்

- சூல்முடி

தொகுப்புமுறை அல்லது சேர்க்கை

-திசு

Valve -திறப்பி

Xerophyte வளர் நிலத் தாவரம்

மருத்துவம்

Accupuncture - சீன மருத்துவம்

Analgesic விலி நீக்கி

Anesthesia - உணர்வகற்றி

Anti-septic - நச்சுத் தசை

Capsules - மருந்துரை

Chicken pox - தட்டம்மை அல்லது சின்னம்மை

Dentist - பல் மருத்துவர்

Diabetes -நீரழிவு நோய்

Disinfectant - தொற்றுக் கிருமி நீக்கி

Hemorhage -இரத்தக் கசிவு

Insulin சுரப்புநீர்

Mums அம்மைக்கட்டு

Orthopedics எலும்பு மருத்துவர்

Paralysis - முடக்குவாதம்

Pathology நோய்க் கிருமியியல்

Physician - மருத்துவர் (பொது)

Small pox -பெரியம்மை

Specialist வல்லுநர்

Theraphy - நோய் நீக்கல்முறை

Triple Antigen - முத்தடுப்பு

விண்வெளி

Galaxy உருமண்டலம்

Gravity புவிஈர்ப்பு

Light year -ஒளியாண்டு

Orbit சுழல்பாதை

Remote Control -தொலைவியக்கி

Space Station விண்வெளி நிலையம்

Star விண்மீன்

Telescope -தொலைநோக்கி

Vectra Violet - புறஊதா

Velocity விரைவு

கணினி

Browser -உலாவி

Chip -சில்லு

Compact disc கையக வட்டு

Computer கணினி

Cursor -சுட்டி

Disc வட்டு

E-mail -மின்னஞ்சல்

Floppy disc -நெகிழ் வட்டு

input உள்ளீடு

Key board -விசைப் பலகை

Lan -பிணையம்

Monitor -கணினித் திரை

Mouse சிற்றெலி

Multimedia பல்லூடகம்

Network வலையகம்

Web -இணையம்

2. கடிதம்

முன்னுரை

'கடிதம்' எழுதுவது ஒரு சிறந்த கலையாகும். இது உலக உறவை உருவாக்கும் பாலமாகத் திகழ்கிறது. செய்தியைத் தெரிவிக்கும் விருப்பமே கடிதத்தின் அடிப்படைத் தூண்டுகோல். முதலில் ஆள்வழி சொல்லியனுப்பும் தூது வழக்கத்தில் இருந்தது. தூது சொல்லுவதற்காகச் செல்பவரிடம், சொல்லியனுப்பக் கூடாத கமுக்கத் தகவல்கள் உருவான நிலையில், எழுத்துமூலம் எழுதிக் காப்பிட்டு அனுப்பப்பட்டது.

சொற்பொருள்

முற்காலத்தில் நம் நாட்டில் கடிதங்களைப் பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு எழுதினர். ஓலையில் எழுதியதால், 'ஓலை' என்றே கடிதம் வழங்கப்பட்டது. இந்நாளில், அவற்றைக் கடிதங்களில் எழுதுவதால் கடிதம் என அழைக்கிறோம். 'கடி' சொல்லுக்கு விரைவு என்பது பொருள். விரைவாகச் செய்தியனுப்பும் சாதனம் கடிதம் எனப்படுகிறது.

கடிதம் எழுதும் பயிற்சி

பொருளுக்கும் தேவைக்கும் ஏற்ப பல்வேறு முறையில் கடிதங்கள் எழுதப்படுகின்றன. ஒவ்வொரு வகையான கடிதமும் எழுதப்படும் முறையால் வேறுபடுகின்றன. ஆகையால், கடிதம் எழுதும் பயிற்சியை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்

மாணவர்கள் கடிதம் எழுத ஆயத்தப் படுத்துவதற்கு முன்னர், ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் தெளிவுறுத்த வேண்டுவன பலவாகும். அவை:

1. கடிதம் எழுதும் படிநிலையின் விளக்கம்

2. கடித மொழிநடை

3. நிறுத்தக் குறியீடுகளின் இன்றியமையாமை

4. கடிதங்களின் வகைப்பாடு

காலந்தோறும் கடிதங்கள்

பனையோலைகளில் வரையப்பெற்ற கடிதங்களை, அப்படியே சுருள் செய்து, காப்பிட்டு, நம்பிக்கைக்கு உரியவர்கள் வாயிலாக அனுப்பி வைப்பது வழக்கம். செய்தி அடங்கிய ஓலையை வளைத்துச் சுருள் செய்தலின், அது 'முடங்கள்' என்னும் பெயர் பெற்றது. (முடங்கல் - வளைதல்)

'பத்திரம்' என்ற சமஸ்கிருதச் சொல்லுக்கு இலை என்பது பொருள். இதனால், ஓலையில் எழுதப்பெற்ற ஆவணங்கள் 'பத்திரம்' என்ற பெயரைப் பெற்றன.

கடிதம் எழுதுதல் ஒவ்வொருவரின் பள்ளி வாழ்விலும், பிற்கால வாழ்விலும் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

ஒருவரின் முன்னமர்ந்து தெளிவாகவும், இனிமையாகவும் பேசுவதால் பெறும் பயன்களை எல்லாம், தொலைவிலிருப்பர் எழுதும் கடிதங்களின் மூலமும் பெறக்கூடும்.

கடிதம் எழுதும் நோக்கங்கள்

1. தொலைவில் உள்ளவரிடம் தொடர்பு கொள்ளுதல்.

2. வாய்மொழியால் சொல்ல இயலாதவற்றை அறிவித்தல்.

3. பயணச் செலவையும், காலம் வீணாவதையும் தவிர்த்தல்.

4. உறவை மேம்படுத்துதல்.

5. தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளுதல்.

6. பாராட்டுகள் வழங்குதல்.

7. நன்றி தெரிவித்தல்.

8. உள்ளத்து உணர்வை எழுத்துருவமாக மாற்றுதல்.

9. கறபனையாற்றலை வளர்த்தல்.

10. கோவையாக எழுதுந்திறனை வளர்த்தல்.

போன்ற நோக்கங்கள் 'கடிதம்' எழுதுவதால் நிறைவேற்றிவேற்றிக் கொள்ளப்படுகிறது.

கடித இலக்கியம்

அறிஞர் பெருமக்கள் கடிதம் எழுதும் முறையில், தங்களின் சிந்தனைகளைப் படைத்தளித்துள்ளனர். அதன் காரணமாக 'கடித இலக்கியம்' என்னும் ஒரு இலக்கிய வகையாகவும் வளர்ந்துள்ளது. மிக முக்கியமான கருத்துக்களை, தங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு, கடிதம் எழுதும் முறையில் சொல்லும் முறையே சொல்லும் முறையே

கடித இலக்கியத்தின் தனித்தன்மையாகும்.

சீன மெய்யியல் அறிஞர் ஆலிவர் கோட்வ் ஸ்மித் எழுதியுள்ள கடிதப் படைப்புகள் புகழ்பெற்றவை. தன்னுடைய மெய்யியல் கருத்துக்களை, அப் படைப்புகளின் மூலம் எளிமையாகத் தந்துள்ளார்.

ஜவகர்லால் நேரு அவர்கள், தன் மகள் இந்திரா காந்திக்குக் கடிதம் எழுதும் முறையில் சில கடிதப் படைப்புகளைச் செய்துள்ளார். அக் கடிதப் படைப்புகளில், இந்த உலகம் தோன்றி வளர்ந்த வரலாற்றை, ஒரு சிறுமிக்குச் சொல்லும் கதையைப் போல எளிய மொழிநடையில், படிக்கத் தூண்டும் விதத்தில் எழுதியுள்ளார்.

தமிழ்மொழியில் 'சீட்டுக் கவிகள்' என்பது சிற்றிலக்கிய காலத்தில் வழங்கியுள்ள ஒரு இலக்கிய வகையாகும். ஒரு புலவர் மற்றொரு புலவருக்கு சீட்டுக் கவிகளை எழுதி அனுப்பியுள்ளனர். இது பாடல் வடிவில் உள்ள கடிதங்கள் என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

முனைவர் மு. வரதராசனார் 'தம்பிக்குக் கடிதங்கள்', 'அன்னைக்குக் கடிதங்கள்', 'நண்பருக்குக் கடிதங்கள்' என சில படைப்புகளை எழுதியுள்ளார். இதில் இலக்கியச் செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார்.

பேரறிஞர் அண்ணா 'தம்பிக்குக் கடிதங்கள்' என்னும் தலைப்பில் சில படைப்புகளைத் தந்துள்ளார். இதில் இலக்கியம், அரசியல் எனப் பல்வேறு துறை சார்ந்த செய்திகளை, கடிதம் போன்ற படிப்பதற்கு எளிமையான வடிவில் தந்துள்ளார்.

கடிதங்களின் வகைகள்

கடிதங்களை, 'எழுதப்படும் பேச்சு' என்று அறிஞர்கள் குறிப்பிடுவர். இக் கடிதங்களை உறவுமுறைக் கடிதங்கள், அலுவலகக் கடிதங்கள் என இருபெரும் பிரிவுகளாகப் பாகுபாடு செய்யலாம்.

உறவுமுறைக் கடிதங்கள்

குடும்ப உறுப்பினர்கள் தங்களுக்குள் எழுதிக்கொள்ளும் கடிதங்கள், உறவினர்கள் தங்களுக்குள் எழுதிக்கொள்வது, நண்பர்கள் தங்களுக்குள்ளாக எழுதிக் கொள்பவை முதலியன உறவுமுறைக் கடிதங்கள் எனப்படுகின்றன. இதில் நலம் விசாரித்தல், தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொள்ளுதல், சு க துக்கங்களைத் தெரிவித்தல் போன்ற எண்ணற்றவை பகிர்ந்துகொள்ளப் படுகின்றன.

ஒரு குழுவினைச் சார்ந்தவர்கள் அல்லது அரசியல் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் உறவினர்களைப் போலத் தங்களுக்குள் வாழ்த்துக்களை பகிர்ந்து மகிழ்தலும் உண்டு. தங்கள் இயக்கத்தைச் சார்ந்த ஒருவரின் திருமண நிகழ்வு போன்ற குடும்ப

நிகழ்வுகளையொட்டி எழுதப்படும் தனிப்பட்ட, வாழ்த்துக் கடிதங்கள் உறவுமுறைக்

கடிதங்களைப் போலவே காட்சியளிக்கின்றன.

அலுவலகக் கடிதங்கள்

1. வேலை வாய்ப்புகளுக்கான விண்ணப்பங்கள்
2. பரிந்துரைக் கடிதங்கள்
3. வணிகக் கடிதங்கள்
4. முறையீட்டுக் கடிதங்கள்
5. வேண்டுகோள் கடிதங்கள்

என அலுவலகக் கடிதங்களை வகைப்படுத்துவர்.

கடிதம் எழுதும் படிநிலைகள்

(உறவுக் கடிதம்)

அனுப்புநர் முகவரி

இது கடிதத் தலைப்பகுதியின் வலப்பக்க மேல் முனையில் அமைவது. அனுப்புநர் பெயரைத் தவிர்த்து, முகவரியை மட்டும் எழுத வேண்டும்.

விளி (அழைப்பு)

இது கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. இதைக் கடிதம் எழுதுவோர்க்கும், பெறுவோக்கும் உள்ள உறவுக்கேற்ற சொற்களாக அமைக்கலாம்.

கடிதச் செய்தி அல்லது பொருட் பகுதி

இது விளித் தொடருக்குக் கீழ் அமைவது. இதன் அளவும் பொருளும் கடிதம் எழுதுவோரின் எண்ணத்தைப் பொறுத்து அமையும். இனிய, எளிய, தெளிவான தொடர்களாக அமைப்பது நலமாக இருக்கும். கடிதத்தைப் பெறுவோரின் அறிவுத் தகுதிக்கேற்ற மொழிநடையைப் பின்பற்ற வேண்டும். நம் மொழிப் புலமையைக் காட்டும் களமாகக் கடிதம் அமைதல் கூடாது.

வணங்கற் பகுதி

இது கடிதச் செய்தியின் கீழ் வலப்பகுதியில் அமைவது. இதில் கடிதம் எழுதுவோருக்கும், பெறுவோருக்கும் உள்ள உறவுக்கேற்றத் தொடர்கள் அமையும்.

ஒப்பப் பகுதி

இது வணங்கற் பகுதிக்குக் கீழ் அனுப்புநர் கையொப்பம் இடுவது ஆகும்.

பெறுநர் முகவரி

கடிதம் ஒற்றைத் தாளாக இருப்பின், கையொப்பப் பகுதியின் நேர் இடப்பக்கக் கீழ்ப் பகுதியில் இது அமையும். பெறுநரின் பெயர் உள்ளிட்ட தெளிவான முகவரியை, அஞ்சல் குறியீட்டு எண்ணுடன் முடியுமாறு எழுத வேண்டும்.

அஞ்சலட்டை, அஞ்சல் துறைக் கடிதமாக இருப்பின், பின்புறத்தில் கடிதம் பெறுவோரின்

முகவரிக்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் அவர் முகவரியை எழுத வேண்டும்.

உறவுக் கடிதம்

(மாதிரி)

எண்: 56, இலட்சுமி தெரு,

607303 - ﻓ ﻳ

14.06.2011

அன்புத் தோழி,

நலம், நலமறிய ஆவல். நாங்கள் நலமாக வீட்டுக்கு வந்து சேர்ந்தோம். நான் என் குடும்பத்துடன் உன் வீட்டுக்கு வந்தபோது, எனக்குப் பெரும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆரவாரம் மிக்க நகர வாழ்க்கை வாழும் எனக்கு உன் கிராமச் சூழல் பேரின்பம் அளித்தது.

வருகின்ற கோடை விடுமுறையின் போது, நீ உன் குடும்பத்துடன் எங்கள் வீட்டுக்கு வரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். அப்போது, சென்னையில் பார்க்க வேண்டிய பல இடங்களை உனக்கு நான் காட்டுவேன்.

உன் புதிய பள்ளி அனுபவம் பற்றி எனக்குக் கடிதம் எழுதுக.

அன்புள்ள,

பெறுநர்

திருமண வாழ்த்துக் கடிதம்

(அறிஞர் அண்ணா)

2, பாலகிருஷ்ண பிள்ளைத் தெரு,

சிந்தாதிரிப்பேட்டை,

சென்னை.

09.07.44

தோழர் மோகன சுந்தரம் அவர்களுக்கு,

வணக்கம். தங்கள் மன்றல் இதழ் கிடைக்கப் பெற்றேன்.

மகிழ்ந்தேன். தமிழர் தலைவர் திரு.வி.க அவர்களின் சீரிய தலைமையில் உமது வாழ்க்கை ஒப்பந்த விழா நடக்கப் போவதறிந்து இரட்டிப்பு மகிழ்ச்சியே. தமிழ்ப் பணியார்வம் மிக்க உமது எதிர்காலம், உனது துணைவியாரின் தோழமையால், பயனும் பண்பும் மிகுந்திட விளங்கும் என்று நம்புகிறேன். தங்கள் வாழ்வு பொலிவுடன் விளங்க வேண்டுமென்று விழைகிறேன்.

நேரிலே வரமுடியவில்லை. வேறு பல வேலைகள் - எல்லாம் தமிழர்க்கே.

என் வாழ்த்து,

அண்ணாதுரை.

அலுவலகக் கடிதம் எழுதும் படிநிலைகள்

அனுப்புநர் முகவரி

கடிதத்தின் தலைப்பில் இடப்பக்கம் அமைவது. அனுப்புநரின் பெயர் உள்ளிட்ட முழு முகவரியைத் தெளிவாக எழுத வேண்டும்.

பெறுநர் முகவரி

அனுப்புநரின் முகவரிக்குக் கீழ் அமைவது. இவ்வகைக் கடிதத்தில், பெறுநரின் இயற்பெயரை எழுதக்கூடாது. அவர் ஏற்றுள்ள பணித் தகுதிப் பெயரையே எழுத வேண்டும் என்பது கவனிக்கத் தக்கது.

விளி (அழைப்பு)

கடிதத்தின் இடப்பக்கம் அமைவது. உறவுமுறைக் கடிதம் போல் அமையாமல், பெறுபவரின் பணித்தகுதி மதிப்பைக் குறிக்கும் வகையில் இவ்விளித் தொடரை அமைக்க வேண்டும்.

பொருள்

இது விளித் தொடருக்குக் கீழ் அமைவது. கடிதத்தின் கடிதத்தின் தேவையை, இப் பகுதியில் ஓரிரு வரிகளில் சுருங்க உரைக்க வேண்டும்.

கடிதச் செய்தி அல்லது உடல்

பொருள் பகுதிக்குக் கீழ் அமைவது. பொருட் சுருக்கத்தின் விளக்கமாக அமைதல் வேண்டும். நம் தேவையைக் காரண-காரியத்தோடு உரைப்பது போதுமானது.

வணங்கற் பகுதி

கடிதச் செய்திப் பகுதியின் கீழ் வலப்பகுதியில் அமைவது. அனுப்புநருக்கும் பெறுபவருக்கும் உள்ள உண்மைத் தன்மையையும், பணிவையும் காட்டுவதாக இருக்க வேண்டும். உறவுமுறைக் கடிதம் போல் அன்பைப் புலப்படுத்தக் கூடாது.

ஒப்பப் பகுதி

வணங்கற் பகுதியின் கீழ் அமைவது. அனுப்புநரின் கையொப்பம் இடம்பெற வேண்டும்.

நாள் -இடம்

கடிதச் செய்திக்குக் கீழும், அனுப்பநர் நேர் இடப்பக்கமும் இது அமைய வேண்டும்.

நாள் முன்னும் இடம் பின்னுமாகக் குறிப்பிட வேண்டும்.

அலுவலகக் கடிதம்

(மாதிரி)

அனுப்புநர்

கோ.தமிழ்நம்பி (ஊர் மக்கள் சார்பாக),

9, திருவள்ளுவர் தெரு,

பொன்பரப்பி,

அரியலூர் மாவட்டம் - 621 710.

பெறுநர்

மாவட்ட ஆட்சியாளர்,

அரியலூர் மாவட்டம்,

அரியலூர்.

மதிப்பிற்குரிய ஐயா,

பொருள்: நூலகம் அமைத்துத் தர வேண்டுதல் சார்காக.

எங்கள் சிற்றூர் வரலாற்றுப் பழமையுடையது. இதன் இன்றைய மக்கள்தொகை 700 ஆகும். கிராம மக்கள் விழிப்புற்றவராய் தம் பிள்ளைகளின் கல்வியில் அக்கரை காட்டி வருகின்றனர். ஊர்ப் பிள்ளைகளும் தம் படிப்பில் நாட்டம் உடையவராய்த் திகழ்கின்றனர். இந்தச் சூழ்நிலையில் இவ்வூரில் ஒரு நூலகம் இருந்தால் பெருதும் பயன் தரும் என எண்ணுகிறேன்.

எனவே, எங்கள் அறிவுக் கண்களை அகலத் திறக்கும் வளமான ஒரு நூலகத்தை, எங்கள் ஊரில் ஏற்படுத்தித் தருமாறு ஊர் மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

தங்கள் உண்மையுள்ள,

கோ. தமிழ்நம்பி (பொன்பரப்பி ஊர் மக்களுக்காக).

ஞுர: 20.07.2010

இடம் : பொன்பரப்பி

பேச்சு

முன்னுரை

'பேசுதல்' மனிதர்களின் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்றாக அமைந்திருக்கிறது. மக்களின் அன்றாட வாழ்க்கை நடவடிக்கைகளில் தொடங்கி, அனைத்துச் செயல்களும் நிகழ்வதற்கும் பேச்சு தேவையாக உள்ளது. படித்தவர் - படிக்காதவர், இலக்கணம் அறிந்தவர் - அறியாதவர் என அனைவரின் பேச்சிலும் ஒருவகையான இலக்கணமுறை அமைந்துள்ளது. அதன் காரணமாக மட்டுமே பேச்சு பொருளுடையதாக உள்ளது. குடும்பத்தினர் தங்களுக்குள் பேசிக்கொள்ளுதல், நண்பர்களுக்கிடையிலான உரையாடல், மாணவர்கள் தங்களுக்கிடையில் கருத்துகளைக் கூறி மகிழ்தல் ஆகியவை தன்னியல்பாடன பேச்சுகளாகும்.

ஒரு இலக்கை அடைவதற்கான முறையான, திட்டமிட்ட, நோக்கத்துடன் கூடிய பேச்சினைப் பற்றியும், அதனுடன் தொடர்புடைய செய்திகளைப் பற்றியும் தெரிந்து கொள்வது இந்தப் பாடப்பகுதியின் நோக்கமாகும். அவ்வாறு தெரிந்துகொண்டால்தான், பேச்சாற்றலை வளர்த்துக்கொண்டு, நாம் தேர்வுசெய்த துறையில் முன்னேற முடியும். இந்தப் பயன்பாட்டின் அடிப்படையில் பேச்சுக்கலை ஓர் அறிவியல் துறைபோல் முறைப்படுத்தப்பட்டு, கற்பிக்கப்படுகிறது. பேச்சுக்கலை தர்க்கரீதியாக விளக்கப்படுவதுடன், செயல்முறைகளுடன் பயிற்றுவிக்கப்படுகிறது.

அதனடிப்படையில் பேச்சு பற்றி இந்த பாடப்பகுதியை பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கலாம்:

1. பேச்சொலிகள்
2. பேச்சுத் திறன்
3. பேச்சுக்கலை

1. பேச்சொலிகள்

பொருள் தரக்கூடிய ஒலிகளின் முறையான சேர்க்கையில் சொற்கள் உருவாகின்றன. சொற்களின் முறையான ஒருங்கிணைப்பினாலும் தொடர் நிகழ்வினாலும் பேச்சு உருவாகிறது. இந்தப் பேச்சொலிகள்(எழுத்துக்கள்) உருவாவதற்கு அடிப்படையாக மனிதர்களின் உடல் உறுப்புகளின் முயற்சியும் இயக்கமும் அமைந்திருக்கிறது.

எழுத்துக்களின் தோற்றம்:

"உந்தி முதலா முந்துவளி தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்படநாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலை
பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல

திறப்படத் தெரியும் காட்சியான" (தொல். எழுத்து 83)
எழுத்துக்கள் பிறக்கின்ற முறையை தொல்காப்பியர் மேற்கண்டவாறு விளக்கியுள்ளார்.

அதாவது, சொற்களை உச்சரிப்பதற்குப் பயன்படும் எழுத்துக்களை உருவாக்கும் மூச்சுக்காற்று, வயிற்றின் அடிப்பகுதியிலிருந்து(தொப்புள் கொடிப்பகுதி) எழுகிறது. அது தலை, தொண்டை, நெஞ்சு ஆகியவற்றில் நிலைப்பெற்றும் பல், இதழ், நாக்கு, மூக்கு, மேல்வாய் போன்றவற்றில் ஓர் உறுப்போடு ஓர் உறுப்பு பொருந்தி அமைவதால் எழுத்துக்கள் உருவாகின்றன. இவ்வாறு தோன்றும் எழுத்துக்கள், அவை தோன்றிய இடத்தாலும் ஒலிப்பு முயற்சியாலும் வெவ்வேறு ஒலியையும் பொருளையும் பெறுகின்றன. தொல்காப்பியரின் இந்த விளக்கம் மொழியியல் அறிஞர்களின் கருத்துக்களுடன் ஒத்திருக்கின்றன.

பேச்சொலி உறுப்புகள்:

நாக்கு முதலிய பேச்சு உறுப்புகளைப் பயன்படுத்திக் கருத்தினைப் பரிமாற்றிக்கொள்ள பயன்படுத்தும் ஒலிகள் பேச்சொலிகள் எனப்படும். பேச்சொலியை ஆய்வு செய்யும் மொழியியல் துறை ஒலியியல் ஆகும்.

பேச்சொலியினை எழுப்பப் பயன்படும் உறுப்புகள் பேச்சு உறுப்புகள் அல்லது பேச்சொலி உறுப்புகள் எனப்படும். அசையும் உறுப்புகள், அசையா உறுப்புகள் எனப் பேச்சொலி உறுப்புகள் இரு பிரிவுகளாக உள்ளன.

நாக்கு, கீழ் உதடு, கீழ்த்தாடை, குரல்வளையில் உள்ள ஒலித்தசைகள் ஆகியன அசையும் உறுப்புகள் ஆகும். அண்ணம், மேல் வாய்ப்பல் ஆகியன அசையா உறுப்புகள் ஆகும்.

ஒலிகளை உருவாக்கச் செயல்படுகின்ற அசையும் உறுப்புகள் ஒலிப்பான் எனவும், அசையாது இருந்து ஒலிப்பு தோன்றக் களமாகும் அசையா உறுப்புகள் ஒலிப்பிடம் எனவும் அழைக்கப்படும்.

சில எழுத்துக்களை ஒலிக்கும் போது காற்று வாயில் நிறுத்தப்படும். சில எழுத்துக்களை ஒலிக்கும்போது நாவின் இருபக்கத்திலும் காற்று கசிந்து வெளியேறும். இத்தகைய ஒலிப்பு செயல்பாடுகள் ஒலிப்புமுறை எனப்படும்.

ஒலி வகைகள்:

உயிர், மெய் எனத் தமிழ்மொழியின் ஒலிகள் இருவகையாகப் பிரிக்கப்படுகின்றன. ஓர் ஒலியை ஒலிக்கும் முயற்சியில் காற்று தடைபடாமல் இயல்பாக வெளிப்பட்டால் அந்த

ஒலி உயிரொலி எனவும், காற்று தடைபட்டாலோ அல்லது திசை மாற்றத்துக்கு உள்ளானாலோ அந்த ஒலி மெய்யொலி எனவும் குறிப்பிடப்படும்.

உயிரொலிகள்:

உயிரொலிகள் மூன்று அடிப்படைகளில் ஒலிக்கப்படுகின்றன. அவை:

1) நா எழும் நிலை

2) வாயில் ஒலி பிறக்கும் பகுதி

3) இதழின்(உதடு) நிலை

ஆகியவற்றின் அடிப்படையில் உயிரெழுத்துக்களின் பிறப்பு விளக்கப்படுகிறது.

உயிரொலிகளின் பிறப்பு:

1) நாக்கின் முன்பகுதி உயர்வதனால் பிறக்கும் உயிர்கள் முன்னுயிர்கள் (இ, எ) எனப்படும்.

2) நாக்கின் பின்பகுதி உயர்வதனால் பிறக்கும் உயிர்கள் பின்னுயிர்கள் (உ, ஒ) எனப்படும்.

3) நாக்கு முன்னும் உயராமல், பின்னும் உயராமல் தட்டையாகக் கிடக்கும்போது பிறக்கும் உயிர்(அ) எனப்படும்.

4) நாக்கு அண்ணத்தை நோக்கி எவ்வளவு முடியுமோ அவ்வளவு உயர்வதனால் பிறக்கும் உயிர்கள் மேலுயிர்கள் (இ, உ) எனப்படும்.

5) மேலியிர் பிறக்கும் இடத்திற்கும் கீழுயிர் பிறக்கும் இடத்திற்கும் சரிபாதி உயரத்தில் நாக்கு இருக்கும்போது பிறக்கும் உயிர்கள் இடையுயிர்கள் (எ, ஒ) எனப்படும்.

மேற்குறித்த குறில்கள் ஒவ்வொன்றும் பிறக்கும் இடத்திலேயே கால அளவு வேறுபாடு காரணமாக அதற்கிணையான நெடில் எழுத்துக்கள் (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ) பிறக்கின்றன.

ஐ, ஔ ஆகிய இலக்கண நூலார் நெட்டெழுத்துக்களோடு சேர்ப்பர். இவற்றை மொழியியலார் ஈரொலி அல்லது கூட்டொலி என்பர்.

மேலும், உயிர் எழுத்துக்கள் ஒலிக்கும்போது இதழ்கள் இருக்கும் நிலைகளின் அடிப்படையில் இதழ்விரி முன்னுயிர்கள் (இ, எ), இதழ்குவி பின்னுயிர்கள் (உ, ஒ) என்றும் விளக்கப்படுகின்றன.

மெய்யொலிகளின் பிறப்பு:

தமிழ் மெய்யெழுத்துக்களை அவற்றின் பிறப்பின் அடிப்படையில் ஐந்து வகையாக

மொழியியலார் பாகுபடுத்துவர்.

1. அடைப்பொலிகள்(Stop or Plosive):

நாக்கின் ஏதாவது ஒரு பகுதியைக் கொண்டு அண்ணத்தின் ஒரு பகுதியை அடைத்து, மூச்சுக்காற்றைத் தடுத்து, மறுபடியும் வாய் வழியாக காற்றை விடுவதனால் பிறக்கும் ஒலியை அடைப்பொலிகள் என்பர். இது வெடிப்புச் சத்தம் ஏற்படுத்துவதால் வெடிப்பொலி என்றும் அழைக்கப்படுகிறது. க்,ச்,ட்,த்,ப்,ற் ஆகியவை அடைப்பொலிகளாகும்.

க் - கடைநா கடை அண்ண அடைப்பொலி

ச் - இடைநா இடை அண்ண அடைப்பொலி

ட் - நாவளை அடைப்பொலி

த் - நுனிநாப் பல் அடைப்பொலி

ப் - ஈரிதழ் அடைப்பொலி

ற் - நுனிநா நுனி அண்ண அடைப்பொலி

2. மூக்கொலிகள்(Nasals):

அடைப்பொலிகள் பிறக்கும் அதே முறையில் பிறந்து, மூக்கின் வழியாக காற்றை வெளிவிடும்போது மூக்கொலிகள் பிறக்கின்றன.

ங் - கடைநா கடை அண்ண மூக்கொலி

ஞ் - இடைநா இடை அண்ண மூக்கொலி

ண் - நாவளை மூக்கொலி

ந் - நுனிநாப் பல் மூக்கொலி

ம் - ஈரிதழ் மூக்கொலி

ன் - நுனிநா நுனி அண்ண மூக்கொலி

3. மருங்கொலிகள்(Laterals):

மூச்சுக்காற்றை நாக்கினால் தடுத்து, அதை நாக்கின் ஒரு பக்கமாகவோ, இரண்டு பக்கங்களிலோ செலுத்தும்போது பிறக்கும் ஒலிகள் மருங்கொலிகள் எனப்படும்.

ல் - நுனிநா நுனியண்ண மருங்கொலி

ள் - நாவளை மருங்கொலி

ழ் - நாவளை மருங்கு தொடரொலி

4. வருடொலி(Flap):

நாக்கின் நுனி மேலே எழுந்து, உள்நோக்கி வளைந்து, பின் வேகமாக கீழே வரும்போது அண்ணத்தில் மோதுவதால் எழுகிற ஒலியே வருடொலி எனப்படுகிறது.

ர் - வருடொலி

5. அரையுயிர்கள்(Semi Vowels):

இவை உயிரொலிகளைப் போன்று ஒலிக்கப்படினும் மெய்யொலிகளைப் போன்று ஒலிப்பிடம் உள்ளனவாக அமையும். எனவே, இவை மெய்யொலிகளின் தன்மையை அதிகமாகப் பெற்றுள்ளன. ஆகையால், ய்,வ் இரண்டும் அரையுயிர்கள் எனப்படும்.

ஆய்த எழுத்து உரசொலி என அழைக்கப்படுகிறது.

சார்பெழுத்துக்கள்

உயிர்மெய் எழுத்து தொடங்கி 10 வகையாக சார்பெழுத்துக்கள் உள்ளன. உயிர் மற்றும் மெய்யெழுத்துக்களைச் சார்ந்து அவற்றின் பிறப்புக்கள் அமைந்துள்ளன.

மொழியறிவு

நம்முடைய கருத்துக்களை மற்றவருக்கு பேச்சின் மூலம் தெரிவித்தல், உரை நிகழ்த்துதல், நேர்முகத் தேர்வுகளில் பதில் அளித்தல் பேச்சுக்கலையில் தேர்ச்சி பெற்று பேச்சாளர் ஆகுதல் போன்ற எண்ணற்ற தேவைகளுக்கு மொழியை நுட்பமாக கையாள்வது அவசியமாகிறது.

மொழியை திறம்படவும் முழுமையாகவும் கையாள்வதற்கு, மேற்கண்ட மொழியறிவு முக்கியமானதாகும். ஏனெனில், எழுத்துக்களின் உச்சரிப்பானது ஒலி வேறுபாட்டைத் தருவதுடன், பொருள் வேறுபாட்டையும் தருகிறது. உதாரணத்திற்கு: **கல் - கள்** ஆகிய சொற்கள் இரண்டும் இருவேறு பொருள்களைத் தருவன. இச்சொற்கள் இரண்டிலும் **க** என்னும் எழுத்து இடம்பெற்றுள்ளது. ஆகையால், **க** இங்கு பொருள் வேறுபாட்டை உண்டாக்காது. **ல் - ள்** ஆகியஎழுத்துக்களே இங்கு பொருள் வேறுபாட்டிற்குக் காரணமாக உள்ளது. இவ்விரு ஒலிகளும் ஒரே களத்தில் பிறக்கின்றன. இருப்பினும், பிறப்பதற்கான முயற்சி மற்றும் காற்று வெளிப்படும் திசை ஆகியவற்றால் வேறுபடுகின்றன. ஆகையால், ஒலி மற்றும் பொருள் ஆகியவை மாறுபடுகின்றன.

2. பேச்சுத் திறன்

உரையாடல் நிகழ்த்துதல், பாடம் தொடர்பான விரிவுரைகள் அல்லது

கருத்துரைகள் நிகழ்த்துதல், நேர்முகத்தேர்வுகளில் பதில் அளித்தல் மற்றும் கலந்துரையாடல் நிகழ்த்துதல் போன்றவற்றை செம்மையாகச் செய்வதற்கு சில நடைமுறைச் செயல்களைப் பின்பற்றுவது அவசியமாகும்.

பேசும் விதம்

ஒருவருடைய பேச்சினைக் கொண்டு அவரின் ஆளுமைத் திறனை மதிப்பிட முடியும். எனவே, பேசும் முறைக்கு அதிக முக்கியத்துவம் உள்ளது. ஒருவருடைய ஆளுமையின் மீது இருக்கும் கலாச்சார, சுற்றுப்புற செல்வாக்கினையும் பேச்சின் மூலம் அறிந்துகொள்ள முடியும்.

பேச்சின் மூலம் உன் உள்ளத்தைக் காண்பேன் (Speak, that I may see thee) என்பது பென் ஜான்சனின் புகழ்வாந்த மொழி. நேர்முகத்தேர்வு போன்ற முக்கியமான நேரங்களில் நிகழும் பேச்சும் அது போன்றதொரு முக்கியத்துவத்தைப் பெற்றுவிடுகிறது. குரல் தெளிவு, தொனி, பேச்சின் வேகம், பாணி , அங்க அசைவுகள் போன்ற ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு நபரை நேர்முகத் தேர்வுகளில் மதிப்பிடுகின்றனர்.

குரல் தெளிவு

பேசும் சொற்களால் நாம் மதிப்பிடப்படுகிறோம். குழறலாகப் பேசினாலோ, சொற்றொடரைச் சேர்த்துக் கூட்டிப் பேசினாலோ, பிழையாக உச்சரித்தாலோ நாம் கூற நினைத்ததைக் கேட்பவரால் புரிந்துகொள்ள இயலாது. ஆகையால், பேசும் சொல் ஒவ்வொன்றையும் எதிரில் இருப்பவருக்கு கேட்கும் வகையில் பேச வேண்டும். பேசும் குரலில் ஏற்ற இறக்கம் வேண்டும். அப்போதுதான் உங்கள் கருத்தை மற்றவர்கள் புரிந்துகொள்ள முடியும். பயன்படுத்தும் சொற்கள் , தொடர்கள் மிகவும் துல்லியமானவையாக இருக்க வேண்டும். அதாவது, ஒவ்வொரு சொல்லையும், அதில் இருக்கும் அசைச் சொற்கள் நன்கு உச்சரிக்கும் வகையில் பேசவேண்டும்.

உச்சரிப்பதற்குக் கடினமான சொற்களைப் பேசக் கூடாது. பேசக்கூடிய முறை உயிர்த்துடிப்பானதாக, நன்கு கேட்கும் விதத்தில் இருக்க வேண்டும். உறுதியான, சுருக்கமான கணீரென்ற குரலில் பேசிப் பழகிக்கொள்ள வேண்டும். முக்கியமான செய்திகளைச் சொல்ல, குரலில் ஏற்ற இறக்கத்தைக் கொண்டுவர வேண்டும். பேசும்போது நவரசமும் முகத்தில் வெளிப்படும்படி பேசுதல் சிறப்பாகும். சொற்களை படபடவென்று அதிவேகத்தில் பேசுதலைத் தவிர்தல் வேண்டும்.

உடல் அசைவுகள் அல்லது உடல்மொழி (Body Language)

பேசும் முறைக்கு நெருக்கமான இன்னொரு செயல் உடல்மொழி (உடல் அசைவுகள்). ஒருபொருள் குறித்த ஈடுபாட்டை அல்லது வெறுப்பை அதன் மூலம் வெளிப்படுத்தலாம். நேர்முகத் தேர்வு போன்றவற்றில் பங்குபெறும் போது, உடல் அசைவுகளின் நேர்த்தியைக் கொண்டும் தேர்வாளர் நம்மை மதிப்பிடுவர்.

பக்குவம், உணர்வுபூர்வமான நிதானம், நாசூக்கான நடத்தை, தன்னம்பிக்கை, ஊக்க உணர்வு, கடின உழைப்புக்கான ஆர்வம், ஒருங்கிணைப்பு, சிந்தனைப் போக்கின் சீரான தன்மை, திடசித்தம், கூட்டாகப் பணிபுரியும் திறமை போன்ற பலவற்றை அலசிப் பார்த்து மதிப்பிடும் ஒருவகையான உளவியல் ஆராச்சி முறையே நேர்முகத் தேர்வு. நேர்த்தியான உடல் அசைவுமொழியானது, இந்த குணங்களில் சில உங்களிடம் இருக்கின்றன என்பதை நேர்முகத்தேர்வு நடத்துபவருக்கு புரியவைக்கும். உடல் அசைவுகள் மிகவும் இயல்பானவையாக, பேசும் பொருளுக்கு பொருத்தம் உடையவையாக இருப்பது முக்கியமாகும்.

சரியான சொல்லாட்சியுடன் கூடிய பேச்சுத்திறன் எந்த அளவுக்கு நம் கருத்தைப் புரியவைக்குமோ, அந்த அளவுக்கு உடல் அசைவுகளும் புரியவைக்கும். நேர்மறையான பாதிப்பை ஏற்படுத்தும் உடல் அசைவுகள் சில:

- ஆம்... இல்லை... என்பதைப் புரியவைக்கும் தலை அசைப்புகள்.
- வியப்பை வெளிப்படுத்த புருவங்களை உயர்த்துதல்.
- பேசப்பசடும் கருத்து சோகமானதாக இருந்தால் தொய்வாக இருத்தல்.
- பாராட்டும்போது அல்லது நன்றி தெரிவிக்கும்போது புன்னகை செய்தல்.

அதே வேளையில், சொறிந்து கொள்ளுதல், இருக்கையில் மாறிமாறி அமர்தல், காலாட்டியபடி இருத்தல் போன்ற எதிர்மறை எண்ணங்களை ஏற்படுத்தக் கூடிய உடல் அசைவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

பேச்சுத் திறமையை வளர்க்கும் முறை

முதல் கட்டம் : ஒரு செய்தித்தாளில் இடம்பெற்றிருக்கும் தலையங்கத்தை அல்லது ஒரு நீளமான பத்தியைச் சத்தம் போட்டு படிக்க வேண்டும். படிக்கும் ஒவ்வொரு சொல்லும் உங்களுக்கு நன்கு கேட்கும்படி சத்தமாகப் படிக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லையும் தெளிவாக உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு அசைச்சொல்லுக்கும் அழுத்தம் கொடுத்துப் படிக்க வேண்டும். சிறுசிறு சொற்களை ஒன்று சேர்த்தும், குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் உச்சரித்துப் பழக வேண்டும். நீண்ட

சொற்றொடரைப் படிக்கும்பொழுது சற்று இடைவெளி விட்டு படித்துப்பார்த்தல் வேண்டும். ஒரு சொற்றொடரைப் படிக்கும்பொழுதே அதன் பொருள் உணர்ந்து படிக்க வேண்டும். மேலும் பல்வேறு விதங்களில் நம்மை நாமே பயிற்றுவித்துக்கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் இதுபோல் பேசிப் பழகுவது இயல்பாகவும் சிறப்பாகவும் பேச வழிவகுத்துத் தரும்.

இரண்டாம் கட்டம் : பேசுகின்ற முறையில் தெளிவான உச்சரிப்பு மற்றும் ஏற்ற இறக்கங்கள் போன்றவற்றை மேம்படுத்த வேண்டுமானால், அதற்கான சிறந்தவழி நம் குரலை நாமே கேட்பதுதான். ஆகையால், நம் பேச்சை ஒலிப்பதிவு செய்து கேட்பது நல்லது. இவ்வாறு செய்வது பேச்சுத் திறமையை வளர்த்தெடுக்க பெரிதும் உதவும். ஒரு செய்தித்தாள் தலையங்கம் அல்லது ஏதாவதொரு பத்தியை படித்து அதை ஒலிநாடாவில் பதிவு செய்துகொள்ளுங்கள். தொலைக்காட்சி பார்வையாளர் முன்னால் பேசுவதுபோல அல்லது உங்களைச் சுற்றி நிறையபேர் நின்றுகொண்டு உங்கள் பேச்சைக் கேட்பதுபோல் கற்பனை செய்துகொண்டு பேசுங்கள். அதை ஒலிநாடாவில் பதிவு செய்யுங்கள். ஒலி நாடாவை ஓடவிட்டு கேளுங்கள். உங்கள் பேச்சில் எந்தெந்த இடங்களில் என்னென்ன மாறுதல்களைச் செய்யலாம் கண்டறிந்து சரி செய்து கொள்ளுங்கள்.

பேச்சுத் திறமை, உச்சரிப்பு, பேசும் முறை, உடல் அசைவுகள் ஆகியவற்றை வளர்ப்பதற்கான மற்றொரு வழி, வானொலி மற்றும் தொலைக்காட்சி செய்திகளை கூர்ந்து கவனிப்பதாகும்.

கலந்துரையாடல்

மனித வாழ்க்கை என்பது பெறும்பாலும் கூட்டு வாழ்க்கை சார்ந்த ஒன்று. மனிதர் எப்போதும் ஒரு குழுவில்தான் வசிக்கிறார். குழுவைச் சார்ந்தவர்களால் அவர் பாதிப்புக்குள்ளாகிறார். ஒருவருக்கொருவர் உற்சாகமூட்டிக் கொள்வது, பதில் வினையாற்றிக் கொள்வது மற்றும் தகவல் பரிமாறிக் கொள்வது ஆகியவையே குழுவாழ்க்கையின் அடிப்படைப் பண்பாகும். குழுவில் இருக்கும்போது ஒரு மனிதர் நடந்து கொள்ளும் விதம், தனியாக அவர் இருக்கும்போது அவர் நடந்து கொள்வதில் இருந்து வேறுபட்டதாக இருக்கும்.

அன்றாட வாழ்க்கையில் ஒரு நபருக்கு குழுவுடன் நேரத்தைச் செலவிட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, ஒரு நபரின் குழு நடத்தை என்பது முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. குழு உரையாடல் (கலந்துரையாடல்) என்பது சிறிய அளவிலான நபர்கள் முகத்தோடு முகம் பார்த்துக் கொள்ளும் வகையில்

அமர்ந்துகொண்டு, எல்லோருடைய அக்கறைக்குரிய ஒரு பொருள் பற்றி உரையாடுவதாகும். எனவே, உரையாடல் அல்லது ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளுதல் என்பது குழுவின் முதன்மையான பண்பாக அமைந்துள்ளது. கலந்துரையாடலில் ஒவ்வொருவரும் தங்கள் தரப்பு கருத்துக்களை முன்வைக்கலாம். அதேநேரம், மற்றவர்கள் சொல்வதையும் காதுகொடுத்துக் கேட்பார்கள்.

கலந்துரையாடலில் பங்குபெறுபவர்கள் ஒரு குறிப்பிட்ட பின்புலத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பது அவசியம்.

கலந்துரையாடல் என்றால் என்ன?

அண்மைக் காலமாக, ஆளுமை பரிசோதனைக்கான ஒரு வழிமுறையாகக் கலந்துரையாடல் மாறிவருகிறது. ஒரு நபர் தர்க்கபூர்வமாக, கட்டுக்கோப்பாக, ஒருங்கிணைப்புடன் தன்னை வெளிப்படுத்துகிறாரா என்பதை இதன் மூலம் அறியலாம். மேலும், அந்நபரின் தலைமைப் பண்பை தேர்வாளர் மதிப்பிடுவதற்கு கலந்துரையாடல் வழிவகை செய்து தருகிறது.

பல்வேறு பல்கலைக் கழகங்கள், தொழில் பயிற்சி முகாம்கள் ஆகியவற்றில் எம்.பி.ஏ., பி.ஜி.டி.எம். போன்ற மேலாண்மை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்குக் கூட கலந்துரையாடல் வழிமுறை பயன்படுத்தப்படுகிறது. துறை சார்ந்த அறிவு, தெளிவாக, சுருக்கமாக, திறமையாகத் தன்னை வெளிப்படுத்தும் திறமை, குழுவில் ஒருவருடை நடத்தை ஆகியவற்றை சோதிப்பதுதான் இதன் நோக்கமாகும். எனவே, கலந்துரையாடல் என்பதும் நேர்முகத் தேர்வு போல் தேர்ந்தெடுக்க உதவும் வழிமுறையாகும்.

இந்தக் கலந்துரையாடலின் கால அளவு பெரும்பாலும் சுமார் அரைமணி நேரமாக இருக்கும். ஒரு நபரிடம் தன்னம்பிக்கை, திறமை, பொறுமையான உளநிலை, எப்போதும் தயாரான மனநிலை, தான் சரி என்று நினைப்பதை மற்றவர்களை ஏற்றுக்கொள்ள வைக்கும் திறமை போன்றவற்றை கலந்துரையாடல் மூலம் தேர்வுக்குழுவினர் கண்டறிவர். அந்தவகையில், இது நேர்முகத் தேர்வை விட உயர்ந்ததொரு வழிமுறையாகும். ஏனென்றால், தனியான நேர்முகத்தேர்வில் ஒருவருடை குழுநடத்தை எப்படி இருக்கும் என்பதை என்பதை மதிப்பிட முடியாது.

நேர்முகத்தேர்வு, கலந்துரையாடல் என்ற இரண்டு தேர்வு முறைகளுமே ஒன்றுக்கொன்று வேறுபட்டவைதான் என்றாலும், இரண்டிலும் இலக்கு ஒன்றுதான். ஒரு நபர் வேலைக்குத் தகுதியானவரா என்பதை சோதிப்பதுதான் அந்த இலக்கு.

கலந்துரையாடலின் பண்புகள்

தகுதியான நபர்களைத் தேர்ந்தெடுக்கப் பயன்படுத்தப்படும் கலந்துரையாடல், கீழ்க் காணும் பண்புகளை உள்ளடக்கியது.

1. உரையாடலில் ஒரு வகை

பலர் உரையாடும் கலந்துரையாடல் என்பது மிகவும் இயல்பாக, முன் திட்டமிடுதல் எதுவும் இல்லாமல் நிகழக்கூடியது. இது போன்ற உரையாடலானது, எந்தவொரு சுவைநிறைந்த பொருளிலிருந்தும் (Subject) தொடங்கப்படலாம்.

2. விவாதத்தில் இருந்து மாறுபட்டது

கலந்துரையாடல் என்பது விவாதம் அல்ல. விவாதத்தில் ஒரு தரப்பை ஆதரித்துப் பேசும் சிலர் இருப்பார்கள். அதை எதிர்த்துப் பேசும் எதிர்த்தரப்பினர் இருப்பார்கள். அதனை நடத்த ஒரு தலைவர் இருப்பார். ஒவ்வொரு நபரையும் வரிசையாகப் பேச அழைப்பார். ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட கால அளவு பேச அனுமதி தருவார். இதுபோன்ற எந்த விதிமுறைகளும் கலந்துரையாடலில் கிடையாது.

குறிப்பிட்ட ஒரு பொருளின்மீது எல்லா நபர்களும் தங்களுடைய கருத்தைச் சொல்ல முழு உரிமைத் தரப்படும். இது மிகவும் சடங்குகள் அற்றமுறையில் நடக்கும். கலந்துரையாடலில் ஒருவர் எதை வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் பேச முடியும்.

3. தேர்வாளரின் குறுக்கீடு இருக்காது

கலந்துரையாடலில் ஈடுபடும் குழுவினர் சுதந்திரமாகப் பேச அனுமதிக்கப்படுவார்கள். தேர்வாளர் எந்தவகையிலும் குறுக்கிட மாட்டார்.மவுன சாட்சியாக நடப்பவற்றை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பார். நேர்முகத் தேர்வுகளில் ஒரு நபர், தேர்வுக் குழுவினரைப் பார்த்தபடி அமர்ந்து கொள்வார். கலந்துரையாடலில் குழு உறுப்பினர்கள்தான் ஒருவரையொருவர் பார்த்தபடி அமர்ந்து கொள்வார்கள்.

4. குறிப்பிட்ட பொருளை மையமாக வைத்து உரையாடல் நிகழ்த்துதல்

கலந்துரையாடலில் குறிப்பிட்ட ஒரு பொருள் உரையாடலுக்காக எடுத்துக் கொள்ளப்படும். பங்குபெறுபவர்கள் அதைப் பற்றி மட்டுமே பேச வேண்டும். ஆதரித்தோ அல்லது எதிர்த்தோ எப்படி வேண்டுமாலும் பேசுவதற்கு அவர்களுக்கு அனுமதி உள்ளது. ஆனால், தரப்பட்ட பொருளை மையமாக வைத்து மட்டுமே பேசுதல் வேண்டும்.

5. இதமான, நட்பார்ந்த சூழல்

கலந்துரையாடலில் ஒருவித நட்பார்ந்த சூழல் நிலவும். நேர்முகத் தேர்வில் எப்போதும் ஒரு பதற்றம் காணப்படும். ஏனென்றால், நேர்முகத்தேர்வில் விண்ணப்பதாரர் தன்னந்தனியாக தேர்வுக் குழுவினரைச் சந்திக்க வேண்டியிருக்கும். இதற்கு மாறாக, கலந்துரையாடலில் பங்குபெறுபவர்கள் ஒரே விதமான பின்புலத்தை உடையவர்களாக இருப்பார்கள். எனவே, எந்த விதமான பயமும் பதற்றமும்

இருக்காது. எனவே, ஒரு நபருடைய இயல்பான குழு நடத்தையை எளிதில் மதிப்பிட முடியும்.

கலந்துரையாடலுக்கான வழிமுறைகள்

1. விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை

ஒரு கலந்துரையாடலில் பொதுவாக, நான்கு முதல் எட்டுபேர் வரையில் பங்குபெற அனுமதிக்கப்படுவார்கள்.

2. பங்குபெறுபவர்களின் வரிசை எண்கள்

கலந்துரையாடலுக்கு விண்ணப்பதாரர்கள் வந்து கூடியதும், ஒவ்வொறுவருக்கும் 1,2,3,4 என்று எண்கள் வழங்கப்படும். அதன் பிறகு நம்பர் 1, நம்பர் 2, நம்பர் 3, நம்பர் 4 என்றுதான் அவர்களை அழைக்க வேண்டும். பெயரைச் சொல்லி அழைக்கக் கூடாது.

3. எண் அட்டையை அணிந்திருத்தல்

கலந்துரையாடலில் விண்ணப்பதாரர்கள் தங்களின் எண் அட்டையை அணிந்து கொள்ள வேண்டும். சற்றுத் தள்ளி அமர்ந்திருக்கும் தேர்வாளர் எண்களை அடிப்படையாக வைத்துத்தான் மதிப்பெண்களைக் குறித்துக் கொள்வார். யாருடைய பெயரையும் எழுதிக் கொள்ளமாட்டார். எனவே, விண்ணப்பதாரர்கள் தங்களுடை எண் அட்டை நன்கு தெரியும்படி அணிந்து கொள்வது அவசியமாகும்.

4. உரையாடலைத் தொடங்கி வைத்தல்

விண்ணப்பதாரர்கள் தங்களுடைய பெயரைச் சொல்லிக் கொள்ளக் கூடாது. அனுமதிக்கப்பட்ட மொழியைத் தவிர வேறு மொழியில் எதுவும் பேசிக்கொள்ளக் கூடாது. யார் முதலில் பேச வேண்டும் என்பதையோ, யார் எவ்வளவு நேரம் பேச வேண்டும் என்பதையோ தேர்வாளர் தீர்மானிக்க மாட்டார்.

5. இருக்கை அமைப்பு

கலந்துரையாடலில் பங்குபெறும் நபர்கள் தாங்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ள முடியும் வகையிலும், தேர்வாளர் அவர்களைப் பார்க்கக் கூடிய வகையிலும் அரைவட்ட வடிவில் அமரவைக்கப்படுவார்கள்.

6. பொருள் தேர்வு

சில இடங்களில், விண்ணப்பதாரர்களையே உரையாடலுக்கான ஒரு பொருளைத் தேர்ந்தெடுக்கும்படிச் சொல்வார்கள். தேர்வாளும் ஒன்றிரண்டு தலைப்புகளைக் கொடுத்து, கலந்துரையாடலில் பங்கெடுப்பவர்கள் அவற்றில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துப் பேசுவதும் உண்டு.

7. தேர்வாளரின் பங்கு

கலந்துரையாடல் தொடங்கியதும் தேர்வாளர் பின்பக்கத்துக்கப் போய்விடுவார். தன்னுடைய இருப்பு வெளிப்படாத வகையில் அமர்ந்துகொண்டு, ஒவ்வொரு நபருடைய ஆளுமை மற்றும் குழு நடத்தை குறித்து மதிப்பெண்களைப் போட்டுக்கொண்டு வருவார்.

8. குழுத்தலைவர்

பொதுவாக யாரையும் குழுத்தலைவராக நியமிக்க மாட்டார்கள். கலந்துரையாடலில் பங்குபெறுபவர்களில் யாருக்கு இயல்பாகவே தலைமைத் தாங்கும் பண்பு இருக்கிறதோ அவர்கள், தாமாகவே அந்தக் குழுவுக்குத் தலைவராகிவிடுவார். இத்தகைய நபர், மற்ற நபர்களிடமிருந்து வரும் போட்டிகளையும் மீறி, தன் விருப்பத்திற்கு ஏற்ப குழுவை வழி நடத்திச் செல்ல முடியும். தேர்வாளருக்குப் போதிய அனுபவம் இருக்கும் என்பதால், ஒருவருடைய தலைமைப் பண்புகளை எளிதில் இனம் கண்டுவிடுவார்.

9. தலைப்புகளின் வகைகள்

பொதுவாக, தேர்வாளரால் இரண்டு தலைப்புகள் தரப்படும். அந்த தலைப்புகள் எதைப்பற்றியும் அமையலாம். மிகச் சாதாரண பொருள் தொடங்கி, மிக முக்கியப் பொருள் வரையில் எதிலிருந்தும் தலைப்பு தேர்வு செய்யப்படும். விண்ணப்பதாரர்கள் எந்தப் பொருளைத் தேர்வு செய்து பேசுவது எனத் தங்களுக்குள் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என்றால், தேர்வாளர் தானாக ஒரு தலைப்பைக் கொடுப்பார். அல்லது அவர்களுடை கருத்துக்களைக் கேட்டவிட்டு ஒரு தலைப்பைக் கொடுப்பார்.

கலந்துரையாடலில் சிறப்புற்று விளங்கும் வழி

கலந்துரையாடலில் பங்குபெறும் பெரும்பாலானவர்களுக்கு அதன் நோக்கம் சரிவரப் புரிவதில்லை. கலந்துரையாடலில் வெற்றியடவதற்கு, அவர்கள் வெளிப்படுத்த வேண்டியவை குறித்த விழிப்புணர்வு இல்லை. தங்களின் விவாதத் திறமைதான் சோதிக்கப்படுகிறது எனத் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். ஆகையால், மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துகிறார்கள். இதனால், நன்கு படித்திருந்தும், திறமையிருந்தும் தேர்வாகமல் போகிற நிலை உருவாகிறது. ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று நினைப்பதுதான் பலர் செய்யும் பொதுவான பிழைகளில் ஒன்றாக இருக்கறது. திறமையான பேச்சு என்றால் மற்றவர்களைப் பேச விடக்கூடாது. அதிக நேரத்தை நாமே எடுத்துக்கொள்ள வேண்டும் என நினைக்கிறார்கள். இது தவறாகும்.

கலந்துரையாடலில் தோற்பதற்கான இன்னொரு காரணம், பங்குபெறுபவர்கள்

தர்கபூர்வமாகத் தங்கள் தரப்பை முன்வைக்காமல் போவதாகும். தங்கள் விவாதங்களுக்குத் துணையாக ஆதாரங்களைச் சொல்லாமல் விடுவதும் ஆகும். எவ்விதக் காரணத்தையும் சொல்லாமல் எதிர்த்து மட்டும் பேசும் இந்த முறை தவறாகும்.

கலந்துரையாடலில் வெற்றிபெற பின்வருவனவற்றை கற்றுக்கொள்ள வேண்டும்.

1. இலக்கை உறுதிசெய்

கலந்துரையாடலைத் தொடங்கத் தேர்வாளர் அனுமதி கொடுத்தவுடன், கலந்துரையாடலின் இலக்கத் தீர்மானிக்க வேண்டும். தலைப்பை ஒட்டிப் பேசுவதா அல்லது வெட்டிப்பேசுவதா என்ற முடிவுக்கு வரவேண்டும். உங்களின் கருத்துக்கு வலுசேர்க்கும் உதாரணங்களை மனதில் தயாரித்துக் கொள்ள வேண்டும். உங்கள் கருத்து எதுவாக இருந்தாலும், அதற்கான காரணங்களை தர்க்கரீதியாக விளக்க வேண்டும். மற்றவர்கள் அதை ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

2. மொழி ஆளுமை

சிறப்பான, வளமான மொழி மற்றும் நடத்தையைக் கலந்துரையாடல் முழுவதும் கையாள வேண்டும். பணிவாகவும், சாமர்த்தியமாகவும் பேச வேண்டும். 'இல்லை... நீங்கள் சொல்வது தவறு...' என்று வெளிப்படையாகப் பேசக்கூடாது. அது எதிர்மறை குணமாகக் கருதப்படும். உங்கள் பொறுமையை இழக்காமல், இதமாக, 'நீங்கள் சொல்வது சரியாக இருக்கக்கூடும்... ஆனால்...' என்று சொல்லுங்கள்.

3. பொறுமையே வலிமை

கலந்துரையாடலில் பேசப்படும் அனைத்தையும் கவனமாகக் கேட்க வேண்டும். மற்றவர்கள் பேசி முடிப்பதற்குள் குறுக்கிடக் கூடாது. கலந்துரையாடலில் ஒவ்வொருவரும் பேச வேண்டும். மற்றவர்கள் பேசுவதைக் கேட்கவும் வேண்டும். இல்லையெனில், கலந்துரையாடல் பொருளற்றதாகிவிடும்.

4. நகைப்பைத் தவிர்

மற்றவர்கள் பேசுவதை எப்போது மறுக்க வேண்டும்... எப்படிக் குறுக்கிட்டுப் பேச வேண்டும்... என்பது நன்கு தெரிந்திருக்க வேண்டும். அதே நேரத்தில், கலந்துரையாடல் நட்பார்ந்த முறையில் இதமாக நடப்பதையும் உறுதிசெய்ய வேண்டும். யாருடைய கருத்தையும் கிண்டல் செய்யக் கூடாது. 'மன்னிக்கவும்... நீங்கள் சொல்வதிலிருந்து நான் முரண்படுகிறேன்...' என்று பணிவாகச் சொல்லிவிட்டு,

உங்கள் கருத்துக்களை உதாரணம் கொடுத்து வலுப்படுத்துங்கள்.

5. கருத்துக்கு வலுசேர்

ஒரு கருத்தை ஆதரித்து அல்லது மறுத்துப் பேசும்போது, அதற்கு வலுசேர்க்கும் தகவல்களைச் சொல்ல வேண்டும். மற்றவர்கள் ஏற்கனவே கலந்துரையாடலில் சொன்ன கருத்தை ஆதரித்துப் பேசும்போது, புதிய உதாரணங்களைக் கொண்டு உங்கள் தரப்பை வலுசேர்க்க வேண்டும். அதுபோல, மறுத்துப் பேசுவதாக இருந்தாலும் சரியான காரணங்களைச் சொல்ல வேண்டும்.

6. எதிர்-வினைகளை எதிர்கொள்ளுதல்

உங்கள் கருத்தை மற்றவர்கள் திறனாய்வு நோக்கில் மறுக்கும்போது, மனம் தளரக்கூடாது. உங்கள் கருத்து ஏற்கப்படாவிட்டால் கோபம் கொள்ளக்கூடாது. அதை ஏற்பதாகயிருந்தால், சரி எனச் சொல்ல வேண்டும். இல்லை என்றால், உங்கள் தரப்ப நியாயங்களைச் சொல்லி, புரியவைக்க வேண்டும்.

7. முழுமையான பங்களிப்பு

கலந்துரையாடலில் அதிக அளவு பங்களிக்க முயற்சி செய்ய வேண்டும். முழு மனத்துடன், தொடர்ச்சியாகக் கலந்துரையாடலில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். உங்கள் கருத்தை குறுக்கிட்டுச் சொல்ல வாய்ப்பு கிடைத்தால் நழுவ விடக்கூடாது. இல்லையெனில், அதைப் பின்னர் சொல்ல முடியாமல் போய்விடும்.

8. தலைமை மற்றும் ஒருங்கிணைக்கும் பண்புகள்

தலைமைப் பண்புகள் கலந்துரையாடலில் மதிப்பிடப்படும். எனவே, தேர்வாளர் உங்கள் தலைமைப் பண்புகளைச் சோதித்து அறிவதற்கு வாய்ப்பை வழங்க வேண்டும். குழுவில் இருப்பவர்களை உங்கள் தலைமையை ஏற்கும்படிச் செய்யுங்கள். உங்கள் குழு உறுப்பினர்களை உங்களோடு உயர வழி செய்யுங்கள்.

கலந்துரையாடலுக்குத் தயாராகும் முறை

கலந்துரையாடலுக்கான தயாரிப்பு என்பதை சுருக்கமாகச் சொல்ல இயலாது. அது சில நாள் பயிற்சிகளால் கைவரக்கூடியதல்ல. தொடர்ந்து பயிற்சி மேற்கொண்டால் மட்டுமே சிறப்பாக கலந்துரையாட முடியும். சில பண்புகள், தோரணைகள், இதமான திறமையான பேச்சுத் திறமையை வளர்த்தெடுக்க சில காலமாகும். கலந்துரையாடலில் நன்கு பேச பயிற்சி எடுக்க வேண்டுமானால், உங்கள் நண்பர்கள், கல்லூரித் தோழர்கள் இவர்களுடன் பேசிப் பயில்வது நல்லது.

மேற் சொல்லப்பட்ட வழிமுறைகள் பேச்சுத் திறனை வளர்க்க உதவும்.

3. பேச்சுக்கலை

பேச்சுக்கலை பெரிய கலை; அரிய கலை; கற்றாரையும் கல்லாதாரையும் கவரவல்ல கலை; பொதுவாக நாட்டு முன்னேற்றத்துக்கும் தனிப்பட்டவர் முன்னேற்றத்துக்கும் வேண்டிய இன்றியமையாத கலை. அது மட்டுமின்றித் தலைவர்களாவதற்கும், செல்வந்தராவதற்கும் திறமை தரும் பெரும் கலையாகத் திகழத் தொடங்கிவிட்டது.

'நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்

யாநலத்து உள்ளதூஉம் அன்று'

என்னும் திருக்குறள், பேச்சுக்கலையின் பெருமையை நன்கு உணர்த்துகிறது.

மேடைப்பேச்சு வகைகள்

மேடைப்பேச்சு காலம் காலமாக தமிழக்தில் வழங்கிவருகிறது. பண்டைய மேடைப் பேச்சு வகைகள் வேறானவை. இன்றைய மேடைப் பேச்சு வகைகள் வேறானவை. அவற்றை மொத்தமாக ஒன்று சேர்த்து பதினாறு எனலாம், என்கிறார் அ.கி. பரந்தாமனார்.

அவை 1. பாட்டு விளக்கம், 2. காலட்சேபம், 3. அறவுரை, 4. சொற்போர் அல்லது பட்டி மன்றம், 5. அரசியற் சொற்பொழிவு, 6. இலக்கியச் சொற்பொழிவு, 7. பொருட் சொற்பொழிவு, 8. ஆராய்சிச் சொற்பொழிவு, 9. வரவேற்புரை, 10. திறப்புரை, 11. தலைமையுரை, 12. வாழ்த்துரை, 13. பாராட்டுரை, 14. தீர்மானம் நிறைவேற்றுரை 15. இரங்கலுரை, 16. நன்றியுரை

பேச்சு வகைகள்

பேச்சைப் பேச வேண்டும் அல்லது பிறர் பேசுவதைக் கேட்க வேண்டும் என்பது இன்றைய நிலை. இன்றைய நிலையைக் கணக்கில் கொண்டு பேச்சை பொதுவாக இரண்டாகப் பிரிக்கலாம் என்கிறார் அ.கி. பரந்தாமனார்.

அவை: 1. எழுத்துப்பேச்சு

2. வாய்ப்பேச்சு

முன்னே சொல்லப்பட்டுள்ள பதினாறு வகை மேடைப்பேச்சுகளுள், ஒரு சில மட்டும் எழுத்துப் பேச்சுகளாக அமையலாம்; மற்றவை வாய்ப்பேச்சுகளாகவே இருத்தல் வேண்டும்.

எழுத்துப்பேச்சு

எழுதிப் படிப்பதுதான் எழுத்துப்பேச்சு. பொறுப்புள்ள இடங்களில் எழுத்துப்

பேச்சின்றி வாய்ப்பேச்சு இருத்தலாகாது. குடியரசுத் தலைவர் முதலான தலைவர்களின் பேச்சுக்களில் தவறு நேறுமாயின், நாளிதழ்கள் தாக்கத் தொடங்கிவிடும்; தவறான கருத்தும் பரவும். வணிகக் கூட்டத் தலைவர்களும் புள்ளி விவரங்களோடு பேசுவதற்காக எழுத்துப் பேச்சையே மேற்கொள்கின்றனர்.

பொறுப்பின் காரணமாக பொறுப்புள்ளவர்களுக்கு எழுத்துப் பேச்சு இன்றியமையாதது. எழுத்துப் பேச்சாயினும், வாய்ப் பேச்சுக்குரிய இலக்கணம் ஒரு சிறிதும் குறையாது செப்பமாக அமைதலும் வேண்டும்; கருத்துப் பொலிவுடன் இருத்தலும் வேண்டும். மாநாட்டு உரை, பட்டமளிப்பு விழா உரை, வானொலிப் பேச்சு போன்ற இடங்களில் எழுத்துப் பேச்சு இடம்பெறும்.

எழுத்துப்பேச்சு நடை

எழுத்துப் பேச்சுகள், அழகிய எளிய நடையில் கருத்துப் பொதிந்து, கேட்போரைப் பிணைக்கும் தன்மையுடன் சுருக்கமாக இருந்தாலன்றி, மக்கள் உள்ளத்தைக் கவருவது முடியாது.

வாய்ப்பேச்சு

வாய்ப்பேச்சு என்பது வாயால் எடுத்துப் பேசுவது. மக்கள் வாய்ப்பேச்சைக் கேட்கவே விரும்புகின்றனர். இப்பேச்சு நல்ல முறையில் இருக்குமானால் கேட்போர் மகிழ்ச்சி பெறுவர்.

நல்ல வாய்ப்பேச்சு

நல்ல வாய்ப்பேச்சுக்கு பன்னூற் பயிற்சி, நூற்பொருள் அறிவு, பத்திரிகைப் படிப்பு, மொழியாளும் திறமை, நகைச்சுவை, தெளிவு, எளிமை, உண்மை, கருத்து, முன்னுரையும் முடிவுரையும் நன்கு அமைதல், குரலை எடுத்தும் படுத்தும் நலிந்தும் பயன்படுத்துதல், உச்சரிப்பில் பிழையின்மை, சொல்லில் வழுவின்மை, அளவான உணர்ச்சி, பேசும் முறை ஆகியவை அடிப்படைகளாகும்.

அவையச்சம்

முதல் முதல் பேசத் தொடங்குவோர்க்குச் சபையைக் கண்டதும் அச்சம் தோன்றும்; கைகள் நடுங்கும்; தொடைகள் வீணை வாசிக்கும்; நாக்கு குழறும்; சொற்கள் வாயிலிருந்து வரமறுக்கும். இப்படி இருப்பது இயற்கை; அதற்காகப் பேசவே வராது என ஒருவரும் அஞ்சத் தேவையில்லை. பேசுவதில் ஏற்படும் தொல்லைக்காக, மறுமுறை பேச அஞ்சக் கூடாது. அவையில் பேசப் பேச அச்சம் அகன்றோடும்.

பேரறிஞர் அடிசன், கி.பி. 18-ஆம் நூற்றாண்டில் தலைசிறந்து விளங்கிய ஆங்கில எழுத்தாளர். அவர் ஒருமுறை பேச எழுந்து, 'I conceive, conceive, conceive'

என்று கூறிவிட்டு, பேச முடியாமல் அமர்ந்துவிட்டாராம். அச்சொல்லுக்கு, 'நினைக்கிறேன் மற்றும் கருவுற்றிருக்கிறேன்' என இரு பொருள் உண்டு. அருகிலிருந்தவர், 'திருவார் அடிசன் அவர்கள் மூன்று முறை கருவுற்றார்; குழந்தைப் பெறவில்லை' என்று நகைச்சுவைத் தோன்றக் கூறினாராம். இதுபோல், எண்ணற்ற நிகழ்வுகள் அறிஞர்களின் வாழ்க்கையிலே நிகழ்ந்துள்ளன என்பதைக் காண்கிறோம். ஆதலால், தோல்வி குறித்துக் கவலைப்பட்டுப் பேச்சுப் பயிற்சியைக் கைவிடுதல் கூடாது.

நாளடைவில் அவையச்சம் நீங்கும்

சிலருக்கு முதலில் அவையச்சம் தோன்றும். நாடைவில் அது மாறிவிடும். ஆப்ரகாம் லிங்கனுக்கு தொடக்கப் பேச்சில் முதலில் நடுக்கமும் தன்னம்பிக்கையின்மையும் இருந்தனவாம். பேசப் பேச அவை மங்கி மறைந்தனவாம். பேசப் பழகுவோரின் அனுபவம் இவ்வாறே இருக்கும். ரோம் நாட்டைச் சார்ந்த அறிஞர் சிசரோ, 'எந்தச் சிறந்த பொது மேடைப்பேச்சிலும் அச்சம் முதலில் தோன்றுவது இயற்கை' எனக் கூறியுள்ளார்.

அச்சம் நீங்க அரிய வழிகள்

முதலாவது, பேச்சாளர் ஆக வேண்டும் என்ற எண்ணம் ஒருவருக்கு திடமாக இருக்க வேண்டும். அது இல்லாவிடில், ஒன்றிரண்டு முறை பேச முயற்சி செய்து, தோல்வியைக் கண்டு பயந்து, தனக்குப் பேச்சே வராது என்னும் முடிவுக்கு வருவர்.

இரண்டாவது, ஒருவர் பேசப் புகுவதற்குமுன், என்ன பேசப்போகிறோம் என்பதைத் தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அத்தெளிவு இல்லாவிட்டால், பேச்சில் தடுமாற்றம் ஏற்படும்; பேச்சே வராது.

மூன்றாவது, பேச்சாளர் ஆவதற்குத் தன்னம்பிக்கை வேண்டும். தன்னம்பிக்க ஏற்பட அஞ்சாமை வேண்டும். அச்சம் கொண்டால் ஆட்டம் கொடுக்கும். அச்சத்தை ஓட்டி, உவப்புடன் பேச்சைத் தொடங்க வேண்டும். கூட்டத்திலுள்ளவர்கள் குறை சொல்வார்கள் என்பதே, அச்சத்திற்கான காரணமாகும். ஆனால், கூட்டத்தில் உள்ளவர்கள் பெரும்பாலும் குறை கூறமாட்டார்கள்.

நான்காவதாக, போதிய பயிற்சி வேண்டும். 'அறையில் ஆடி, அம்பலத்தில் ஆடு' என்பது பழமொழி. அவையச்சம், பேச்சுத் தடுமாற்றம், உச்சரிப்புக் குறை, பேசமுடியாமல் இடையில் நிற்றல், கருத்துக்கள் மறந்து போவது போன்ற பல சிக்கல்களும் பயிற்சியால் மட்டுமே நீங்கும் என்பதை மனதில் கொள்ளவும்.

பேசிப் பழகும் முறை

ஆகையால், பேசப் பழகுபவர்கள் முதலில் உரக்கப் படித்துப் பழக வேண்டும். பின்னர் பேச்சுக் கழகங்களில் சிறிது சிறிதாகப் பேசப் பழக வேண்டும்.

இங்ஙனம் பழகிய பின்பு, பெரிய பேச்சைப் புள்ளி விவரங்களுடன் தயாரித்துப் பேசுதல் வேண்டும். எழுத்துப் பேச்சில், சொல்ல வேண்டிய கருத்துக்கள் தெளிவாகவும், கேட்போர் மனதில் பதியக் கூடியனவாகவும் இருக்குமாறு கவனிப்பது அவசியம்.

இப் பயிற்சிக்குப் பின் , பேசுவோர் சிறு குறிப்பை வைத்துக் கொண்டு, சிறுநேரப பேச்சைப் பேச பயிற்சி பெறல் வேண்டும். வரவரக் குறிப்பு இல்லாமல் பேசும் நிலை ஏற்படும். நினைவாற்றல் இல்லாதவர்கள் குறிப்பின்றி என்றும் பேசுதல் இயலாது.

முழுத்தறமையும் வந்துவிட்டாலும், எவரும் தயாரிப்பின்றி ஒருநாளும் பேச முடியாது. பெரும்பேச்சாளர்கள் கூட பேச்சுக்களை முன்கூட்டியே தயாரித்துப் பேசுகின்றனர். ஆகையால், தொடக்கப் பேச்சாளர்கள் எவ்வளவு எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும் என்று விளக்க வேண்டியதில்லை.

பேச்சைத் தொடங்கும் முறை

எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்னும் மூன்று நிலைகளில் ஒரு பேச்சு அமைகிறது. சிறந்தப் பேச்சாளர்கள் எடுப்புக்குப் படும்பாடு மிகப் பெரியது. பெரும் பேச்சாளர்கள் எல்லோரும், பேச்சை எப்படித் தொடங்குவது என்பதிலும், எப்படி முடிப்பது என்பதிலும் மிகுந்த கவனம் செலுத்தியிருப்பதை அவர்களுடைய வரலாற்றில் காண்கிறோம்.

பேச்சைத் தொடங்குவதற்கு முன்னர்ப் பேச்சாளர், 'அன்புமிக்கத் தலைவர் அவர்களே, தாய்மார்களே, பெரியோர்களே' என்று விளித்துப் பேச வேண்டும். தலைவருக்கு அன்பு இல்லாவிட்டாலும், 'அன்புமிக்க' என்னும் அடைமொழியைச் சொல்லி அழைத்தல் மரபு. ஆண்களை விளிக்கும் முன் பெண்களை விளித்தல் நம் நாட்டு வழக்கமில்லை; அது மேலை நாடுகளில் கையாளும் முறை.

விளித்தலுக்குப் பின் பேச்சாளர் முன்னுரையில் உடனடியாக நுழைய வேண்டும். 'நான் கூறுவதில் குறையும் உண்டு; நிறையும் உண்டு' எனப் பழைய அவையடக்க முறையை மேற்கொளவது அவசியமற்றது.

'எனக்கு முன்னே பேசியவர் எல்லாம் பேசிவிட்டார். நான் பேச இருந்ததையும் எனக்கு முன் பேசிய நண்பர் கூறிவிட்டார். பேச எனக்கு ஒன்றும் இல்லை; ஆனாலும் பேசுகிறேன்' என்று பேசுவதோ அல்லது 'எனக்கு இன்று ஓய்வு இல்லாமையால் நான்

பேச்சைத் தயாரித்து வரவில்லை' என்று பேச்சைத் தொடங்குவதோ தவறாகும். உண்மையிலே பேச்சைத் தயாரித்து வரவில்லை என்றாலும்கூட, பேச்சாளர் அவ்வாறு சொல்லத் தேவையில்லை. அப்படிச் சொன்னால் கேட்கும் ஆர்வம் கெட்டுவிடும்.

எப்படிப்பட்ட கூட்டத்திலும் பேச்சைப் பின்வருமாறு தொடங்கலாம்:

- பேச்சாளர் வேகமாக விரைந்து பேச்சைத் தொடங்காமல், ஒரு முறை அவையினரைப் பார்த்துவிட்டு, அன்பாக அமைதியுடன் மெதுவாக, முதலில் பேச்சைத் தொடங்க வேண்டும்.
- கூட்டத்தின் அவசியத்தையும், அவையினர் ஆர்வத்தையும் பேச்சாளர் பாராட்ட வேண்டும்.
- தொடக்கத்திலேயே கேட்போரைத் தங்கள்பால் இழுக்க வேண்டும்; அவர்களை ஒரு மனத்தராக்க வேண்டும்.
- இதுதான் பேச்சுக் கலையின் இரகசியம்; இதுதான் மேடைப் பேச்சின் இரகசியம்.

பொருள் விரிக்கும் முறை

மேடைப் பேச்சில் பொருள் விரித்தல் முக்கியமானது. அறிவில்லாதவன் மதிக்கப்படமாட்டான். அங்ஙனமே, பொருள் இல்லாத பேச்சுக்கு மதிப்பு கிடையாது. ஆதலால், குறித்த பொருளும் மாறாமல், தர்க்க முறையை மேற்கொண்டுத் தெளிவு, விளக்கம் இவற்றைக் குறிக்கோளாக விரித்துப் பேச வேண்டும்.

கருத்துத் தொடர்பு, பொருள் விரித்தலில் சிதறுண்டு போதல் கூடாது. ஆரம்பக் கல்வியைப் பற்றி பேசுபவர், ஆரம்பக் கல்வியில் தொடங்கி, உயர்நிலைப் பள்ளிக் கல்வியில் முடிப்பது தவறாகும். பேச்சு முதலில் இருந்து முடியும் வரை ஆரம்பக் கல்வியைப் பற்றியதாகவே இருக்க வேண்டும். ஒரு பேச்சில் ஒரு பொருள் இருப்பதுதான் முறை; ஒரு பேச்சில் பல பொருள் வருவதால் கருத்துக் குழப்பம் ஏற்படும்.

சிலர் ஒரு பொருளில் தொடங்கி, வேறொரு பொருளில் மிகுதியாகக் காலத்தைக் கடத்திவிட்டு, 'ஐயோ, நான் என்னென்வோ பேசலாம் என்றிருந்தேன், நேரம் இல்லையே!' என்று குறித்தப் பொருளைப் பேசாமல் அமர்ந்துவிடுவர். இவ்வாறு பேசுவது, 'மற்றொன்று விரித்தல்' என்னும் குற்றமாகும். ஒரு பொருளை விரிக்கும் போது வேறொன்றைப் பேச வேண்டும் என்றால், அதனைப் பேசும் பேச்சோடு தொடர்புபடுத்தி, சுருக்கமாகக் குறிப்பிட்டுவிட்டு, தொடங்கி பொருளில் தொடர்ந்து

பேச வேண்டும். இப்படிப் பேசாவிடில், பேசும் பொருளில் கருத்துத் தொடர்ச்சி ஏற்படாது.

பொருள் விரித்தலில் பேச்சாளர் கவனிக்க வேண்டிய மற்றொன்று, பேசும் பொருளைப் படிப் படியாகத் தர்க்க முறையோடு விரித்துக் கொண்டு போவதுதான். ஒரு கருத்தை விளங்கச் சொல்லியபின், மற்றொரு கருத்துக்குப் போக வேண்டும். பொருளை விரிக்கும் போது, சொல்லும் கருத்து வெல்லும் வகையில், மாற்றுக் கருத்தினரும் ஏற்றுக் கொள்ளும் வகையில், பல கருத்துக்களை முறையாக அடுக்கிக் கூற வேண்டும்.

பேச்சில் உணர்ச்சி

பேச்சாளர் கருத்தை அடுக்கிக் கூறுவது மட்டும் போதாது; உணர்ச்சி எழுப்புமாறு பேச வேண்டும். உணர்ச்சி எழுப்பு வேண்டுமாயின் ஏற்ற இடத்தில் மெய்ப்பாடு தோன்றப் பேச வேண்டும். உடல் உறுப்புகளின் வெளிப்பாட்டால், கருத்துத் தோன்றச் செய்வதே மெய்ப்பாடு ஆகும்.

பொருள் விரிக்கும் காலத்தில் பேச்சாளர் மரம் போல் நின்று, அல்லது கற்றூண் போல் ஆடாமல் அசையாமல் நின்று, உணர்ச்சியின்றித் தேனீ ரீங்காரம் செய்வதைப் பொல, ஒரே ஒலியுடன் பேசிக்கொண்டு போதல் கூடாது; உணர்ச்சியுடன் பேச வேண்டிய இடங்களில் உணர்ச்சியுடன் பேச வேண்டும். எந்தெந்தச் சொல்லை அல்லது சொற்றொடரை உணர்ச்சியோடு அழுத்திப் பேச வேண்டுமோ, அந்தச் சொல்லை அல்லது சொற்றொடரை உணர்ச்சியுடன் அழுத்திப் பேச வேண்டும். இதைப் பேச்சாளர் மறத்தல் கூடாது.

உணர்ச்சியற்ற பேச்சு உயிரற்ற பேச்சு. உணர்ச்சியுடன் பேசினால் அப் பேச்சு, கேட்பவருடன் ஊடுறுவிச் சென்று அவர்களுடைய உள்ளத்தைப் பிணைத்துவிடும். உணர்ச்சியோடு பேச வேண்டும் என்று தொடக்கம் முதல் இறுதிவரை கூச்சல் போட்டு பேசுதல் கூடாது. அப்படிப் பேசினால் பேச்சாளருக்கு நெஞ்சுவலி உண்டாகும்; கேட்பவருக்கு மண்டையிடி ஏற்படும். அப்பேச்சும் சுவைபடாது.

ஆகையால், உணர்ச்சி என்று கூச்சல் போடக்கூடாது; மெய்ப்பாடு என்று நாட்டியம் ஆடக் கூடாது.

பேச்சும் ஒலிப்பு முறையும்

கட்டாயப்படுத்த வேண்டுவது, வெற்றி, எதிர்ப்பு, சினம், வெறுப்பு, உயர்வு, கிளர்ச்சி, களிப்பு இவற்றை எடுத்தல் ஒலியில் பேச வேண்டும்.

வேண்டுகோள், துன்பம், பணிவு, அமைதி, விருப்பு, தாழ்ச்சி, அயர்ச்சி இவற்றைப் படுத்தல் ஒலியில் பேச வேண்டும்.

பொதுவாகக் களிப்பு மொழியினை எடுத்தல் ஒலியிலும், துன்புறு மொழியினைப் படுத்தல் ஒலியிலும் பேசலாம்.

புள்ளி விவரங்களைப் பயன்படுத்துதல்

பொருள் விரித்துக் கூறும்போது சில புள்ளி விவரங்களை அவசியத்திற்கு ஏற்ற வகையில் சொல்லலாம். அப்படிப்பட்ட நேரங்களில், புள்ளி விவரங்களை மனப்பாடம் செய்து சொன்னால் மிகுந்த மதிப்பு உண்டாகும். இயலாவிட்டால், குறிப்புகளைப் படித்துக்காட்டுதல் தவறில்லை. அவ்வாறு செய்யும்போது, குறிப்புகளைத் தயாராக வைத்திருந்து, உடனடியாக எடுத்துப் படித்துக் காட்ட வேண்டும்; தேடிக்கொண்டிருக்கக் கூடாது. பேச்சாளர் குறிப்புகளைத் தேடத் தொடங்கினால், பார்வையாளர் பேசத் தொடங்குவர்.

பேச்சை முடித்தல்

ஒருவர் பேச்சைத் தொடங்குவதிலும் பொருள் விரிப்பதிலும் கவனம் செலுத்தி, முடிப்பதில் கவனம் செலுத்தத் தவறிவிட்டால், பேசிய பேச்சு மதிப்பிழந்து போக வாய்ப்பு உள்ளது. கேட்போர் கவனத்தைக் கவரும்படி பேச்சைத் தொடங்குவதும் முடிப்பதும் எளிதானவை அல்ல; கடினமானவை. திறமையாகப் பேச்சை முடிப்பதுதான் முக்கியமானது.

'பேச்சை முடிப்பதில் ஒரு குறிக்கோள் இருக்கிறது. அது பேச்சை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், சிறிது நேரத்தில் பேசிய பேச்சின் முழுப்பொருளையும் கேட்பவர்களின் கவனத்துக்குக் கொண்டு வருகிறது; பேச்சில் சிதறிக் கிடக்கும் கருத்துக்களை ஒருமுகப்படுத்தி, மனத்தில் பதிய வைக்கிறது. ஆதலால், பேசிமுடித்தலைத் திட்டமிட்டு, சொற்களை நன்கு அமைத்து முடிக்க வேண்டும். பேச்சை விரைவாக, அழகற்று, திடீரென்று நிறுத்திவிடுதல் கூடாது. கேட்பவர்கள், பேச்சு முடிந்துவிட்டது என உணரும்படிப் பேச்சை முடிக்க வேண்டும்.' என ஜார்ஜ் ரௌலண்டு காலின்ஸ் என்பவர் குறிப்பிடுகிறார்.

நன்றி நவிலல்

நன்றி கூறுதல் பற்றியும் கூட ஒருவர் கற்றுக் கொள்ள வேண்டுமா என்று சிலர் கருதலாம். அவ்வாறு நினைத்தல் தவறு. நன்றி கூறுவதிலும் தவறுகள் நிகழ்கின்றன.

நன்றி உரைத்தல், கூட்டத்தின் கடைசிக் கட்டம். கூட்டம் முடிந்தவுடன், அவையில் உள்ளோர் புறப்படத் தொடங்குவர். அந்நிலையில், 'பெரியோர்களே, தாய்மார்களே நன்றி நவிலும் கடைமையாற்ற நினைக்கிறேன்' என்று பேச்சை வளர்க்கக் கூடாது. இரு நிமிடங்களுக்குள் நன்றியுரையை முடித்துவிட வேண்டும். மேடையில் பேசியவர்கள், நிகழ்ச்சி ஏற்பாட்டுக்கு உதவியவர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவித்து கூட்டித்தை விரைவாக முடிக்க வேண்டும். நன்றி உரையை சொற்பொழிவாக மாற்றக் கூடாது.

பேச்சுத்திறன் மற்றும் பேச்சுக்கலை ஆகியவை, நீண்டநாள் பயிற்சியில் கைவரக்கூடிவை. நாள் தோறும் அவற்றிற்குரிய தேவைகளும் பயிற்சி முறைகளும் உருவாகிக் கொண்டே உள்ளது. ஆகையால், அவற்றை சிறிய பாடத் திட்டத்தில் முழுமையாகச் சொல்லிவிட இயலாது. விடாமுயற்சியும், தொடர் பயிற்சியும் அக் கலையில் நாம் முத்திரைப் பதிக்க உதவும்.

SECTION – A (3 MARKS)

S. No	Questions	Unit	K-Level	CO	PO
1.	சிற்றிலக்கியம் வரையறு.	I	K1	1	
2.	எவருடைய ஆட்சி காலம், சிற்றிலக்கியத்தின் காலம் என்று அழைக்கப்படுகின்றது?	I	K1	1	
3.	கலம்பகம் – குறிப்பு வரைக.	I	K2	1	
4.	கலம்பகத்தின் உறுப்புகள் யாவை?	I	K1	1	
5.	நந்திக் கலம்பகம் குறிப்பு தருக.	I	K2	1	
6.	பல்லவர்களின் தலைநகரம் எது?	I	K2	1	
7.	”நந்திக்கலம்பகத்தால் மாண்ட கதை நாடறியும்” – இக்கூற்று இடம் பெறும் நூல் எது?	I	K2	1	
8.	பல்லவ மன்னன் நந்திவர்மனின் வீரம் எதனோடு ஒப்பிடப்பெறுகிறது?	I	K2	1	
9.	நந்திவர்மனின் முகம் எவற்றை அடைந்தது?	I	K2	1	
10.	“செந்தழல் அடைந்தது உன் தேகம்”- இவ்வரிகள் இடம்பெறும் நூல் எது?	I	K1	1	

11.	வானரம், மந்தி - பொருள் தருக.	I	K2	1	
12.	தூது எத்தனை வகைப்படும்? அவை யாவை?	I	K2	1	
13.	தூதுக்குரிய பொருட்கள் யாவை?	I	K2	1	
14.	பரணி – இலக்கணம் வரையறு.	I	K2	1	
15.	கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?	I	K1	1	
16.	கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் யார்?	I	K1	1	
17.	தூது என்றால் என்ன?	I	K1	1	
18.	தமிழ் விடு தூது எதற்காகப் பாடப்பட்டது?	I	K1	1	
19.	தமிழ் விடு தூதில் தலைவி தன் துன்பத்தை யாரிடம் கூறுகிறாள்?	I	K1	1	
20.	சொல்லே ருழவர்கள் என்று தமிழ்விடு தூது யாரைக் குறிப்பிடுகிறது?	I	K1	1	
21.	திருக்குற்றாலக் குறவஞ்சி எழுதியவர் யார்?	II	K1	1	
22.	குறவஞ்சி பெயர்க்காரணம் கூறுக?	II	K1	1	
23.	தமிழில் தோன்றிய முதல் குறவஞ்சி நூலைக் கூறுக.	II	K1	1	
24.	திரிகூடராசப்பக் கவிராயர் குறிப்பு வரைக.	II	K2	1	
25.	திருக்குற்றாலக் குறவஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்?	II	K2	1	
26.	"காடு பாடியது" -விளக்கம் தருக.	II	K1	1	
27.	கலிங்கத்துப்பரணியின் பாட்டுடைத் தலைவன் யார்?	II	K1	1	
28.	சிறுகதை- குறிப்புவரைக.	II	K1	2	
29.	தமிழ் சிறுகதைகள் மூன்றினைக் கூறுக.	II	K1	2	
30.	தமிழ்ச் சிறுகதை இலக்கிய முன்னோடிகள் யாவர்?	II	K1	2	
31.	அண்ணாவின் படைப்புகள் மூன்றினைக் கூறுக.	II	K1	2	
32.	செவ்வாழை உணர்த்தும் மைய கருத்து என்ன?	II	K2	2	
33.	'தென்னாட்டு பெர்னார்ட்ஷா' என்று அழைக்கப்பட்டவர் யார்?	II	K2	2	
34.	செங்கோடனின் இன்பக் கனவு யாது?	II	K2	2	
35.	புதுமைப்பித்தன் சிறுகதைகள் மூன்றினைக் கூறுக.	II	K1	2	
36.	புதுமைப்பித்தன் – ஆசிரியர் குறிப்பு வரைக.	II	K2	2	
37.	கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர் யார்?	II	K1	2	
38.	கி. ராஜநாராயணன் படைப்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.	II	K2	2	
39.	டைம்ஸ் ஆஃப் இந்தியா கி. ராஜநாராயணனை எவ்வாறு வாழ்த்தியது?	II	K1	2	
40.	கி. ராஜநாராயணன்- ஆசிரியர் குறிப்புவரைக.	II	K2	2	
41.	கலைச்சொல் என்றால் என்ன?	III	K1	3	

42.	கலைச்சொல்லின் தேவைகள் இரண்டினைக் கூறுக.	III	K1	3	
43.	கலைச்சொல்லுக்குரிய மூன்று பரிமாணங்கள் யாவை?	III	K1	3	
44.	அறிவியல் கலைச்சொற்களுக்கு இரண்டு உதாரணங்களைச் சுட்டுக.	III	K1	3	
45.	நூலகர் என்ற கலைச்சொலைக் கொண்டு மேலும் பல புதிய சொற்களை உருவாக்குக.	III	K1	3	
46.	இணையான தமிழ்ச் சொல்லைத் தருக. Apartments Pencil Agency	III	K2	3	
47.	இணையான தமிழ்ச் சொல்லைத் தருக. Booster Dynamo Boiler	III	K2	3	
48.	கணினி கலைச்சொற்கள் மூன்றினைக் கூறுக.	III	K2	3	
49.	இலக்கியம் சார்ந்த கலைச்சொற்கள் மூன்றினைக் கூறுக.	III	K2	3	
50.	'கடி' என்னும் சொல்லுக்குப் பொருள் யாது?	III	K2	3	
51.	கடிதத்தின் வகைகள் யாவை?	III	K2	3	
52.	முடங்கல் என்றால் என்ன?	III	K2	3	
53.	"பத்திரம்' என்ற சொல்லுக்குப் பொருள் யாது?	III	K1	3	
54.	கடிதம் எழுதுவதற்கான நோக்கங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.	III	K2	3	
55.	மு. வரதராசனின் கடித இலக்கியங்களைக் குறிப்பிடுக.	III	K1	3	
56.	கடித இலக்கிம் – குறிப்பு வரைக.	III	K1	3	
57.	ஜவகர்லால் நேரு அவர்கள், தன் மகளுக்கு எவற்றைக் குறித்துக் கடிதம் எழுதினார்.	III	K2	3	
58.	சீட்டுக் கவி-விளக்குக.	III	K1	3	
59.	கடிதங்களை அறிஞர்கள் எவ்வாறு அழைக்கின்றார்கள்	III	K1	3	
60.	அண்ணாவின் கடிதத்தின் பெயரினைக் குறிப்பிடுக.	III	K1	3	
61.	கடிதத்திற்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை.	IV	K1	4	
62.	பேச்சு எவ்வாறு உருவாகிறது?	IV	K2	4	
63.	பென் ஜான்சனின் புகழ்வாய்ந்த மொழி யாது?	IV	K2	4	
64.	உடல்மொழி என்பது யாது? எவையேனும் நான்கைக் குறிப்பிடுக.	IV	K1	4	
65.	பேச்சு வகைகள் எத்தனை? குறிப்பிடுக.	IV	K1	4	
66.	நல்ல வாய்ப்பேச்சுக்கான அடிப்படைகள் யாவை?	IV	K2	4	

67.	நன்றி நவில்வதைப் பற்றி விளக்குக.	IV	K2	4	
68.	பேச்சொலி உறுப்புகள் யாவை?	IV	K2	4	
69.	பேச்சொலி உறுப்புகளின் வகைகள் யாவை	IV	K2	4	
70.	ஒலிப்பான்- குறிப்பு வரைக.	IV	K2	4	
71.	ஒலிப்பிடம்- குறிப்பு வரைக.	IV	K1	4	
72.	உயிரொலிகள் எத்தனை அடிப்படைகளில் ஒலிக்கப்படுகின்றன? அவை யாவை?	IV	K1	4	
73.	அ- உயிர் எழுத்து எவ்வாறு பிறக்கின்றது?	IV	K1	4	
74.	அரையுயிர்கள்(Semi Vowels) – குறிப்புவரைக	IV	K2	4	
75.	மூக்கொலிகள்(Nasals) குறிப்புவரைக	IV	K2	4	
76.	ஈரிதழ் அடைப்பொலி குறிப்பு வரைக.	IV	K1	4	
77.	அடைப்பொலிகள்(Stop or Plosive) குறிப்புவரைக	IV	K2	4	
78.	கூட்டொலி - குறிப்பு வரைக.	IV	K2	4	
79.	ஒலியியல் என்றால் என்ன?	IV	K2	4	
80.	ஈரிதழ் மூக்கொலி எவை?	IV	K2	4	

SECTION – B (8 MARKS)

S.No	Questions	Unit	K Level	CO	PO
81.	நந்திகலம்பகத்தில் இடம் பெறும் உவமையணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.	I	K3	1	
82.	நந்திவர்மனின் கொடைத்திறம் குறித்து விளக்குக	I	K4	1	
83.	வானுறு மதியை அடைந்ததுன் வதனம் என்ற பாடல் வழி அறியலாகும் செய்திகளை விளக்கி எழுதுக	I	K4	1	
84.	தமிழ் எழுத்துகளின் பிறப்புக் குறித்துத் தமிழ்விடுதூதின் வழி விளக்கி எழுதுக.	I	K4	1	
85.	தமிழ்விடுதூது குறிப்பிடும் தமிழ் மொழியின் சிறப்புகள் குறித்து விவரி.	I	K3	1	
86.	தமிழ்விடு தூது - குறிப்பு வரைக.	I	K3	1	
87.	திருக்குற்றாலக் குறவஞ்சி கூறும் மலைவளத்தை விவரிக்க?	I	K4	1	
88.	திருக்குற்றாலக் குறவஞ்சி கூறும் இயற்கை அழகினை விளக்கி வரைக	I	K3	1	
89.	வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும் என்ற பாடல் வழி அறியலாகும் வாழ்வியல் செய்திகளை விளக்கி எழுதுக	I	K4	1	
90.	திரிகூடமலை அமைவிடம் குறித்து எழுதுக	I	K4	1	

91.	திருக்குற்றாலமலையின் உறவுடைய மலைகளைப் பற்றி விளக்கி எழுதுக.	I	K4	1	
92.	கலிங்கத்துப்பரணி குறிப்பு வரைக.	I	K4	1	
93.	கலிங்கத்துப்பரணி குறிப்பிடும் பாலை நிலக் கொடுமையினை விவரிக்க	I	K3	1	
94.	பாலை நில மரங்களைச் செயங்கொண்டார் எவ்வாறு வருணிக்கிறார்.	I	K3	1	
95.	பாலை நிலத்தில் விலங்குகளை கலிங்கத்துப்பரணி எவ்வாறு சித்தரிக்கின்றது	I	K3	1	
96.	பாலை நிலத்தின் தன்மையை செயங்கொண்டார் வருணிக்கும் விதத்தை விளக்குக.	I	K3	1	
97.	அறிஞர் அண்ணாவின் இலக்கியப்பணிக் குறித்து கட்டுரை வரைக.	II	K3	2	
98.	‘செவ்வாழை’ சிறுகதையின் கதாபாத்திரங்களைத் திறனாய்வு செய்க.	II	K4	2	
99.	‘கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்’ சிறுகதையில் கந்தசாமியின் கதாபாத்திரத்தை மதிப்பீடு செய்க.	II	K4	2	
100.	கி. ராஜநாராயணனின் கரிசல் வட்டார மக்களின் வாழ்வாதாரம் குறித்து ஆராய்க.	II	K4	2	
101.	கடவுளுக்கும் கந்தசாமிப் பிள்ளைக்கும் இடையே நிகழ்ந்த உரையாடலை விவரி	II	K3	2	
102.	கி. ராஜ நாராயணனின் இலக்கியப்பணிக் குறித்து கட்டுரை வரைக	II	K3	2	
103.	புதுமைப்பித்தன் சிறுகதை இலக்கியப்பணிக் குறித்து கட்டுரை வரைக	II	K4	2	
104.	செங்கோடனின் இன்பக் கனவு குறித்து எழுதுக.	II	K4	2	
105.	கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்’ சிறுகதை சுருக்கத்தைச் சொந்த நடையில் எழுதுக.	II	K4	2	
106.	கதவு சிறுகதையில் வருகின்ற கதாபாத்திரங்களின் பண்புநலன்களை விளக்குக.	II	K4	2	
107.	கலைச்சொல் உருவாக்கத்தில் கவனிக்க வேண்டியவற்றை விளக்குக.	III	K3	3	
108.	கலைச்சொல் உருவாக்கத்தில் தவிர்க்கப்பட வேண்டியவற்றை விளக்குக.	III	K3	3	
109.	கலைச்சொல்லின் பரிமாணங்கள் யாவை? விளக்குக.	III	K3	3	
110.	கலைச்சொல்லின் பண்புகளை விளக்குக.	III	K3	3	
111.	அறிவியல் கலைச்சொல்லின் தேவைகளை விளக்குக.	III	K3	3	
112.	அறிவியல் கலைச்சொல்லாக்கம் பற்றிச் சான்றுகளுடன் விளக்குக	III	K3	3	
113.	கலைச்சொல்லாக்க முறைகளை விளக்குக.	III	K4	3	
114.	கடிதம் எழுதுவதற்கான நோக்கங்கள் யாவை?	III	K4	3	

115.	கடித இலக்கியம் - விளக்குக	III	K3	3	
116.	கடிதம் எழுதுவதற்குத் தேவையான பயிற்சிகளை விளக்குக.	III	K4	3	
117.	அலுவலகக் கடிதத்திற்குச் சான்று தருக	III	K4	3	
118.	பேசும் விதம் மற்றும் குரல் தெளிவை விளக்குக.	IV	K4	3	
119.	விளக்கம் தருக. (அ) பேச்சு வகைகள், (ஆ) எழுத்துப் பேச்சு, (இ) எழுத்துப் பேச்சு நடை.	IV	K4	3	
120.	i.அவையச்சத்தையும் அது நீங்குவதற்கான வழிகளையும் விளக்குக	IV	K4	4	
121.	பேச்சை முடித்தலும், நன்றி நவிலலும் எங்ஙனம் அமைய வேண்டும்?	IV	K4	4	
122.	பேச்சினிடையில் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தும் முறை யாது?	IV	K3	4	
123.	எழுத்துகள் எவ்வாறு உருவாகிறது.	IV	K3	4	
124.	உயிரொலிகளின் பிறப்புக் குறித்து விளக்கி எழுதுக	IV	K3	4	
125.	மெய்யொலிகளின் பிறப்புக் குறித்து விளக்கி எழுதுக	IV	K3	4	
126.	உடல் அசைவுகள் அல்லது உடல்மொழிகள் குறித்து விளக்குக	IV	K	4	
127.	கலந்துரையாடலின் பண்புகள் குறித்து எழுதுக.	IV	K3	4	
128.	கலந்துரையாடல் சிறப்புற்று விளங்குவதற்கான வழிமுறையை விளக்குக	IV	K3	4	
129.	பேச்சில் பொருள் விரிக்கும் முறையை விவரி	IV	K4	4	
130.	பேச்சைத் தொடங்கும் முறை குறித்து எழுதுக.	IV	K4	4	
131.	மேடைப்பேச்சின்வகைகளைக் குறிப்பிடுக.	IV	K4	4	
132.	கலந்துரையாடலுக்கு தயாரிக்கும் முறையை விளக்குக.	IV	K4	4	

SECTION – C (15 MARKS)

S. No	Questions	Unit	K Level	CO	PO
133.	சிற்றிலக்கியங்கள் குறித்து கட்டுரை வரைக.	I	K6	1	
134.	கலிங்கத்துப்பரணி குறிப்பிடும் பாலைநிலத்தின் இயல்பினை உவமை வழி விளக்குக.	I	K6	1	
135.	திருக்குற்றாலக் குறவஞ்சி வழி குறத்தின் மலைநாட்டு வளத்தை விளக்குக.	I	K5	1	
136.	தூது இலக்கியம், தமிழ்விடு தூது, தமிழின் சிறப்புகள் குறித்து விளக்குக.	I	K5	1	
137.	தமிழின் பெருமையைத் தமிழ் விடு தூது மூலம் விளக்குக.	I	K5	1	
138.	திருக்குற்றாலக் குறவஞ்சியின் பெயர்காரணத்தைக் கூறி மலைவளச் செய்திகளைத் தொகுத்துரைக.	I	K6	1	

139.	பாலை நிலத்தின் வறட்சியை கலிங்கத்துப்பரணி நூல் வழி விளக்குக.	I	K6	1	
140.	சிறுகதையின் தோற்றம் மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்து கட்டுரை வரைக.	II	K5	2	
141.	'செவ்வாழை' சிறுகதை உணர்த்தும் சமூக அறம் குறித்து கட்டுரை வரைக.	II	K6	2	
142.	'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' சிறுகதை உணர்த்தும் பொருண்மை யாது?	II	K6	2	
143.	'கதவு' சிறுகதை உணர்த்தும் கரிசல் வட்டார மக்களின் வாழ்வியல் குறித்து ஆராய்க.	II	K6	2	
144.	கடவுளும் கந்தசாமிபிள்ளை உணர்த்தும் சமூகச் சிந்தனைகளை விளக்கி வரைக.	II	K5	2	
145.	செவ்வாழை உணர்த்தும் சமூகச் சிக்கல்கள் குறித்து கட்டுரை வரைக.	II	K5	2	
146.	கரிசல் மக்களின் குடும்ப நிலையை விளக்கி எழுதுக.	II	K5	2	
147.	கதவாட்டம் உணர்த்தும் சிறுவர்களின் உளப்பாங்கினை கதவு சிறுகதை வழி கட்டுரைவரைக.	II	K5	2	
148.	கலைச் சொல்லாக்கம் குறித்துக் கட்டுரை வரைக.	III	K6	3	
149.	கலைச் சொல்லாக்கத்தின் வகைகள் மற்றும் பரிமாணங்கள் குறித்து கட்டுரை வரைக	III	K5	3	
150.	கடிதக்கலை குறித்துக் கட்டுரை வரைக.	III	K6	3	
151.	வேலை வாய்ப்பு வேண்டி நிறுவனம் ஒன்றுக்குக் கடிதம் எழுதுக.	III	K6	3	
152.	குறிப்பு வரைக (அ) பேசும் விதம், (ஆ) குரல் தெளிவு, (இ) உடல் அசைவுகள்	IV	K5	4	
153.	பேச்சுக் கலை என்பது அரியகலையாகும் - திறனாய்வு செய்க.	IV	K6	4	
154.	விளக்குக. (அ) அவையச்சம், (ஆ) அச்சம் நீக்கும் வழிகள், (இ) பேசிப்பழகும் முறை	IV	K6	4	
155.	பேச்சுக்கலையின் முக்கிய பண்புகள் குறித்துக் கட்டுரை வரைக	IV	K6	4	
156.	மேடைப் பேச்சுக் குறித்துக் கட்டுரை வரைக.	IV	K5	4	
157.	தமிழ் எழுத்துகளின் பிறப்புக் குறித்துக் கட்டுரை வரைக	IV	K5	4	
158.	பேச்சொலி உறுப்புகள் பற்றி விளக்கி வரைக	IV	K6	4	
159.	பேச்சுத் திறமையை வளர்க்கும் முறையை விளக்கி, தொகுத்து எழுதுக.	IV	K6	4	

K1- Remember; K2- Understand; K3- Apply; K4- Analyze;

K5-Evaluate; K6-Create